உ

கடவுள் துணை

அகஸ்தியமாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# பரிபூரணம்-400



**B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

இதன்விலை] 1934. [அணா 4.

உ

கடவுள் துணை

# அகஸ்தியர் பரிபூரணத்தின் அகராதி


| பெயர் | பக்கம். |
|---|---|
| **அ** | |
| அகாரம் உகாரம் | 38 |
| அகாரஉகாரதீஷைபுராணம் | 63 |
| அதற்குமுறிவு | 20 |
| அப்பிரேகசெந்தூரம் | 46 |
| அயச்செந்தூரம் | 46 |
| அறிவு | 49 |
| அறுகம்வேர்தைலம் | 65 |
| அஷ்டகம்பாவைதம்பனம் | 12 |
| **ஆ** | |
| ஆக்கிராணநசியம் | 66 |
| **இ** | |
| இஞ்சிச்சூரணம் | 57 |
| இமெருந்து | 19 |
| இரசகர்ப்பூரவைப்பு | 23 |
| இரசபற்பம் | 44 |
| இரசகற்பூரக்கட்டு | 36 |
| இரசகற்பூரக்குளிகை | 35 |
| இரசவாதத்திற்குவாலைரசசெந் | 55 |
| இலிங்கக்கட்டு | 35 |
| **உ** | |
| உருவாற்றலை | 18 |
| **க** | |
| கட்டுவாதிமாத்திரை | 34 |
| கண்வியாதிக்குமருந்து | 66 |
| கந்தகத்தைலம் | 63 |
| கயாடலேகியம் | 52 |
| கயாலஞ்சலக்குசவுரித்தைலம் | 62 |
| கருஞ்சூரைச்சூரணம் | 58 |
| கர்ப்பவியாதிக்குஎண்ணெ | 67 |
| கர்ப்பூரசிலாசத்துபற்பம் | 39 |
| கன்மவரலாறு | 40 |
| கன்மந்திர | 41 |
| **கா** | |
| காட்டுச்கருணைச்சூரணம் | 59 |
| காதுமந்தத்திற்கு சிரசில்தேய்க்க த்தைலம் | 64 |
| காதுக் குத்திலைச்சலுக்குதைல | 65 |
| காந்தச்செந்தூரம் | 47 |
| காமகேசரிகுளிகை | 28 |
| **கு** | |
| குப்பிச்செந்தூரம் | 47 |
| குளிர்சுரத்திற்குலேயாழம் | 60 |
| **ச** | |
| சகலமேகஎண்ணெ | 68 |
| சண்டமாருதம் | 19 |
| சத்துருமாரணம் | 20 |
| சத்திவுப்புவழலைப்பெயர் | 15 |
| சர்வசுரகுளிகை | 28 |
| சர்வக்காரவைப்பு | 14 |
| சன்னிருதவாயுவுக்கு | 60 |
| சன்னிக்குத்தைதலம் | 64 |
| சன்னிக்குகலிக்கம் | 66 |
| சன்னிக்குத்தாம்பரகுளிகை | 32 |
| **சா** | |
| சாம்பிராணிபதக்கம் | 33 |
| **சி** | |
| சிரசுரோகபீனசம் சிரச்சூலைக்குத்தயிலம் | 62 |
| சிவயோகிகற்பம் | 62 |
| சிவராஜயோகம் | 70 |
| **சீ** | |
| சீந்திச்சூரணம் | 59 |
| **சு** | |
| சுக்குச்சூரணம் | 54 |
| சுரத்துக்குபஷாணகுளிகை | 29 |
| சுரத்துக்குஅபிமன்குளிகை | 30 |
| சுரத்துக்குவெண்சாரகுளிகை | 18 |
| **சூ** | |
| சூடன்வைப்பு | 24 |

| பெயர். | பக்கம் |
|---|---|
| சே | |
| சேத்மகரத்திற்குகியாழகஞ்சு | 60 |
| (சை) சைவீரவைப்பு | 22 |
| சைவீரவைப்பு | 56 |
| (ஞா) ஞானம் | 21 |
| (தா) தாம்பீரச்செந்தூரம் | 50 |
| தாதுபுஷ்டிக்குளிகை | 27 |
| தாளக்கட்டு | 37 |
| தாளகற்பம் | 37 |
| (தி) திப்பிலிரசாயனம் | 54 |
| திப்பிலிமிளகுசூரணம் | 55 |
| திரிகடுகுசூரணம் | 155 |
| திராக்ஷசூரணம் | 57 |
| திரிகடுகுலேகியம் | 52 |
| திரிபுகை | 19 |
| தூ | |
| தூதுவளைலேகியம் | 53 |
| தூரத்துசெய்தியறியும்மை | 18 |
| (தே) தேத்தாங்கொட்டைலே | 51 |
| (ந) நசியம் | 61 |
| (நா) நாகபற்பம் | 41 |
| நாகசெந்தூரம் | 49 |
| நாடிகீழுமேலும்மீறியோடுவித | 8 |
| நாதவுப்பின்பெயர் | 15 |
| (நூ) நூலின்விபரம் | 6 |
| நூல்கொடாதிருக்க | 71 |
| (ப) பச்சைகர்ப்பூரவைப்பு | 24 |
| பஞ்சநாடியிருக்குமிடம் | 10 |
| பரங்கிப்பட்டைசூரணம் | 58 |
| (பி) பிண்டஅண்டம் | 16 |
| பித்தசுரத்திற்குகியாழம்கஞ்சு | 60 |
| (பீ) பீநசத்துக்குத்திரி | 62 |
| (பு) புருஷநாடி | 8 |
| புருஷநாடிநடக்கும்விதம் | 8 |
| (பூ) பூகமரணம் | 19 |
| பூரணநூலமகுத்துவஞான | 68 |
| (பெ) பெண்ணுக்குநாடிகள் நடக்கும்விதம் | 8 |
| பெருநூற்காவியப்புகழ்ச்சி | 7 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| பெண்ணுக்குஆணுக்குமருந்து | 19 |
| பெரும்பாடுதீரமிளகுலேகியம் | 51 |
| (பே) பேதிமாத்திரை | 32 |
| பேதளம் | 14 |
| (போ) போதகிரி | 70 |
| (ம) மந்தவாயுவுக்குச் சூரணம் | 58 |
| மரணநாடி | 11 |
| (மு) முப்பூவுக்குவிபரம் | 55 |
| முப்பூவின்பெயர் | 15 |
| முப்பு | 14 |
| (மூ) மூதண்டகியாழம் | 64 |
| மூலகிரி | 69 |
| மூலக்கியாழம் இரசவேகாட்டுக்கியாழம் | 61 |
| வசியத்திற்குவிபூதி | 16 |
| வசியக்காப்பு | 17 |
| வசியமை | 17 |
| (வா) வாதசுரத்துக்கியாழம் | 59 |
| வாந்திபேதிக்குச்சூரணம் | 58 |
| வாலைரசவைப்பு | 25 |
| வாலைரசத்திற்குதீரும்வியாதி | 26 |
| வாலைரசத்திற்குஅனுபானம் தீருநோய்கள் | 26 |
| வாலைசஞ்சீவிக்குளிகை | 32 |
| வாலைபேதிக்குளிகை | 32 |
| வாயுவுக்கும்மந்தத்திற்குகெற்பபிணிக்கும்வியாதி | 12 |
| (வி) வித்துவேஷணம் | 14 |
| விநாயகர் காப்பு | 1 |
| வியாதிகளறிய | 9 |
| விஷங்களுக்குக்குழம்பு | 65 |
| (வெ) வெண்காரபற்பம் | 39 |
| வெண்குட்டந்தீரசொர்னபற் | 42 |
| வெள்ளிபற்பம் | 42 |
| வெள்ளைக்குச்சூரணம் | 56 |
| வெள்வங்கபற்பம்நல மூலத்திற் | 40 |
| (வை) வைராக்கிரம் | 7 |
| வைத்தியதருமம் | 97 |


அகராதி முற்றிற்று.

உ

சிவமயம்

அகஸ்தியமுனிவ ரருளிச்செய்த

# பரிபூரணம்-400

## காப்பு.

பூரணமாய்நிறைந்தபரி பூரணத்தைப்போற்றிப்
புகழ்பெரியவயித்திய பூரணத்தைப்பாடக்
காரணமாய்கருவுரு வெங்குந்தானாய்க்
கண்மணியினடுவான கருணை தன்னை
யாரணமாய்முக்கோண நடுவினின்ற
அம்பரத்தையனுதினமு மறிவாற்போற்றி
வாரணமாமுகத்தோனை யனுதினமும்போற்றி
மகததானவேதியனை வணங்கினேனே.

வணங்கிமிகநிற்கையிலே வேதியோனும் வடமொழியைதான்
கொடுத்தேயருளுமீய்ந்தார், இணங்கிமிகபூரணத்தை யிருந்துபார்த்
தேன் ஏகாந்தபூரணத்தின்பங்கண்டு, குணங்கிமிகபோகாமலறிவிற்
கூடிகுருவான பூரணத்தைக்கூர்ந்துபாடி, வணங்கிமிகவேதியன்முன்
வைத்துயானும் வணக்கமாய்கைகூப்பி பணிந்திட்டேனே. 2

பணிந்திட்டயிந்நூலைவேதியனும் பக்குவமாயாதியந்த நன்றாய்ப்
பார்த்து, கணிந்திட்டகருவெல்லா மிதிலேதோன்றுங் கைம்முறையுங்
குருமுறையுமிதிலேதோன்றும், அணிந்திட்டவின்னூலை வைத்துக்
கொண்டு அனுதினமும்பூரணத்தைப்பண்பாய்க்கண்டு, துணிந்திட்ட
வயித்தியமும் வாதஞ்செய்து துரிதமுள்ள யோகமுடன் ஞானம்
பாரே. 3

பாரென்றுசொன்னமொழி பெற்றுக்கொண்டு பதிவானபொதி
யையிலேயிருக்கும்போது, நேரென்றவயித்திய பூரணத்தைப்பார்க்க
நிமிஷத்திற்றென்பொதியிற்சித்தர்வந்து, தேரென்றதென்பொதியிற்
கும்பமூர்த்தி செகச்சோதியானபூரணத்தைப்பார்க்க, மேறென்றே
மேருகிரி தன்னில்வந்தோம் மேன்மையுடனடிமை படைத்தாளென்
றாரே. 4

என்றதொருசித்தர்களைபார்த்துயானு மின்பமுடன்பூரணத்தை
யவருக்கீந்தேன், வம்பருக்குமுலகத்தி லுள்ளபேர்க்கும் வாயாது

வாய்த்தாலும்வழிதோன்றாது, என்றதொருசிவயோகிக் கெய்துமாகி விதிலுள்ளகருத்தெல்லா மெய்துமெய்துங், கண்டுமிவன்காணுமற் கலங்குஞ்சோதிக் கருவிலேயமைத்தபூரணமென்பாரே. 5

பாரப்பாபூரணமாமிந்நூலைப் பாரிலுள்ளோர்க்கீயாதே பதனஞ் சொன்னேன், நேரப்பாபூரணமும் வயித்தியமுஞ்சொன்னேன் நிலையாதகுருநாடிநிலைக்கச்சொன்னேன், காரப்பாபற்பமொடு செந்தூரங் கள் கட்டானமாத்திரைகள் சாக்குவைப்பு, போரப்பாமுப்பூவின் தீட்சைமார்க்கம் பெருநூலின்மறைத்ததெல்லாம் பேசினேனே. 6

பேசினேன்தயிலங்கள்சாயனங்கள் பிலமானலேகியமுங்கியாழத் தோடு, வீசினேன்சகலவியாதியுமேதீர விளம்பினேன்வசியமோடஞ் சனமாமுற்றுந், தூசியிலேதிரிபுசையனந்தஞ்சொன்னேன் துடிவான மாரணமும் வைப்புஞ்சொன்னேன், பாஷையிலேஅஷ்டகர்ம மெட் டுஞ்சொன்னேன், பாரபாத்தின்குறிசொன்னேன் பணிந்துகேளே.

## நூல் விபரம்.

கேளப்பாமூன்றுலட்சங் காப்புசொன்னேன் கிருபையுள்ளவர் தமது இலட்சக்காப்புச், சூளப்பாவயித்திபத்தி லிரண்டுலட்சஞ் சொன்னே னவற்றைக்குறுக்கியிருகாண்டஞ்சொன்னேன், பாளப்பா வதைகுறுக்கிப்பாதியாக அறுநூறுநாலுஞ்சொன்னேன், வேளப்பா திரவகமெண்ணூறுஞ்சொன்னேன் மேதைமுறையந்நூற்றில் வெளி யிட்டேனே. 8

வெளியிட்டவம்பலத்திலே மூன்றுஞ்சொன்னேன் விவரமாய் மூன்னூற்றிற் செந்தூரஞ்சொன்னேன், வழியாகவெண்பதிலே முப் பூவுஞ்சொன்னேன் வயித்தியந்தானுயிரத்தைந்நூறுஞ்சொன்னேன் அழியாதமுன்னூற்றிற்கர்மதர்மம் அன்பாகசொன்னதைநீ யறிந்து பாரு, முழியாதேநானூற்றி லிரண்டுஞ்சொன்னேன் மூடினதோர் நீற்றினமாம்நாலுநூறு. 9

நானூற்றில்வயித்தியமும் பூரணமுந்தோன்றும் நாடியுடன்குரு நாடி தன்றாய்த்தோன்றும், பாலானமுப்பாலு நன்றாய்த்தோன்றப் பாடினேன்வயித்தியபூரணமாமிதப்பா, தேடினுற்கிடையாதிவ் வுல கத்துள்ளே சிவயோகிகிடைத்திருப்பார் கொடுக்கமாட்டார், நாளாக வவர்களிடந் தொண்டுசெய்து நன்மையுடன்நூல்வாங்கி நாட்டம் பாரே. 10

## வைராக்கியம்.

நாட்டமென்று பூரணத்தைக் காணவென்றால் நன்மையுள்ள சற்குருவாற் காணவேண்டும், ஓட்டமென்ற வோட்டமெல்லாம் வோடாதேநீ ஒருமனதாய் சுழிமுனையி லுகந்துநில்லு, ஆட்டமென்றதிரு நடனமங்கே யுண்டு ஐம்பத்தோரெழுத்துமுத லெல்லாமுண்டு, பாட்டைமிகப்பித் தத்தினாலென்னவுண்டு பத்திமுத்திவயிராக்ய மாகப்பாரே. 11

பாரப்பாவுலகத்தில் ஞானமென்பார் பராபரத்தி னிருப்பிடத்தைப் பாரார்பாரார், சாரப்பா உலகத்தில் யோகஞ்செய்வார் சார்ந்திருக்கும் பரஞ்சோதிதன்னைக்காணார், ஊரப்பா கிரியையென்றே யுழவுவார்கள் உத்தமனே உள்ளுயிரை யறியமாட்டார், நேரப்பா சரிதையென்பார் தன்னுக்குள்ளே நெருப்பாறுந்திருக்கோயில் கண்டிலாரே. 12

நெருப்பாறுமயிர்ப்பாலங் கடந்தப்பாலே நினையாத கங்கையடா நீந்தப்போகா, இருப்பார்க ளதுமயமாயாடியாடி இன்பநலம்பற்றாகி யோடி யோடி, குறிப்பாக கண்டவர்க்கே தெரியுமார்க்கம் கோடிரவி சுடர்காந்தி கொண்டவட்டம், வெறிப்பாக பூரணத்தை யறிவார் பார்க்க வெட்டவெளி யாகுமடா குருவைதேட. 13

## பெருநூற் காவியப்புகழ்ச்சி.

குருவானஞானகாவியத்திற்றானுங் கூர்மையுள்ள பூரணத்தின் குறிப்பைச்சொன்னேன், பரிவானசௌமியமாஞ் சுருக்கம்பா பாடினேனைன்னூற்றில் ஞானமெல்லாம், கருவான பூரணமீராறு நூலிற் கருதினேன் ஞானமொடு கற்பமெல்லாஞ், சரியானபெருநூல் காவியத்திற்றானுஞ் சாற்றினேன்மும்பணியின் றன்மைதானே. 14

தன்மையுள்ள சௌமியசா கரத்திற்றானுஞ் சகலமுமே யாதியந்தமாகச்சொன்னேன், முன்னமேகுருநூலாம் பன்னிரண்டுநூறில் முத்தியுள்ள ஞானமொடு கற்பஞ்சொன்னேன், வண்மையுள்ள வயித்திய பூரணத்தை வாழ்த்தினேன் வயித்தியத்தின் வழிதானன்றாய்ச், சொன்னமொழி யெவ்வளவுந் தப்பேயில்லை சோதியென்ற பூரணத்தாற் றுலக்கினேனே. 15

பூரணமா மாதாரந்தன்னினின்ற புரியட்டதசவாய்வின் பேர்தான்கேளு, வாரணமாம் பிரணவனோ டபானன்றானும், மகத்தான வுதானனுடன் சமானன்வியானன், காரணமாநாகனொடு கூர்மன்றானுங் கனமான கிரிக்ரன்கூர் தேவதத்தன் ஆரணமாந்தனஞ்செயனும் பத்துமாச்சு அப்பனே யசைவையினி அறைகிறேனே. 16

அறைகிறேனிடைகலையின் சுழினையாகி அலம்புடையுங் காந்தாரியத்தியோடு, இறையானசிகுவை சங்கினியோடெண்ண இயல்புருடன் குருவென்பார்சோத்திரந்தான், நிறையான நெடுங்தொக்கு சட்சுவையோடு நேர்மையுள்ள சிங்குவையாக்கிரணமாகும், முறையுடனே யிவையறிந்து நிதானங்கண்டு முதன்மையுள்ள குறுநாடியஞ்சுங் கேளே. 17

### புருஷநாடி.

அஞ்சானபத்தான தசநாடிக்குள் அப்பனே ரவிமதியுநெருப்புமாகி, மிஞ்சாதவாதபித்தஞ் சிலேஷ்மமாகி வீரமனமூன்றினிலேவியாதிகாண, நெஞ்சாரக்காணுதற்கு வகையைக்கேளு நேர்மையுள்ள தத்துவத்தை நினைவாய்ப்பார்த்து, செஞ்சாரைப்போலப்பா நாடிதன்னை திறமாகக்காணுதற்கு வகையைக்கேளே. 18

கேளப்பா புருடருக்கு வலதுகையைக் கிருபையுடன்றான் பிடித்து கெட்டைவாங்கி, சூளப்பா பெருவிரலோரங் குலத்துக்கப்பார் சுகமாக மூவிரலா லழுத்திப்பாரு, வாளப்பா முதல்விரலே வாதநாடி வண்மையுட னடுவிரலே பித்தநாடி, தேளப்பா கடைவிரலேசேஷ்ம நாடி திறமாகநின் னறிவாற் றெளிந்துகாணே. 19

### புருடருக்கு நாடிகள் நடக்கும் விபரம்.

காணவேபுருடருக்கு வாதநாடி கானகத்து மயில்போலும் அன்னம்போலுங், தேணவேகோழிநடை நடக்குஞ் சொன்னேன் துரியமென்ற பித்தத்தினடிகேளு, ஏணவேயாமையுடனட்டையைப்போலும் என்மகனே அட்டையைப்போ னடக்குப்பாரு, வேணவேசேத்துமந் தான்பாப்புபோலும் வேணபடிதவளைகுதிப் போலாம்பாரே. 20

### பெண்களுக்கு நாடிகள் நடக்கும்விதம்.

பார்க்கவேபெண்டுகளுக் கிடதுபக்கம் பதிவாகப் பார்த்திடவே பகரக்கேளு, கார்க்கவே வாதமது சர்ப்பம்போலாங் கனமான பித்தமது தவளைபோலாஞ், சேர்க்கவே யையமென்ற நாடிதானுஞ் சிறுநடையாவன்னம்போற் செழிப்பாய்காணும், ஆர்க்குமே தோன்றுமிந்த நாடிமூன்றும் அனுதினமும் நல்லறிவா லறிந்துதேறே. 21

### நாடிகள் கீழுமேலும் மீறியோடும் விதம்.

தேறவே * சந்திரனும்வாதநாடி திறமான சூரியனும்பித்தநாடி, மீறவே யக்கினியும் சேஷ்மம்நாடி விளங்கவேவியாழம திலங்கிமீறும், கூறவேமந்தன்செவ்வி யிரவிமூன்றுங் குணமானசூரியனுங் குமுரியோடும், ஏறவேதிங்கள்புதன் வெள்ளிதானு மின்பமுள்ள சந்திரனுமோடுங் காணே. 22

---

* ஆதிவாரத்தில் விடியற்காலம் சூரிகலை.

திங்கள்விடியற்காலத்தில் சந்திரகலை
செவ்வாய்விடியற்காலத்தில் சூரியகலை
புதன்விடியற்காலத்தில் சந்திரகலை
வளர்பிறைவியாழம் விடியற்காலத்தில்சந்திரகலை
தேய்பிறைவியாழம் விடியற்காலத்தில்சூரியகலை
வெள்ளிவிடியற்காலத்தில் சந்திரகலை
சனிவிடியற்காலத்தில் சூரியகலை

இவ்வித கலைபிங்கலை சுழிமுனை மூன்றுமே வாதபித்த சேஷ்மங்க ளென்பவைக ளவைதப்பினல் வருவனவற்றை உள்ளங்கையிற் கண்டுகொள்க.

வியாதிகளறிய.

காணவே யிரவிலே வாதமோடில் கனமான சளியிருமலிரைப் புண்டாமே, நாணவேசெவ்வாயில் வாதமோடில் நன்மையுள்ள சுரமது தானணுகுஞ்சொன்னேன், தோணவேமாந்தனிலே வாதமோடில் துணிந்தவொரு சீதளமுஞ் சன்னியெய்தும், வேணவேவியாழத்தில் வாதமோடில் விலாவோடு தேகமெல்லாம் வலியுண்டாமே. 23

உண்டான திங்களிலே பித்தமீறில் உத்தமனே சலதோஷ முடனேகாணும், பண்டான புத்தியிலே பித்தமோடில் பாரமுடனீரேற்றந் தலைக்குத்துண்டாம், அண்டான வெள்ளியிலே பித்தமோடில் அப்பனே கண்ணோயுங்காதுநோயாம், கண்டானே குழுவினிலே பித்தமோடில் தண்மையுறுந் தாபசுரந் தலைநோக்காடே. 24

நோக்காட்டை யறிந்துரைக்க வயித்தியற்கு நுண்ணறிவால் சொல்லிவிட்டே னுணுக்கமெல்லாம், பாற்காட்டாற் றெரியாதுபழக்கமாக பார்த்தறிந்தோர் தனையெடுத்துப் பரிவாய்கேளு, கேட்காட்டாற் கிடையாதிவ் வுலகத்துள்ளே கிருபையுடன் மனமுறுதியாக நீயும், வாய்க்காட்டா லிந்நூல்தான் வாய்க்கும்பாரு வண்மையுள்ள குருநாடி வகையைப்பாரே. 25

குருநாடி யிருக்குமிடம்.

பாரப்பாகுருநாடி யைந்துக்குநடுவாய் பாறிநிற்கும் வரலாறு தன்னைக்கேளும், சீரப்பா பித்தத்தின் முன்னேநிற்கும் *திசைநாடி பத்துக்குத் திறமாய்நிற்கும், ஏரப்பாவாதமென்று சொல்வார்மூடர் இருத்தியங்கே பார்ப்பளவில் வேறாய்நிற்குந், தாரப்பாகொண்டகுரு நாடிநேர்மை தனையறிய வகையறிய சாற்றுவேனே. 26

* தசநாடி-திசைநாடி யெனமருவியது.

## பஞ்சநாடிகளிருக்குமிடம்.

சாற்றுவேன் பெருவிரலிற் பூதனுடி சங்கையில்லா ஆள்தூண்டி வாதமென்க, ஏற்றமுள்ள நடுவில்தான் பித்தமாகும் இசைந்ததொரு பவுத்திரமே யையமாகுந், தோற்றுகின்ற சிறுவிரல்தான் பூதநாடி சுக்கமுள்ளகுருநாடி யைந்துட்சேறு, மாற்றுமாகுருநாடி யைந்துட் சேர்ந்து வளர்ந்துநிற்கும் பேர்பெரியவன்மைதானே. 27

பேர்பெரியகுருநாடி குணமேதென்னிற் பிரண்டுவரும் வாய்வு லத்திவட்டைமேல், சீறியவாய்வுமிகு மிருமற்றுேன்றுந் திணவு சொறிமிகவும்வருந் தேகம்வாடுஞ், சூறியபித்தத்தி ல்லாமைபோலத் தோன்றிலேகரமிக்குச் சுழத்துவாய்நீர், கார்பெருகி வருவதுபோல் வியர்வுதோன்றுங் கதித்திடில்நீர்கட்டுஞ் சிலேத்துமத்திற்போமே.

சேத்துமத்திற் குருநாடி சிங்கம்போலே சீறிநிற்கிலதின்குணந் தான்சந்நிதோன்றும், ஆற்பணத்தை யூடுருவத்தமருமாகில் அசாத் தியமாம்ரணகுறி தப்பாதப்பா, காற்றெனவேகுருனுடி குன்றிப்போ கில் கழியும் வயிற்கடுப்பெடுக்குங் கைகால்வீங்கும், யேற்பனவுமில்லை யில்லைதிட்டஞ்சொன்னே மிசைந்தகுருநாடியதை யிருத்திப்பாரே.

பாரப்பாகுருநாடி பக்கம்பாலில் பாரித்த சிலேத்துமந்தானெதி ரேசேரும், கூரப்பாகுருநாடி நேரேநிற்கில் குற்றமில்லை வாதபித்த மிரண்டுசேரும், தாரப்பாகுருநாடி பின்னேவாங்கில் தப்பாதேசாத்தி யங்கள் தானுண்டாகும், காரப்பா உடலுக்கு ளுயிராய்நின்ற கரு வானகருநாடி யொன்றுகாணே. 30

ஒன்றுக்கு மொட்டாத நாடிநேர்மை யூடுருவித் தானிருக்கு முண்மைகேளீர், வண்டுகள்தான் மதுவருந்து நேர்மைபோல வாத பித்த சிலேத்துமத்தின் மதுவையுண்ணும், என்றைக்கு வாதபித்த நடுவேநிற்கும் ஏறுவதுங்குறைவது மில்லையப்பா, கன்றுக்குப்பாலி றங்கும் பசுவைப்போல காத்திருக்குங் குருநாடிகாலைப்பாரே. 31

குருநாடி நிலையறியாக் குருடரெல்லாங் கூட்டமிட்டு சாத்திரத் துக்குவமைசொல்வார், மறுநாடிவாதபித்த சிலேத்மமூன்றின் மத்திய மென்றிதையறிவார் வார்த்தைசொல்வார், கருநாடிகுருநாடி யாகக்கா ணும் கைம்முறையாய் குருதொட்டுக் காட்டத் தோன்றும், பொரு நாடி சாத்திரத்தின் மயங்கிடாதே புலத்தியர்குருநாடி பின்னல்பாரே.

பார்த்தப்பா வாதத்தை நடுவேபார்க்கிற் பண்டதுபோன் மது வுண்ணுமத்தியத்தில், போற்றப்பா மூவிலுமுருவைத்தாண்டி பூரண

மாய் மூலமுதலுருவிப் பாய்ந்து, சாற்றப்பா விசைநரம்பினூடே சேர்ந்து சந்தியமண்டலமேவிச் சார்ந்துபின்னு, நாற்றமூற்ற குரு நாடியெங்குஞ்சுற்றி நடுவில்வரும் நேர்மைதனை நாடிப்பாரே. 33

பம்பரம்போற் குருநாடிகிறுகிறென்று பற்றிநிற்கும் வாதபித்த நடுவிலேதான், அம்பரம்போற் குமுறியெழும் வாதபித்த மைய மென்றநாடி.முதலாடியோடிக், கம்பமுடன் மண்டலமுங் கண்மூன் றுஞ்சுற்றிக் கத்திரிக்கோன் மாறலெனக் கட்டிச்சேர்ந்து, தம்ப முடன்வாதபித்த நடுவிலேதான் தமாதம்போ லாடிநிற்கும் குருவி தாமே. 34

குருநாடிவாதமதுநிற்கும்போது கோழியுடன் அன்னமயில்குறி யாமென்ன, வருநாடி பித்தத்தினிற்கும்போது கோழியுடன் அன்ன மயில்குறியாமென்ன, வருநாடிபித்தத்தி னிற்கும்போது தெரித்து விழும்விட்டிலைப்போற் றெளிந்துகாணும், பொருநாடி சாத்திரத்தி லலையவேண்டாம் பிராணகலைதனை யறிந்துமரணம்பாரே. 35

மரணநாடி.

மாணமதையறிந்ததற்கு குறியைக்கேளு வழுவாத விசைநரம்பு குளிர்ந்துகாணும், குாணமெனும் பொறிகளெல்லாம் தளர்ந்துமெத்த விசைநரம்புதான் றளர்ந்து விரைந்துவாங்கி, நாதறெணப் பற்கடித்து மணியும்கட்டு நாவுலர்ந்து மூச்சயர்ந்து நடுக்கமுண்டாய்த், தூண மெனும் வாதபித்த சிலேத்மமெல்லாஞ் சோத்தியம்பார் விட்டிலை போற் றுடிக்கிற்சாவாம். 36

துடிகொண்ட சேத்துமந்தான் வெள்ளம்போலே சுருசுருக்காய் மடமடென வோடுமாகில், அடிகண்டு மற்றுநாள் மரணமாகும் அப் பனே பித்தமது சிதறியோடில், முடிகொண்ட மூன்றுநாள் சாவார் சொன்னேன் முழுமையுமேவாதமது சிதறியோடில், இடிகண்ட எட் டாநாள் மரணமாவா ரின்பமாய்க்கண்டறிந்து யிடைந்துநில்லை. 37

நில்லப்பாவாதபித்த மிரண்டுங்கூடி நிலைதப்பிச்சிதறியது வோடு மானல், கொல்லுமப்பா பதினைந்துநாளிற்றனுங் குணமாக விதனு டனே ஐயங்கூடி, வெல்லுமப்பா மண்டலத்தில் யாக்கைபாழாம் வித மாகமூன்றுமே ஒன்றாய்கூடி, அல்லப்பா அரணைவால் துடியேகாணில் அப்பனேயவர்பிழை யாசறிந்துபாரே. 38

பிழையாத வாதபித்த சேத்மங்கூடி பிரண்டுவருந் தேள்கொடுக் குப் போலேயோடி, உலையாகவோடம்போ லோடுமானல் உத்தமனே திங்களிலேமரணமாவார், குலையாதநாடியின் மெய்க்குறியைக் காணு

கூட்டமிட்டுக் குருவெனவே பிரசங்கிப்பார், விழியானகண்ணிரண்டு மற்றக்கண்ணும் விதியறிந்தார்சந்நியுமே விலகும்பாரே. 39

சந்நியெழுபோதிலிந்த நாடிமூன்றும் சாதகமாய் சுழல்வண்டு தண்ணீர்மீதில், உன்னியதுபரபரத்தே போருப்போல ஓடியெங்கும் வாதபித்த சேத்மமெல்லாம், கண்ணியது சாதகமாய் வருமேயாகில் கதிப்பாகும் வாதபித்தம் பம்பரம்போல், பின்னியது விட்டிலைப் போற் றெறித்துவீழிற் பேச்சில்லை மரண மென்றே பிரித்துச் சொல்லே. 40

சொல்லப்பா வாய்வுக்கு மந்தத்துந்துக்குந் துணையாக அமர்ந்து மெத்தத்தளர்வாயோடும், அல்லப்பா பசிதனக்குத் தூங்கியோடும் அப்பனே சன்னிதான் புழுப்போலோடும், நில்லப்பா வயிற்றுவலி கண்டபேற்கு நேராகவுள்ளூறவாய் வாங்கியோடும், கல்லப்பா கிரந்தி யென்ற நோய்தனக்குங் கரையுடைந்த வருவியைப்போற் காணுங் காணே. 41

காணிகத்தி வாதமென்றுற் சேத்மவாதம் காணுமடா சூலையென் றுற் சேத்மபித்தம், விரணமுடன் பின்புறைக்கும் வாதபித்தம் விதி யறியாப் பீனசந்தான் பித்தசேத்மம், தாணமுடனீற்பாடு சர்ப்பப் பாடு சொல்லுகிற நாடியெல்லாஞ் சுழன்றுகாணும், சிரணமென்ற பாம்புவிஷந் தாதுவெல்லாங் கெதிகெட்டுக்காணுது கெற்பமாமே. 42

வாய்வுக்கும் மந்தத்துக்கும் கெர்ப்பபிணிக்கும் வியாதிநாடி.

கெர்ப்பிணிக்கு வாதபித்தங் கலங்கிக்காணுங் கிராணியதிசார மென்றுற் றளர்ந்துகாணும், உற்பவித்தகபமீளை காசரோகம் உற்றிடி லோசிலேத்துமந்தான் மீறிக்காணும், பிற்பிடித்த விஷநீருஞ்சோகை பாண்டும் பிலமானுல் வீணைபோல் மீட்டும்பாரு, பற்பிடித்த மேக மென்றுல் பித்தமீறும் பாலகனே கங்கைகொண்டு நீராம்பாரே. 13

நீர்மேகமானவர்க்கு நாடிகாணும் நிர்ணயமாய் நாடியெல்லாம் பிலமேகெட்டுக், கார்மேகம்போலவந்த எரியின்மேலே கண்டுவிழும் புழுப்போலே புறட்டிக்காணும், சீர்மேகமானவர்க்கு நாடிதானுஞ் சீறிநிற்குங்குருனடி திறமாய்த்தானும், பேர்மேகங்கடுத்திடுகில் வாத பித்தம்பின்னியது துடித்துவரும் உற்றுப்பாரே. 44

உற்றதொரு கெற்பிணிக்கு சேத்மபித்தம் உறுதியெனும் விக்க லுக்குச் சேத்மவாதங், மற்றதொருசுரந் தனக்கும்வாதபித்தம் வகை யான கணக்காய்ச்சல் பித்தவாதம், சித்தமுறுந் தலையிடிக்கும் பித்த மாகும் சீரானசயரோகந் தனக்குபித்தம், குற்றமில்லை யதின்குணங் கள் மருந்தாற்றீரும் குருவானபூரணத்தின் குறிதான்பாரே. 45

அஷ்டகாமப்பாவை தம்பனம்.

பாரப்பா பூரணகாவியத்திற்றானும் பாடினேன் அஷ்டகர்மப் பாவைதன்னை, நேரமப்பா அப்பாவைதன்னை நீயும்நினைவாகமனதிலே

நிறுத்திக்கொண்டு சாரப்பாவுன தறிவை மேலுக்கேற்றிச் சந்திரனைச் சூரியனிற்சாரப்பண்ணி, கூரப்பாஅக்கினியிற் கூர்ந்துநின்று குண மானபறவைதனைக் குருவாம்போற்றே. 46

போற்றியேநடுமனையி னின்றுக்கொண்டு பூரணமாய் நயமயன மென்றேயோதி, பார்த்திபனே கருப்பூர தீபம்பார்த்து பாங்காகவிபூ தியைநீ கையில்வாங்கி, நேத்தியாயனுதினமும்பூசிப்பூசி நீயிருக்க வதினுடையநேர்மைகேளு, பார்த்தபேர்சகலருந் தம்பனமேயாவார் பாலகனேபராபரத்தைப் பணிந்துபோற்றே. 47

பணிந்துநின்ற பொற்பாவைதன்னைநீயும் பாலகனேசுழிமுனை யான்மேருக்கேற்று, அணிந்துநின்றுயவசிவயவென்றுநீயும்அப்பனே கர்ப்பூர தீபம்பார்த்து, துணிந்துநின்ற பூதிதனைக்கையில் தாங்கிச் சுத்தமுடன் * லலாடமதிற் பூசிவிட்டால், அனிந்துநின்ற சத்துருக் கள் வசியமாவார் அனைவோருந்தான்வணங்கி நிற்பார்கேளே. 48

* லலாடம் நெற்றி

கேளப்பாபொற்பாவை தன்னைநீயும் கெடியாகக் கேசரத்தில் நிறுத்திக்கொண்டு, வாளப்பாபூரணத்தின் மனதையூன்றி மயநமய வென்றுநீமனதிற்கொண்டு, வேளப்பாகர்ப்பூர தீபம்பார்த்து விபூதி தனை யுத்தளமாகப் பூசிக்கொண்டால், மீகளப்பாயொன்றுமிலலை யெல்லாமோகங் குணமானபூரணத்தின் கிருபையாலே. 49

கிருபையென்ற பூரணத்தாற்பாவைதன்னைக் கொச்சிதமாநடு மனையினுட்டிக்கொண்டு, வருமமுடன்சிவயவசிவென்றுநீயும் மார்க்க முடனகர்ப்பூர தீபம்பார்த்துப், பெருமையுடன்விபூதி யுத்தளமாய் பூசில் பேரானசத்துருக்கள் மரணமாவார், அருபமென்னபூரணத்தி னுண்மையாலே அசையாதநோயெல்லா மகன்றுபோமே. 50

போமப்பாநீபூரணத்தாற்பாவைதன்னைப் புத்தியுடன்சுழிமுனை யிற் கண்டுக்கொண்டு, காமப்பாவசிவசிவவென்றுநீயுங் கனமானகர்ப் பூரதீபம்பார்த்தே, ஓமப்பாவநுதினமும் பூசிக்கொண்டால் உன்னு டைய சத்துருக்களோடிப்போவார், காமப்பால்கொண்டுநிதங் கருவி நின்று கண்மணியாற்சின்மணியைக் கண்டுபோற்றே. 51

போற்றப்பாபொற்பாவைதன்னைநீயும் புத்தியுள்ளவறிவினிடம் பொருந்தவைத்து, பார்த்தப்பாநமநமநயவென்றுநீயும் புத்தியுடன் கர்ப்பூரதீபம்பார்த்துச், சாற்றப்பாவிபூதியை நீலலாடமீதிற் சகலரு மே *யாகிருஷ்ணமாந் தன்னைச்சேர்வார், காத்தப்பா பூரணத்தைப் பார்க்கப்பார்க்கக் கனமாய்கைதான்தீர்ந்து சோதியாமே. 52

---

* ஆகிருஷ்ணம் அழைத்தல்.

### வித்துவேஷணம்.

சோதியென்ற பரஞ்சோதிப் பாவைதன்னைச் சுத்தமுடனுச்சி யென்றமேருக்கேற்றி, நீதியுடவயசிவவென்றுநீயும் நிலத்துக்கர்ப்பூர தீபம்பார்த்தே, ஆதியென்ற விபூதியைநீ கையில்வாங்கி அணிந்து கொண்டால்வேஷ்ணமா மறிவார்பாரு, பாதிமதியணிந்தபரன்கிருபை யாலே பராபரத்தின்குறி கண்டேயறிவாய்நில்லே. 53

நில்லென்றநிலைதனிலே நின்றுக்கொண்டு நிலையாதபொற்பாவை நினைவிற்சேர்த்து, சொல்லுகின்ற மந்திரந்தான் சியவயசியென்று சொல்லுமேகர்ப்பூர தீபங்கொண்டே, அல்லுமே விபூதியையுத்தள மாய்ப்பூச அனைவோரு முனைக்கண்டாற் பேதலிப்பார், வெல்லுமே யட்டகர்மமெட்டுமாடும் விதமாகக்கண்டறிந்து மேலேபாரே. 54

### பேதனம்.

மேலானகும்பத்தை யுற்றுப்பாரு மேன்மையுள்ள மூன்றெழுத்து மொன்றாய்க்காணும், காலானவாசியிட வெழுத்துமங்கே கனமானபிரமாவின் கருணையங்கே, மாலானமாலினிடபதியுமங்கே மந்திரங்கண்மூன்றெழுத்தாம் மறைத்ததங்கே, சேலான செயலறிந்தா லெல்லாமுண்டு செயலறியசற்குருவைத் தேடிப்பாரே. 55

### முப்பூ.

பாரப்பாவின்னமொரு செய்திகேளு பதிவானமுப்பூவை யறியவென்றால், பேரப்பா சொல்லுகிறேன் னன்றாய்க்கேளு பெருமையுள்ளபிறப்பிறப்பு மகற்றுமூலி, வேரப்பாவடிமுடிநடுவுமாகி வேதாந்தசித்தாந்த நாதாந்தமாகி, காரப்பா வலையுடன்புவனையாகி கருணையுள்ள திரிபுரையின் கண்மூன்றாமே. 56

மூன்றான பூநீற்றைச் சலத்திற்கொட்டி மூத்துப்போற் றெளிவிறுத்தை நத்துவகையாச்சு, என்றான வெடியுப்புப்பலந்தானுலு நாட்டதிலேசீனமோடிந்திரண்டே, ஒன்றான சத்திவெட்டுச் சோடசந்தானுத்தமனேகல்வத்தி லிட்டுக்கொண்டு, .சென்றாட்டவெண்கருவிலெருக்கம்பால்வார் சிறந்தபழச்சாறாட்டி யரைத்துப்போடே. 57

### சவர்க்காரவைப்பு.

போட்டதொரக்கச் சூடனெருகாசுபோடு புகழான சாகமெகல்லாஞ்சேரவொன்றாய், கீட்டரைக்கசரமம்ரண்டுக் கதிக்ம்வேண்டாம் நிலையான வில்லிலெசய்து நினைவாய்க்கேளு, காட்டையா ரனிதனிலே

காயப்போடு கனமான சுண்ணாம்புக் குள்ளேவைத்தே, ஆட்டமுட
னடுப்பேற்றி எரிப்பாய்சாமம் அத்தோடே வாங்கிமெல்லப் புடத்
தைப்போடே. 58

புடமெடுத்தேயாறவைத்து பூரணத்தைநோக்கிப் புத்தியுடன்
றானெருக்க வெளுத்துநீரும், குடமெடுத்த கொங்கைமின்னாள்மாலின்
றேவி குதிகொள்வா ளுன்முகத்தில் குறைவொன்றில்லை, கறுவிட்டு
மெத்த சவர்க்காரக் குறுவிதாச்சு வெள்ளாட்டிற் கெதிர்ப்பட்ட
வேங்கையாச்சே. 59

### மூப்பூவின் பெயர்.

வேங்கையென்ற மூப்பூவின் பேர்தான்கேளு வெறித்தசிங்கம்
போரண்டம் வெள்ளைச்சாரை, தாங்கையென சிறுநாகம் பட்சிராசன்
சரக்கான செந்துவிற்குக் காலன்காலன், பாங்கையெல்லாங் கண்ட
வனேவாதஞானி பதிவானவண்டமடா ஆதியுப்பு, ஓங்கியென்றசத்தி
யுப்பு வழலையுப்பாம் உண்மையுள்ளாதவுப்பை வுகந்துகேளே. 60

உகந்துநின்ற வாதமடா வாலைவாலை ஓங்காரறீங்கார ஒருமைப்
பிள்ளை, செகந்தனிலே திருவென்றுஞ் செந்தீயென்றுந் தீட்டான்தீட்
டாகுஞ்செல்வியென்றும், அகந்தனிலே யமிர்தமென்றுஞ் செந்தே
னென்றும் அன்பானவிஷமென்றும் பேச்சியென்றும், முகந்தனிலே
சிந்தூரந் திலர்தமென்றும் மோனமுள்ளவாலைபடாசத்திகேளே. 61

சத்தியென்றவுப்பினிட பேரேதென்றாற் றயங்காத துரிசை
யென்றுங் காரமென்றுஞ், சித்தான கெந்தமென்று மண்தானென்
றுஞ் சிவசிவாவன்மையத் தன்மமென்றும், உத்தியென்ற பாரசத்தி
பெருமைக்காரி யொடுங்காதவாசமுள்ள வியோமசித்தி, கற்றாலும
னப்பதருங் கைகால்கூசும் கருணையுள்ளசத்தியைநீ கண்டாற்றானே.

### சத்தியுப்புவழலைப் பெயர்.

தாணை[illegible]லையிடி பேர்தான்கேளு கருவானவண்டகே சரிதா
னென்று, கோணை கொடிமுடியாம் பொதியிலென்றுங் குருவான
பீடமென்றுங் குருக்களென்றுங், தேணைசோதியென்றுந் தீபமென்
றுந் தெவிட்டாத வமிர்தரச வாக்கியமென்றுங், காணாதபூரணமாம்
வழலையென்றுங் கண்டுபோர்முப்பூவின் கருவிதாமே. 62

ஆமப்பாமுப்பூவு மொன்றாய்க்கூடி யாதியிலே மும்மூர்த்தி
னார்பாரு, காமப்பால் காணற்பாற் சோமப்பாலுங் கலந்துன்ற

மதியுமக்கினியுமாகி, ஓமப்பாமூலமுதலாறுமாகி உடன்சேர்ந்தபொ ருள் தன்னைஉற்றுப்பாரு, தாமப்பா முப்பொருளென் றிதற்பேரு தண்மையுள்ள மூலமுதன்முடிவரையுமெண்ணே. 64

எண்ணவேயின்னம்வெகு பேர்களுண்டோ யென்மகனேபுத்தி யினு லறிந்துகொண்டு, சொன்னதொரு கருமானமேதென்றாலே சொல்லறிந்துசொல்லுகிறேன் பிண்டம்பிண்டம், மன்னவனேபிண்ட மென்றால் மலைக்கவேண்டாம் மந்திரகலை வழலைமலர் பூர்க்குங்காலம், முன்னமேயக்காலமறிந்துமைந்தா முத்திகொண்ட நாதமதில்விந்து மாச்சே. 65

பிண்டம் அண்டம்.

விந்துநிலை யறிந்துவிந்துபாயுங்காலம் வேதாந்த நாதமதுக்குயி ருண்டாகி, சொந்தமுடனேயிரண்டு மணியுமாகிச் சோதிமணியான துவும் பிறையுமாகி, வந்தமதிப் பிறையதுவும் வட்டமாகி வட்டமதி ரண்டுருவாய்மண்ணுமாகி, அந்தமுள்ளமண்ணுதறி உப்பாய்நின்றே யாதியென்றபொருளான பிண்டமாச்சே. 66

பிண்டமென்ற சவர்க்கார வித்தைதன்னை பேருலகிலாரறியப் போறாரப்பா, கண்டவர்கள்கோடியிலே யொருவருண்டு கைம்முறை யாயவர்காட்டிற் குருவுந்தோன்றும், பண்பாகநின்றபூ ரணத்தைக் கண்டாற் பாலகனேமுப்பூவு நன்றாய்த் தோன்றும், விண்டதில்லைக் கண்டவர்கள் சொல்லார்சொல்லார் வீணுகச்சுட்டலைந்துவிதியென் பாரே. 67

விதியானவிதியறிந்தோன் வாதங்காண்பான் விதியறியான்பதி யறியான் வீணன்வீணன், சதியாகமுன்சொன்ன முப்பூவாலே சகல தொழில் கைம்முறையாய்செய்யலாகும், பதியானபதியறிந்தேயமிர்த முண்டு பாலகனேலலாடமதிற் பற்றிக்கொண்டு, கெதியானமோட்ச மெனனின்றாயானுற் கேசரத்திற்கேசரியாள் கிருபையாமே. 68

வசியத்திற்கு விபூதி.

கிருபையுள்ள புலத்தியனே வசியமொன்று கெணிதமுடன் சொல்லுகிறே னன்றாய்க்கேளு, துருவமுள்ளவுருத்திர பூமியிலே சென்று சுகமாகவெந்த அஸ்தி தீயெடுத்துமைந்தா, அருவமுள்ள அஸ்தியுடன் விஷ்ணுமூலி ஆதிசத்தி தன்னுடைய வேருங்கூட்டிக், [illegible]வையினிச்சொல்லுகிறேன் கலசப்பாலாற் கருணையுடன்றானரைத் [illegible]புண்டைசெய்யே. 69

செய்யடா உண்டைதனை யுலரவைத்துச் செம்மையுடனெருவடுக்கிப் புடத்தைப்போடு, மெய்யடா சொல்லுகிறே நீறிப்போகும்வே காந்தமானதொரு நீற்றைவாங்கி, வையடாசவாதுடனே புனுகுசேர்த்து மார்க்கமுடன் அங்கெனவே லட்சமோதி, மையமென்ற நெற்றியிலே விபூதிபூசி மார்க்கமுடன் அரசரிடஞ் சென்றுபாரே. 70

சென்றுமிகநின்றுடனே யிராசமோகம் சிவசிவா செகமோகம் ஸ்ரீவசியமாகும், அண்டர்பிரானருள்பெருகி வசியமுண்டாம் அப்பனே ஓம்கிலியுறீயுமென்று, பண்டுபோலி லட்சமுருவேற்றிப்பின்னர் பாலகனேலலாடமிசைப் பூசிச்சென்றாள், தொண்டரென்றே சத்துருக்கள் வணங்குவார்கள் துஷ்டனென்ற மிருகமெல்லாம் வசியமாமே. 71

## வசியக்காப்பு

ஆமென்ற வசியமொன்று சொல்லக்கேளு ஆதிமுதலான கொடியருகுவாங்கி, ஓமென்றுகண்டித்து மதிவிற்போட்டே உருமையுடன் மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு, நரமென்ற நீரதுவேவநன்றாய்வற்றி நடுவான கொடியதுவும் பதமாய்நிற்கும், தாமென்று தன்மயமா மந்த மூலந் தருவான மூலமதினின் றன்மைகேளே. 72

தன்மையென்ன வெள்ளியுடன் செம்புசேர்ந்து தருவான தங்கமறுமூன்றுமொன்றும் உண்மையுடன் தானுருக்கித்தகடுதட்டி உறுதியுள்ள மூலமதை வைத்துருட்டிச், செம்மையுடன் ரவிவளையம்போலேசெய்து தெரியாமற் பொதிந்ததின்வாய் சேர்த்துக்கொண்டு, நன்மைபெற சற்குருவைத் தியானம்பண்ணி ஞாயிறிலே சத்திமுன்பு வைத்துப்போற்றே. 73

வைத்தெடுத்தாலிவ்வளையம் விளக்கித்தன்னை வலதுகையிற்றான் பூட்டி யிருப்பாயானால், மைத்திகழும்விழியாரும் மன்னர் கூட்டமகத்தான மிருகபுதல் வசியமாகும், மெய்த்தகோளிம் முறைதான் அதிகவித்தை வேதாந்தபூரணத்தில் விண்டமார்க்கம், உற்றதொரு சேதிதன்னை யுலகத்தோர்க்கே யுறையாதே யுரைத்ததினா லுறுதிப் போமே. 74

## வசியமை

போக்கான இன்னமொரு வசியங்கேளு புகழ்பெரிய ஆவின் கோரோசனம் கற்பூரம், வாக்கான * கண்டனிடமூலிவேரும் மகத்தான சந்தனமும் புனுகுங்கூட்டி, தாக்கானமந்திரம் ஓம்ரீங் வசிசர்வ மோகினி வசியமென்றேயோது, தேங்கானதில்லை நடமாடும்போலே செந்துவெல்லாந்தேடி நின்று கதறும்பாரே. 75

* கண்டவிட மூலி விஷ்ணுக்கரந்தை.

பாரப்பாகிராம்பொன்று கூடச்சேரிற் பரைவசியம் ஜெகவசியம் இரண்டுமோடும், நேரப்பா உள்ளங்கை உள்ளங்காலில் நின்றழுக்குஞ் சவ்வாது சேர்ந்துதானல், தேரப்பாமந்திரத்தை யென்னசொல்வேன் திரிலோகமூன்றுமே வசியமாகும், காரப்பா மந்திரத்தை லட்சமோதில் கருவியெல்லாம் வசியமடா கண்டுபாரே. 76

உருமாற்றமை.

வசியமொன்ற மாற்றமென்று சொல்லக்கேளு வால்நீண்டு இருக்கின்ற கரிச்சான்பிச்சு, வசியமென்ற பச்சோந்தி பச்சைப்பாம்புவண்மையுள்ள பாம்பானை பிச்சுங்கூட்டு, வசியமென்ற கரும்பூனை கருங்குரங்கு மார்க்கமுள்ள கண்ணிரண்டு பிச்சுங்கூட்டி, வசியமென்ற யானைகண்கட்டித்தூரில் மார்க்கமுடன்றான் கருக்கிகல்வைத்தாட்டே.

ஆட்டுவாய் புழுகுடனே சவ்வாதுகூட்டி அப்பனே சூதகமாநாதம்விட்டே, ஆட்டியே யானையிட தந்தச்செப்பில் அப்பனே வழித்துவைத்துப் பதனம்பண்ணி, ஆட்டென்றதாம்பரத்திற் சீலைசுற்றி அப்பனே வையாட்டான்மை காணுது, ஆட்டினதோர் மையதனிற் பணம்போல்நெற்றில் அணிந்திடவே நின்னுருவ மாருங்காணுர். 78

காணுதேபோகுமடா மையின்சூட்சங் கருவாக உலகத்தோரறிந்தாராஞல், வீணுகப்போகாது கொலைகள்செய்தார் விருதுபெற்ற சித்தருன்னை வைவாரப்பா, தோணுதமையிதனை வைத்துக்கொண்டு துருவமென்ற ஆயிரத்தெட் டிதழிநின்னுல், காணுதுகருவி தொண்ணூற்றுறுமுன்னைக் கைலாயத்திருநடனங் காணுவாயே. 79

தூரத்துசெய்தியறியுமை.

காணுதற்கேயின்னமொரு கருவைக்கேளு காசினியில் வேறெல்லாங் காய்க்கும்பூக்குந் தோணுதற்குச் சொன்னபலர் வேறேமைந்தா சுத்தமுடன் ருனுலர்த்திநறுக்கிக்கொண்டு, பூணுதற்கு மால்தேவிறுக்கிக்கொஞ்சம் பக்தியுடன்பாம்பாணை பிச்சுங்கூட்டி, ஆணுவத்தான் மூன்றுமொன்ருய் பொடித்துக்கொண்டே வப்பனே அயக்காண்டி தன்னிற்போடே. 80

தன்னிலே பசுநெய்யால் வறுத்துக்கொண்டு சாதகமாய் காகிதத்திற் றுழாவிவைத்தே, உன்னிதமாய் பசுநெய்யா லறைத்துமைந்தா உருதியுள்ள தந்தமென்ற செப்பில்வைத்துத், தன்னிலேயை தானறிந்து தியானஞ்செய்து தன்மையுள்ள வெற்றிலையிற் றடவிப்பாரு, உன்னிதமாய் வெகுதூர முள்ளசெய்தி உறுதியுடன்தோணுமடா வுற்றுப்பாரே. 81

தோணுமப்பா வெளியிலுள்ள வஸ்துவெல்லாஞ் சூட்சுமமாயிம் மைக்குச் சாபமில்லே, காணுமப்பாபாலர் முதல்கிழவர்மட்டுங் கருணே யுள்ள பூரணத்தின் கடாட்சத்தாலே, ஆணுவமாயிம்மையை வெளி யிடாதே ஆதிசத்தி யஞ்சனுதேவிபூசை, பூணுமப்பா மெய்சுருக்கந் தன்னிற்சொன்ன புத்தியுடன் அனுதினமும் பூசைபண்ணே. 82

பெண்ணுக்கும் ஆணுக்கும் மருந்து.

பண்ணப்பா வின்னமொரு கருவைக்கேளு பச்சோந்தி பிச்சுட னேயாடையொட்டி, நின்னப்பா மணுங்கியொடு சீறியநங்கை நிலே யாதவீசுராமா மூலிவேறும், கண்ணப்பா பொன்னூமத்திலேயுங் கூட் டிக் கருவாக குமரியிடாதத்தாலே, நண்ணப்பாமைபோலே யரை த்துநீயு நலமான மிளகதுபோல் குளிகைசெய்யே. 83

இடுமருந்து.

குளிகைதனேச் சிமிள்தனி லடைத்துக்கொண்டு குருவான மனேன்மணியைக் குருவாய்போற்றி, குளிகைதனே தம்பனத்தான் மோகனமோதிக் குணமாகவிந்துதனின் மத்தித்தேதான், குளிகை தனேயறுசுவையி லிட்டாயானல் கும்பிட்டு மதிமயங்கி மோகமாவார், குளிகைதனேக் கொடுத்துவிட்டுமோகியாதே குணமாகப் பொருள் பரித்து யருளேதேடே. 84

சண்டமாருதம்.

அருளான பெண்களிட புருஷர்தானும் அயலாரை மோகித்தே யகல்வாரானல், வெருளாதேயவனுதங் தன்னிற்சேர்த்து வேணபடி யறுசுவையில் தாக்கச்சொல்லு, இருளானவெளியாசை யொழிந்து தல்ல இல்லிடமே வணங்கிமிக இணக்கமாவான், பொருளான பொரு ளப்பா வெளியிடாதே பூரணத்தார் காரணத்தைப்புகன்றிடானே.

திரிபுகை.

புகன்றிட்டே னின்னமொரு வித்தைகேளு புகையான திரி புகை தான் புனிதமாக, அகன்றிட்ட கருங்கழுத்தைச் சடைதானென்று அப்பனே யதின்கஷ்டம் நாயின்கஷ்டம், புகன்றிட்ட தாம்பரத்தின் சீலேயோடு பூநீறுஞ்சவர்க்காரன் சாரங்கெ‌ந்தி, இகழ்ந்திட்ட வெடி யுப்புங் கழஞ்சுவீதம் என்மகனே பொடிசெய்து திரியுலூட்டே. 86

பூதமாரணம்.

ஊட்டியேகருங்கழுதை நெய்யின்மைந்தா உத்தமனே திரிதனேத் துத்தீபமேற்றி, காட்டியேதானவித்துப் புகைக்கும்போது கனமான

பேய்ப்பூதங்காணுதோடும், நாட்டியே துஷ்டதேவதைகளெல்லாம் நாடாமற்கோயில்விடடுக் காட்டிற்குப்போகும், தாட்டிகமாய்ப்பச்சை மரம்பட்டுப்போகும் தன்மையுடனிப்புகையைவெளிவிடாதே. 87

வெளிவிட்டால் உலகத்தில் துஷ்டருண்டு வேடிக்கைபோலவருஞ்செய்து பார்ப்பார், விழிகெட்டகுருடனைப்போர் தெய்வமெல்லாம் வீடுவிட்டுக்காடுறையும் விதியோவென்று, பழிவிட்டுப்போகாதுநின் னையுற்றுப்பத்திரமாயிந் நூலைப்பதனம்பண்ணு, வெளிதொட்டே யொளிகொண்டே ஞானியானல் விஸ்தாரமாகவிதை செய்யார்பாரே.

சத்துருமாரணம்.

பாரப்பா பூதமாரணத்தைச்சொன்னேன் பதியானபுலத்தியனேபகைவரெல்லாம், வீரப்பாதானடங்கிமரணமாக விதமானகருவொன்றுவிளம்பக்கேளு, நேரப்பாசெங் கோட்டைசூதநாபி நெறியானகொளரிவெள்ளைரத்த பாஷாணம், ஆரப்பாகார்முகிலு மெலிப்பகையுக்கூட வப்பனேசங்தொன்றிச்சுனையுங்கூட்டே. 89

சுனையுடனே குருவண்டுங் கழுதைவண்டுஞ் சொற்பெரியவாசப்பிரைபண்ணிரண்டு, இணையாகாஞ்சாடிவீதங்கூட்டி என்மகனே யிராகுவின்றிவிஷத்தாலாட்டிக், கனமானகுழம்புபோல் எண்ணிக்கொண்டு கருணையில்லாச் சத்துருக்கள்காலிற்றாக்கித், தினவாணுலெடுக்குமடாகுழம்பின்வேகந் தீராதசொரியுடனே குஷ்டமாகும். 90

அதற்கு முறிவு.

குஷ்டமொடுகுழிவிழுந்து கரைந்துசாவான் குடிகெடுக்கும்பாவிகளுக்கிதுவேவேண்டும், கஷ்டமுற்றுப்பாவிகள் தான்றிரும்ப வைத்துகாலிலேபணிந்திட்டாலேகருதக்கேளு, மட்டமென்றவருத்துவே பிடித்தான்மைந்தா மார்க்கமுள்ளவெண் குன்றியிலைபலையவ்விதஞ், சட்டமாயரைத்தனை மேலும்பூசிற் றண்மையுடன் றூன்குடிக்கச்சாந்தமாமே. 91

சாந்தமென்றேயிக்குழம்பையுலகத்துள்ளே சகலருக்குஞ்சொல்லாதேசபிப்பார்சித்தர், காந்தளென்றகாந்தறனை விடுத்தோருண்டு கருவான எலியோர்கள் பெரியோருண்டு, வேங்தென்ற வேந்தருண்டு சிசுக்களுண்டுவித்தைசொன்ன குருவுண்டுபெண்களுண்டு, பாந்தமுடனிவர்களுமே குற்றஞ்செய்தார் பதறுதேபதறினதார் பாவமாமே.

பாவமென்ற பாவமதுசெய்யலன்றே பலபேதசாத்திரத்தைப் பார்க்கலன்றோ, தாமென்றதாரசுக்குதோமமாக தன்மையில்லாகோ

த்தாற்றபசுபாழாம், சோபமென்ற பெண்கள்மேல்மோகம்வேண்டா
ஞ்சொந்த மனையிருந்ததனுற் றோஷமில்லை, கோயிலென்றுங் குளங்க
ளென்றுந்தேடவேண்டா குணமாகவுன்னிடத்திற் குறிதான்காணே.

ஞா ன ம்.

காணுதற்கேயின்னமொரு கருவைக்கேளு கருணையுள்ளபுலத்தி
யனேகணிதவானே, பூணுதற்குநவ்வெழுத்தின் மேலேமைந்தாபுத்தி
யுடன்மவ்வெழுத்தார் கிரகந்தோன்றும், பேணுதற்குநவ்வெழுத்தின்
மேலேசென்றால் பிலமாகமவ்வெழுத்தின் கீழதாகத், தோணுதற்குச்
சிவாலயமுந்தியுண்டு சுத்தமுடனவ்விடத்தே கண்டுதேறே. 94

கண்டுமனந்தேர்ந்தந்த நதியின்மூழ்கிக் கமலமலர்சிவாலயத்தை
பூசைபண்ணிச், சண்டமென்றபூரணத்தின்கீழதாகச் சபையானசிவா
லயங்கள் நதிகளுண்டு, கொண்டுநின்ற அநேகதமாமயிர்பாலத்திற்
கொள்ளநின்ற சிவாலயங்கணதிகளுண்டு, வண்டெனவேவாசிமலரத
னையெடுத்து மகத்தான சிவாலயத்தைபூசைபண்ணே. 95

பூசையதுசெய்வதற்குப் பலத்தைக்கேளு புனிதமுடனட்டாங்
கஞ்சித்தியாகும், நேசமுள்ளவட்டாங்கஞ் சித்தியானல் நிலையாகசிவ
யோகநினைவிற்றோன்றும், பாசமில்லாசிவயோகநினைத்தபோதே பரம
குருதேசிகனும்பதியாய்வந்தே, ராசனென்ன சிவராசயோகங்காட்டி
நடுமனையின்வீசைவகைநல்குவாரே. 96

வகையானபரமகுருவருவதேது மார்க்கமுள்ளசரிதைவழிமார்க்
கத்தாலே, திகையாமற்சரிதைவழிநடந்தாயானுற் சிவகிரியை
யதின்வழியேதோன்றும், பகையாமற்கிரியைவழி நன்றாய்ப்பார்த்தா
பாலகனேயோக வழிபரிவாய்த்தோன்றும், நகையாமல்யோகவழி
நன்றாய்ப்பார்த்தால் நன்மையுள்ளஞானவழி நாடும்பாரே. 97

பாரப்பாபுலத்தியனே பிரமக்கியானிபரிவான ஞானமதைபகரக்
கேளு, காரப்பா ஆதாரமூலந்தன்னிற்கனிவான அக்கினிதன்னுவிதன்
னைச், சேரப்பாமுக்கோணசுடரிநின்று திருவாசியானதொருசெங்கண்
மேவிச், சாரப்பாவந்தமனைசொந்தமென்று சங்கையுடன்றானிருந்து
தன்னைக்காணே. 98

காணப்பாமேல்வழியைக்கண்டுகூடிக் கருணையுடனவ்வழியைக்
கலந்துமேவிப், பீணப்பாநிராதாரஞ்சித்தமாகிப் பீமானுய்நின்றவீர
ணமதாகித், தோணப்பாசிவனயன்மால்வீசைசெய்துதொடங்கிநின்ற

தீவினைகளிரண்டுமெற்றும், பேணப்பாபிரபஞ்சத்தாசைபற்றுப் போ ண்டச்சோதியிலே புகுந்துவாழே. 99

புகுந்துமிகவாழ்த்ததனல் பலத்தைக்கேளு புனிதமுடன் பிறப் பிறப்புமற்றுநல்ல, ஜெகச்சோதியாகமதிற்சேர்ந்துவாழ்வாய்திருவான வீரணத்தின்கிருபையாலே, இகழ்ந்துநீமனமொத்துப் பாராவிட்டால் எண்ணவொண்ணுப் பூரணத்தின்மெய்த்துச்சொன்னேன், தகுந்த தொருஞானத்தின்றன்மைகண்டால் சாயுச்சியபதவியிலேசாரலாமே.

சாராமற்காயசித்திசெய்து நீயுஞ்சமர்த்தாகவுலகத்தில் சஞ்சரித் தால், வீரானஆணுவத்தைவிட்டிமைந்தா விருதுபெற்ற சித்தனென் றேவிளக்கமாகத், தாராளமாகநீ சரக்குவைப்புந்தன்மையுள்ளவயித் தியமுந்தானேசெய்து, போராதனுப்பூவாலேவாதங்கண்டு பேரின்ப நிலைகாணப்பெருமைகேளே. 101

சைவீரவைப்பு.

கேளப்பாபச்சையென்றுஞ் சரக்குவைப்பு கெடியானசைவீர வைப்புக்கேளு, நாளப்பாகெந்தகந்தான் பலமிரண்டு நன்மையுள்ள புத்தோட்டிலுருக்கிக்கொண்டு, வேளப்பாசுக்கதிற் பலந்தானெட்டு விட்டதிலேகிண்டையிலேயனல்படாதே, கூழப்பாபோலவுமே அயத் தாற்கிண்டு குணமானரசமது மடிந்துபோமே. 102

போமப்பாகரிபோலே சூதந்தானும் புத்தியுடன் பொடிசெய்து தோண்டிக்கேற்றி, நாமப்பாமறுதோண்டி கவிழ்த்துமூடி நன்மை யுடனுமுந்தரைத்துசீலைசெய்து, தாமப்பாவதின்மேல் மண்சீலையைங் துதளமாகச் செய்ததையுங்காயவைத்து, ஓமப்பாகணபதிகுப்பூசை செய்து உத்தமனேயடுப்பேற்றிமூன்றுசாமம். 103

சாமமடாதீபம்போலெரித்துநீயுந்தன்மையுடன்றுனிறக்கிப்படுக் கப்போடு, நேமமுடனுரினபின்னவிழ்த்துநீயும் நினைவாகமற்றோண்டி யெடுத்துப்பாரு, தாமுடன்மாப்போலயிருக்குஞ் சூதந்தனையெடுத் தறைக்கவுமேகுறையாதப்பா, வாகமுடன்சூதமென்ற மாவுதானும் மைந்தனே பலவெட்டுவைத்துக்கொண்டே. 104

கொண்டதொருவெடியுப்புதுருசுசீனம் குணமான வகைக்கிர ண்டுபலந்நான்கூட்டிக், கண்டதொருநவாச்சாரம் பலமுநாலுகனமா னபூபதியலமதான்றே, உண்டானோரன்னத்தின்பேதிதானும்உத்த மனே பலமூன்று கல்லுப்புத்தான், பண்டையிலேசேர்ந்தாப்போற் பலமிரண்டு பாலகனேகல்லுப்புந் துருசுகேளே. 105

சேளப்பா வெளுக்கவே வறுத்துக்கூட்டுக் கிருபையுள்ள ஏழுத ரக்கு நன்றாயாட்டி, மாளப்பாவாச்சுதஞ்சேர்த்துநீயும் மார்க்கமுடன் றனரைத்துக் காயவைத்து கேளப்பாகாசி யென்றகுப்பிக்குத்தான் குணமாகவைத்துமண்சீலைசெய்து, தாளப்பாவாராமற் காயவைத்துத் தண்மையுள்ளகுப்பியதை மருந்தையேற்றே. 106

ஏற்றியேநாற்சதுரமாடம்போலே இதமான அடுப்புமே கிழக்க தாகப், பார்த்திபனே நீயிருக்க வடக்குத்தானம்பாங்கான அடுப்புமட் டுங் திண்ணைபோட்டுப், போற்றியே புகைபோக மேற்குத்தானும்பூ மிமட்டுந்தரையோடே பொதிந்தவைத்துச், சாத்தியேசாந்தலேநன்று ய்த்தித்திச் சமர்த்தானகணபதிக்குப் பூசைப்பண்ணே. 107

பண்ணப்பாதானுகையில் தாலியொன்று பாங்காக அடிகனத்த பாண்டமேற்றி, நண்ணப்பாபொடிமணல் நால்விரண்மட்டிட்டு நாதா ந்தமனோன்மணியைத் தோத்திரஞ்செய்து, கண்ணப்பாமேல்நோக்கி தீபம்பார்த்துக்கருணையுள்ள குப்பிதனைய தன்மேல்வைத்து,மண்ணப் பா கழுத்தளவுமணல்தானிட்டு மார்க்கமுடன் கமலம்போலெரித்தி டாயே. 108

எரித்திடவேபன்னிரண்டு சாமந்தானும் என்மகனேஎரிக்கும்வி தம்சொல்லக்கேளு, பொரிந்திடவேபகலைக்கேயெரித்துநீயும் பக்தி யுடனிராத்திரிக்கவ்வடுப்போடேவை மறுதினமும்சகலை கண்டெரித் துநீயும் மாற்றிவைக்குமூன்றுநா ளெரிக்கும்போது, முரித்திடவேய னல்வீசவெரித்திடாதே முன்போலநீயெரித்து சிலாகைபோடே.109

சிலாகையிட்டுநீகிண்டிப் பார்த்தாயானல் தீர்க்கமுடன் வெண் மையாக்குப்பிவாயில், நிலாவதுபோல் வெண்மையாய்மூடிக்காணும் நிலவரமாயடியிலேகறுகறுத்து, கலகைமகுசிலாகையிலே தானுமானு ல்கனமானபதமிதெனகண்டுக்கொண்டு, பலதகையிலிருக்காமல் அன லையாற்று பாகமடா அவ்வேளைபரிந்துவாரே. 110

பாரடாகுப்பிதனை எடுத்துநீயும் பக்தியுடன்குளிர்ந்தபின்பு வு டைத்துப்பாரு, நேரடாவீரமதையென்னசொல்வேன்நிசமானபூரண ச்சந்திரனைப்போலே, பேரடாபெற்றதொரு வீரமாச்சுப்பெலமாகமு ள்மருந்திற்பாதிசேர்த்துக், காரடாமுன்போலே மூலிகைசெய்திட்டா ல்கனமானகொச்சியென்ற வீரமாமே. 111

இரசகர்ப்பூர வைப்பு.

வீரமென்றவீரவைப்புகைமுறையாய்ச்சொன்னேன் விருதான பூரணவைப்பைவிளம்பக்கேளு நோமில்லைமுன்செய்தகுதமாவில்நி

த்தெடுத்துநாலுபங்குகுப்பிக்கேற்றி, பாரமில்லாவாலுகையிற்காலம் போலே பதமாகஎரிக்கையிலேயுருகும்பாரு, வோரமில்லையுருகுபதந் தன்னைக்காண உறுதியுடனிருசாமமெரித்துமேலே. 112

மேலாகச்சிலாக்கையிட்டுக்கிண்டிப்பாரு மேன்மையுடன்றானுரு இக்குழம்புபோலாம், காலானசீனமறைபலத்தைத்தானுங் கணக்காக ப்பொடித்ததிலேபோட்டுக்கிண்டி, நாலானசாமமட்டு மெரித்துநீயும் நன்மையுடன் சிலாகையிட்டுப்பார்த்தாயானால், கோலான அடியின் மருந்தில்லாவிட்டால் குருவானபதமென்றுகுணமாயாற்றே. 113

ஆற்றியேகுப்பிதனையடைத்துபாரு அப்பனேவெள்ளையாயிருக் குஞ்சொன்னேன், போற்றியேபூரமதைப்பதனம்பண்ணி புண்ணிய னேயின்னமொருவித்தைகேளு, சாற்றுகிறேன் ஆலாத்திப்பூரவைப் பைத் தன்மையுடன்றானுரைக்கத் தயவாய்க்கேளு, மேற்றோலைப்போ க்கினதோர்முத்தக்காசுவிளங்கியலவங்கமிடைவராகன்பத்தே. 114

* முத்தக்காசு கோரைக்கிழங்கு.

பத்தான சீனமஃதிரண்டுபத்துப் பாங்கானவெடியுப்புநூறுங் கூட்டி, சித்தானகலவத்திற்பொடித்துக்கொண்டு சிவந்தகருவாப்பட் டைத்தயிலம்வாங்கி முத்தானமிச்சாமமரைத்துமைந்தா முறையுட னேபிட்டுபோலுதிர்த்துநன்று, வற்றாதகலங்காலக்குப்பிதன்னில்மா ர்க்கமுடனரைவாசி யடைத்துக்கேளே. 115

கேளப்பாமரக்கல்லாலரைத்துநீயுங் கிருபையுடனெழுசீலைமண் ணுஞ்செய்து, நாளப்பாநன்றாகக்காயவைத்துநாதாந்தவாலை பதநாடி நின்று, வாளப்பாவாலுகையிற்பாண்டம்வைத்து விதமாக ஆறுவிர மணல்தானிட்டு,வாளப்பாகுப்பிதனைமேலேவயிட்டு வன்மையுடன்பா னைரம்பமணலால்மூடே. 116

மூடியேயடுப்பேற்றிக் கமலம்போலே மூற்கமுடனொருநாழியெ ரித்துப்பாரு, நாடியேமணற்சூடு நிரம்பவானால் நன்மையுடன்பாண்ட மதையிறக்கிவைத்துக், கூடியேகுளிரநன்றாயாறவிட்டுக்குருவான குப் பிதனையுடைத்தாப்பாரு, தேடியேயலைந்தாலுமிந்தப் பூரம்தேசத்தில் விபரீதமென்பார்காணே. 117

பச்சைகற்பூரவைப்பு.

காணப்பா இன்னமொரு வைப்புக்கேளு கருவான பூரமடாபச் சைபூரம், பூணப்பாகூடனொருபலமும்வாங்கிப் புனிதமுள்ளவெடிக்

காற்பலந்தான் தோணப்பாவுவருப்புப் பலமறைதான்கூட்டி துரித முள்ளபுனுகுடனேஏலந்தானும், வேணப்பாகஸ்தூரி வகைக்குத்தானும் விளங்கவேயரைகழஞ்சி வேண்டுவாயே. 118

வேண்டியேகல்வத்திலரைத்துநன்றாய் விதமானசந்தனத்தின் தயிலத்தாலே, தோண்டியே புட்டுப்போற் பிசரிக்கொண்டு சுத்தமுள்ள குப்பியரை யிட்டுமைந்தா, தூண்டியே மாக்கல்லால்வாயை மூடி துரிதமுடனெழுசீலைமண்ணுஞ்செய்து, தாண்டியேதாளிரைய மணல்தானிட்டுத் தன்மையுற்றகுப்பிவைத்துமேலுமூடே. 119

மூடியே மணற்செம்மியோடுமூடி மூர்க்கமுடன்சீலைமண் வலுவாய்ச்செய்து, நாடியேரவிதனிலே காயவைத்து நன்மையுள்ள கணபதியை சாடிக்கொண்டு, தேடியே வாலுகையி லேற்றிமைந்தா திறமாகவொருநாமந் தீபம்போலே, கூடியேயெரித்துமெள்ள ஆறவைத்துக் குருபதத்தைதான்வணங்கி யெடுத்துப்பாரே. 120

எடுத்துமிகபார்க்கையிலே யென்னசொல்வேன் இன்பமுள்ள சிறுபொடியாங் தகடுபோலத், தொடுத்துநின்ற தாமரைப்பூ வாசம் வீசுந் துரைத்தனத்தார்க்கேற்ற பச்சைப்பூரமாச்சு, அடுத்துநின்ற பேர்களுக்குமிந்தவாசம் அதிகமுடன்செங்கழுநீர் பூப்போல்வீசும், கடுத்துநின்றநீர்கடுப்பு கல்லடைப்பு கனமானபித்தமெல்லாங் காணுதோடும். 121

### வாலைரசவைப்பு.

காணுத காட்சியெல்லா மிந்தநூலிற் கருதினே னின்னமொரு கருவைக்கேளு, தோணுதவாலைரசம்வைக்குமார்க்கஞ் சொந்தமுடன் சொல்லுகிறேன் சூட்சமாக, வேணமொருசாதிலிங்கந் தன்னைநீயும் விதமாகத்தான் பொடித்துத் தோண்டிக்கேற்றி, நாணுத நன்னாரி வேர்தான்கொஞ்சம நன்மையுடன்பொடிசெய்துகூடப்போடே. 122

போட்டுமேமறுதோண்டி தன்னைநீயும் புனிதமுடன்றன்மூடி பொருந்தவைத்து, நாட்டியே சீலைமண் ணேழுஞ்செய்து நலமாக வுலர்ந்தபின்புநன்மையாக, ஆட்டுமேகணபதிக்கு பூசைசெய்து வ பனேவாலுகையி லேற்றிமைந்தா, காட்டுமே காடாக்கினி யாகத் னுங் கனமாகவொருசாம மெரித்திடாயே. 1

எரித்தந்த அனலிணைத்தேயிறக்கிமைந்தா இன்பமுடன் விட்டே யவிழ்த்துநீயுந், தரித்தமொருமேற்றோண்டி தன்னை மை

தன்மையுள்ள * வராகமுடிதன்னாலேதான், தெரித்துமிகப் போகா மற் றுடைத்துநீயுந் திறமாகப்பார்க்கையிலே சூதம்போலே, பொரு ந்திமிக யிருந்ததொரு வாலேதன்னைப் புத்தியுடன்குடுக்கைதனி லெடுத்துவையே. 124

வாலே ரசத்துக்குத் தீரும் வியாதி

வைத்ததொருவாலேதனைப் பணவிடைக்கால்மைந்தா மார்க்க முடன்விடைத்தலேமேவர் சந்தனத்தில், மெய்த்திட்டமாகநீ பத்து நாள்தான் மேன்மையுடனந்திசந்தி யீந்தாயானால், கைத்ததொரு வகையுடனே புளியுந்தள்ளிக் கனமானயிருபதுநாள் கழிந்தபின்பு, செய்திட்டந்தவறாமல் வோமம்தேய்த்துச் சிவசிவாதலேகுளித்தால் புளியைக்கூட்டே. 125

கூட்டவேதீருகிற வியாதிகேளு கூறுகெட்டசொறிசிரங்கு கிர ந்திநோயும், நாட்டவேபுண்புரைகள் வயிற்றிரைச்சல் நலமானபேதி யுடன் காய்ச்சல்தீரும், பூட்டவேதேகமதிற் காந்தமீறி புனிதமுடன் தாதுவிர்த்திப் பெலமுண்டாகும், வாட்டமாமின்னமொரு அநுபா னங்கேள் மைந்தனேவாலேரசம் விராகன்ரெண்டே. 126

வாலேரசத்திற்கு அநுபானம் தீரும் நோய்கள்.

விராகனிடையிரண்டப்பா பரங்கிப்பட்டை வீரானதிப்பிலியி லவங்கம்ரெண்டு, விராகனிடைநாலப்பா கரும்புவெல்லம் விசையடங் கத்தானரைத்தே யுண்டைகேளு, விராகனிடை முக்காலாயுருட்டி மைந்தா வீறுகெட்டமானிடருக் கேழுநாள்தான், விராகனிடைமுக் காலா யந்திசந்தி விவாமுடன்றான்கொடுத்து மேலுங்கேளே. 127

கேளப்பாபத்தியந்தான் உப்பாகாது கிருபையுடன்பசுவின்பால் கூட்டிக்கொள்ளு, நாளப்பாபதினைந்தா நாளிலேதான் நன்மையுடன் தலேமுழுக்கு மிழுகவாறு, கேளப்பாவொன்றுமில்லே கோழிச்சாறு கூட்டியேபத்தியத்தை முறித்துப்போடு, வேளப்பாவாயெல்லாம் வெந்துகாணும் விதமாகத்தான்றானே யாறுந்தானே. 128

தாந்தானேயாருகையிற் றீறுநோய்கள் தண்மையில்லாமேக வெள்ளே தடிப்புப்புண்கள், நேர்ந்ததொருஅழிகிரந்தி குழிக்கிரந்தி ரோதஅரையாப்பு மேகசூலே, பேர்ந்தானேகால்முடக்கு கைமுடக் ம் பொல்லாதநோய்களெல்லாம் போகுஞ்சொன்னேன், நாந்தானே லேயிடகருணையாலே நன்மையில்லாவியாதியெல்லா நலமதாமே.

---

* வராகமுடியென்பது - பன்றிமயிர்க்கற்றை.

### தாதுபுஷ்டிக்குளிகை.

நலமானயின்னமொரு குளிகைகேளு நன்மையுள்ளவாழைரசங் கழஞ்சிமூன்று, குலமானசாதிலிங்கம் கழஞ்சியொன்று கூறுகிறோம் வெண்காரங் கிராம்புகஞ்சா, தலமானமுருங்கைவிதை சாதிக்காயுந் தண்மையுள்ளசாதிபத்திரி முத்தக்காசு, பிலமான அபின் பூனைக் காலி வித்தும் புண்ணியனேசாரத்தின் பருப்புங்கூட்டே. 130

கூட்டுவாய்பூமிசக் கரைக்கிழங்கு குணமாகவகைக்கரைப் பலந் தான்கூட்டே, காட்டுவாய்பொடிசெய்து தேங்காய்க்குள்ளே நன்மை யுடன்றானடைத்துச் சாணமேற்றிப், போட்டுவிடுபத்தெருவிற் புடந் தானப்பா புண்ணியனே *சிரட்டையது வேகும்போல, ஆடுவா யாறினபின் சிரட்டைநீக்கி யப்பனேமுருங்கைப்பூச் சாற்றினாலே.

முருங்கைப்பூச்சாற்றாலே மூன்றுசாமம் முக்கியமுடன்றானரை த்துக் கழஞ்சிக்காய்போல், நெருங்கவேநீயுருட்டி யுலர்த்திக்கொண்டு நீமகனேயாருண்டை நினைவாய்க்கேளு, நருங்கவேபொடிசெய்து சர்க்கரையிலுண்ண நன்மையுள்ளபுளிதள்ளி சாதமுண்ணு, குருங்கை யென்றபசுவின்பாற் சர்க்கரையுங்கூட்டி குணமாகத்தானருந்திக் கூடுவாயே. 132

கூடுவாய்பெண்களுடன் போகஞ்செய்யில் குணமாகவிந்துதம் பனமேயாகி, நாடுவாயிடுப்புவிட மாட்டாதப்பா நாரியர்கள்சோப மாய் நடுங்குவார்கள், தேடுவாயிடுப்புவிட மாட்டாயாகில் திறமான குளிகையிட திறத்தினாலே, ஓடாமேயுனதுவிந்து விழுந்திடாது உத் தமனேபெண்களெல்லா முறவாவாரே. 133

உறவானகுளிகைதனை யுலகத்தோர்க்கே யுண்மையுடன்றான் கொடுக்கவுறுதிகொண்டு, திறவானபொருளப்பா வேணநீவார் திற மாகவாங்கியதைத் தருமஞ்செய்தால், பரமானபாமரிட பாதங்காட் டும் பரமகுருதான்வருவார் பணிந்தாயானால், நிறமானநிராமயத்தின் ஸ்வரூபங்காட்டி நினைவானயொளிகாட்டி வெளிச்சொல்வாரே. 134

வெளிச்சொல்வார்பொருளாசை யின்மையாலே வேதாந்தகுரு சொல்லி வெளியாய்க்காணும், வளிவளியாவளிதோன்று மிராஜவீ, மற்றவற்றயோகமெல்லாங் குருட்டுவீதி, ஒளிசொல்வேனென் சொல்லி யுலகக்குருவெல்லாம் உன்னிடத்திற்பொருள்பரித்தே ட லெழுத்தைச்சொல்லி, விழியதனைமூடிப்பா ரென்றேபோவார் வி மூடிலொளியங்கே விளம்புவாயே.

---

* சிரட்டை - கொட்டாங்கச்சி.

காமகேசரிகுளிகை.

விளம்புவேனின்னமொரு குளிகைகேளு வீரியமாமதனப்பூ அபின்கிராம்பு, தளும்பாமல்சாதிக்காய் மராட்டிமொக்குத் தங்கபஸ்பம்சாம்பிராணி பதக்கங்கூட, அளம்பாமல்முருங்கையுடன் ஆலரசு அத்தி அதின்வித்தும்மதூமுடன் சமனுய்க்கூட்டிக், குளம்பாக முருங்கைப்பூச் சாற்ருலாட்டிக் குணமாகத்தான்வழித்தே புண்டை பண்ணே. 136

உண்டையதுசிறுசுண்டைக் காய்வீதந்தான் உத்தமனேயனுபானஞ்சொல்லக்கேளு, உண்டையதுபசுவின்பாற் றன்னிக்கொள்ளு உத்தமனேமுருங்கைப்பூ போட்டுக்காய்ச்சி, இண்டையதுமண்டலந்தான் அந்திசந்தி உண்டவர்க்கேயேழானைப் பழமுண்டாகும், உண்டதினுற் ருதுவிர்த்தியதிகமுண்டாம் உத்தமனேயோகியென்ருல் யோகியானே. 137

போகமதுசெய்ததினுல் விந்தருது பூதலத்தில்பெண்களெல்லாம் நடுங்குவார்கள், சோகமதுமெத்தவுண்டாம் பெண்கள்மோகஞ் சோர்ந்துமேமுகந்தளர்ந்து வாடுவார்கள், வேகமதுதீருதற்கு வேறேவேறே விடியமட்டுஞ்செய்தாலும் விந்தருது, பாகமாய்கிருஷ்ணவதாரந்தன்னில் பன்னிரண்டாயிரமென்னும் பாவைமாரே. 138

பாவையரைப்புணர்ந்திருந்தக் குளிகையாலே பாலகனேகாமகேசரியிதப்பா, தேவையில்லையென்ருலும் மனங்கேளாது தெரிவையரைந்நூறுபேர் தினம்போதாது, கோவமின்றிமன்மதனுர் வளைத்தவில்லுக் குமரிகடன்பார்வையப்புங் கொள்ளும்வேகம், பாவையர்களெல்லோரும் வசியமாவார் பட்சமாய்மன்மதன்போல் லீலைசெய்யே.

சர்வரசகுளிகை.

செய்யவேயிம்மருந்தை யுலகத்தோர்க்குச் செப்பாதேயாசருக்குச் செய்துநீயும், ஐயனேபுலத்தியனே யறிவுள்ளோனே அரசரெலாமுனைப்பணிவா ருருமையாகி, மெய்யாகயின்னமொரு குளிகைகேளு மேன்மையில்லாச்சுரங்களது போவதற்குத், துய்யதாய்க் [illegible]ளரியொரு பலந்தானப்பா தூக்கியதைமுலைப்பாலி லூறப் [illegible]ாடே. 140

போட்டப்பாமூன்றுநா ளூறப்போட்டுப் புனிதமுடன்ருனெடு[illegible] யோட்டில்வைத்து, நாட்டப்பாமுலைப்பாலாற சுருக்குத்தாக்கு[illegible]மையினுற்சாம நயந்துநீயும், தோட்டப்பாகௌரியது சுத்தியா[illegible]கிறமையுமோதாளமரை பலந்தான்வாங்கி, கூட்டப்பாசுண்ணும் [illegible]ள்ளேவைத்துக் குணமாகச்சுத்தசலந் தன்னிலூற்றே. 141

ஊற்றியேநீறியபின் னெடுத்துநீயும் உத்தமனே ஏழுவிசைநீற் சுத்தி, தோற்றியேயிரண்டுமொன்றாய்க்கல்வத்திட்டுத் துரிதமுடன் றானரைக்கும்போதிலேதான், கோற்றியேமுலைப்பாலால் நாலுசாமந் திறமாகத்தானரைத்து யுளுந்துபோலே, பார்த்திபனே யுருட்டியதை நிழலுலர்த்திப் பக்குவமாயுலர்த்தியதைப் பதனம்பண்ணே. 142

பண்ணப்பா சுரம்வந்தோர் தனக்குத்தானும் பாங்கானமாத்திரை தானென்றுகேளு, உண்ணப்பாமுலைப்பாலின் மூன்றுநாளும் உறுதியுடனிருவேளை யுண்மையாக, தண்ணப்பா தான்கொடுக்க மூன்றுநாள்தான் தயவானபித்தமெல்லாந்தானேகாக்கும், கண்ணப்பாபித்தமெல்லாங்காக்கும்போது கனமாகசுரங்களெல்லாங் காணாதென்னே.

காணாதுநாலாநாள்வரைக்குமைந்தா கருநாகப்புளியையுந் தள்ளச்சொல்லு, தோணாதுவரையுடன் கத்திரிப்பிஞ்சி சுகமாகத்தான் கூட்டி யுண்ணச்சொல்லு, ஆணான அமோசியங்கள் வந்திட்டாலும் அப்பனேபத்தியங்கள் தவறிட்டாலும், வீணாமிளகதனைக் கியாழம் பண்ணி விரியமாய்த்தான்கொடுக்க மீளும்பாரே. 144

மீளுமேமிளகத்துக்கு முறிவுமாச்சு மிஞ்சாதவாதசுரம் விட்டுப்போச்சுத், தாளுமேபித்தசுரங் குழருங்கூடத் தயவான அய்யசுரமாறல்கூடக், கோளுமேகள்ளசுர மூன்றுமாறல் குடிகெடுத்தகாச்சவிடகுடலந்தீரும், நாளுமே சிரமுதலாய்த் தீருமப்பா நாட்டோர்க்குச்செய்திடவே நன்மையாமே. 145

### சுரத்துக்குப் பாஷாணகுளிகை.

நன்மையாமின்னமொரு குளிகைகேளு நாடாதபாஷாணங் கட்டிவாங்கி, வெண்மையாமெருக்கம்பால் நாலுசாமம் மீறுமற்சுருக்கிடவே சுத்தியாகும், வண்மையுள்ள இலிங்கமதை முலைப்பால்தன்னில் மார்க்கமுடனாற்சாமம் ஊறச்சுத்தி, தண்மையுள்ள வெண்மிளகு மூன்றுமொன்றாய்த் தான்சேர்த்துக்கல்வத்திலரைத்திடாயே. 146

அரைத்திடுவாய் சம்பழத்தின்சாற்றினாலே அப்பனேநாற்சா மமரைத்துநீயுந், திறத்துடனே வுளுந்துபோற் றிரட்டிமைந்தா தி மாகநிழலுலர்த்தி வைத்துக்கொண்டு, பாப்புடனேகுளிர் காய்ச் சகலத்துக்குப் பண்பாக குளிர்ந்தநீர் தன்னிற்றாக்கு, உரைத்து மூன்றுநாளாறுவேளை உத்தமனே தான்கொடுக்க வொழிந்துபோ

போமப்பாபுளியுப்பு மற்றொன்றுகா புலத்தியனே வழுதுணையுந் துவரையாகும், நாமப்பா ஏழாநா ளொன்றுகேளு நன்மையுள்ளமிள கினிட கியாழமீந்து, வேமப்பாஎட்டாநா ளோமந்தேய்த்து வெந்நீ ரான்முழுக்காடி சுட்டபுளிகூட்டுத், தாமப்பா குளிசுரங்கள் தானே தீர்ந்து தண்மையுடன்றானிருப்பார் தயவாய்க்கேளே. 148

கேளப்பாவாந்தியுடன்பித்தமீறில் கிருபையுடன்மிளகுநீர் குடிக் கத்தீரும், வேளப்பா பாஷாணந் தின்றபேர்க்கு விதமாக மிளகொரு சேர்தன்னைவாங்கி, நாளப்பாதானரைத்தேஉள்ளுக்கிய நன்மையுள்ள பாஷாணம்வீறுகெட்டுத், தாளப்பா மலத்துடனே மலமாய்ப்போகுந் தயவானமாற்றறிந்து தனதாய்நில்லே. 149

சுரத்துக்கு அபிமன்னன் குளிகை.

நில்லப்பாஇன்னமொரு குளிகைகேளு நிலையாதசுரங்களது நிவர் த்தியாக, அல்லப்பாஅபினியது விராகனிடையாறு அன்பானசுக்கு மதுவிராகனிடையேழு, நல்லப்பாவிராகனிடை திப்பிலியுமிட்டு நன் மையுள்ளசீரகமு மொன்பதிடைகூட்டு, சொல்லப்பா மிளகுபத்து விராகனிடையாகச் சுகமாகஐந்துமொன்றாய்க் கல்வத்திட்டே. 150

கல்வத்திலரைத்திடுவாய் விஷ்ணுகாந்தி கலமானகியாழமதாய் நாலுசாமம், வலுமைபெறத் தானரைத்துக் குன்றிப்போலே மைந் தனே தானுருட்டி நிழலுலர்த்தி, அலைவுபெற்ற சுரங்களுக்கு மூன்று நாள்தா னப்பனே தான்கொடுக்க வநுபானங்கேள், நலுவைத்தவில்லை யொடுவிஷ்ணுகாந்தி நன்மையுள்ளசீரகம் வெற்றிலையின்காம்பே. 151

வில்லை வில்வம்

காம்புடனே நாலுமொன்றாய்க் கியாழஞ்செய்து கனமானவொரு குளிகை ஆறுவேளை, காம்புடனே தான்கொடுக்க சுரங்கள்தீரும் கருவானகழிச்சலொடு தாபசுரந்தீரும், நாம்பானபெரியோர்க்குஞ்சிறி யோர்க்குமாகும் தன்மையுள்ள பத்தியந்தான் புளியைமாற்று, வேம் பான புளிகூட்டில்வேறொன்றில்லை விதமானகாய்ச்சலது விட்டிடாதே.

விட்டிடாச் சுரங்களுக்கு மூன்றுவகைக்குளிகை விதமாகச் சொன்னதைநீ செய்துமைந்தா, இட்டிடுவாய்ப்பெட்டியிலே பணங் போலே இருத்திவைத்த குளிகைகட்டு முயிருண்டாகும், பட்டி நாட்சென்றாற் குளிகைவேகம் பார்க்குமுன்னே சுரங்களெல் தறியோடும், சுட்டிகள்போல் துடிதுடிக்காய்ச் செய்யவென் மாகக்குளிகையொன்று சொல்லுவேனே. 153

சுரத்துக்கு வெண்காரக்குளிகை.

சொல்லுவேன் லிங்கமொன்றுநாபியொன்று சுகமாகவெண்காரம் திப்பிலியுமிளகும், வெல்லுவேனேர்வாள மாறுவிதமாகச் சுத்தி செய்துசமனாகத்தானுங்கூட்டிக், கெல்லுவேன் பழச்சாற்றால் நன்றாயாட்டி கிருபையுடன்குன்றிபோல் நிழலுலர்த்தி, நல்குவேன்பதனமதாய் வைத்துக்கொண்டு நன்மையுள்ளவாதசுரந் தனக்குக்கேளே.

கேளப்பா மூன்றுநா ளாறுபோது கிருபையுள்ள சர்க்கரையிலுண்ணத்தீரும், நாளப்பாபித்தசுரந் தனக்குத்தானும் நற்சீரகத்திணிடநீரிற்றாக்கு, வாளப்பா சேத்மசுரம் இஞ்சியிலேதீரும் வண்மையுள்ள மூன்றுநாள் கொடுக்கும்போது, தாளப்பா சுரமெல்லாந் தவறுண்டேபோம் தண்மையில்லா பத்தியந்தான் புளியாகாதே. 155

புளியாகும் தின்னதினாற் சுரந்தீராது பூதலத்திற் பேதிக்கே கொடுக்கவென்றால், வளியானமாத்திரைதா னிரண்டுதந்து வண்மையுள்ள மிளகதனை யொன்றுதப்பி, வெளியான மாத்திரையைத் தின்னச்சொல்லு விவரமுடன்துன்மலங்கள் வெளியாய்ப்போகும், ஒளியாத துன்மலங்க ளொழிந்துதானால் உத்தமனே மிளகுநீர் சாதமுண்ணே. 156

சாதமுண்டுசாயங்காலஞ் சுக்குநீர்கேள் சமர்த்தான பேதியது நிரமபவானால், நீதமொன்றுமீமயங்கிப் போய்விடாதே நிலவாவாய்த் துவரையின் பருப்போடொக்க, பாகமென்ற அரிசியிட்டுக் கிச்சடிபோற்பொங்கிப் பதமாகநெய்யூற்றித் தின்னநிற்கும், பேதமொன்றுமில்லையடாவசம்புதன்னைப் பிரியமுடன்கருக்கிடவேபேதமாமே. 157

வாலைசஞ்சீவி குளிகை.

பேதமாயின்னமொருகுளிகைகேளு பிரியமுடன் திரிகடுகுமிலிங்கரோமம், பேதமாம் வெண்காரங் கிராம்புகூட்டிப் பிலமாகவமுமொன்றாய்க் கல்வத்திவிட்டுப், பேதமாம் பழச்சாற்றால் நன்றாயாட்டிப் பெருமையுள்ள உளுந்துபோற்குளிகைகட்டிப், பேதமாநிழலிலேயுலர்த்திக்கொண்டு பெருமையுள்ள சுரங்களுக்குப் புகலக்கேளே.

கேளப்பாதுளசிச்சா றதனிற்றாக்கிக் கிருபையுள்ள நாய்த்துளசிச்சாறுமாகும், கேளப்பா மூலைப்பாலிற் றாக்கினக்கால் குணமாகுஞ் சந்நிசுரம் பாலகர்க்கு, நாளப்பா மூன்றுநாள் கொடுக்கச்சொல்லு நன்மையுள்ள சலதோஷநாடிற்றானால், வாளப்பாவெற்றிலையில்மென். தின்ன வளமான நீர்தோஷ மாறிப்போமே. 1

### வாலைபேதிக்குளிகை.

மாறிப்போம் இன்னமொரு வாலைபேதி மகத்தான குளிகை யொன்று வகையாய்ச் சொல்லுவேன், தேறிப்போ மிளகிடையோ ரைந் தூங்கூட்டித் திறமானசுக்குதிப்பிலியும்ஓமம், கூறிப்போம் ரோகணி யுவ கூர்மாதோடு கோஷ்டமுட னெல்லாமோ ரிடையாய்க்கூட்டி, ஆறிப்போஞ் சுத்திசெய்த வாதிமைந்து அப்பனே பழச்சாற்று லரைத்திடாயே. 160

அரைத்துமேமிளகளவாயுருட்டிக்கொண்டே அய்யனேநிழலுலர்த்திமூலைப்பாவிற்றுன், உரைஃதீயக்குழந்தைகட்குப் பேதியாகும்உத்தமனேசந்நிசுரஞ்சீதசுரங்கூட, இரைத்திடுமேயிடுப்புவலி யுள்ளதெல்லாம் இன்பமுடன் றூன்தீரும் வேணநோய்கள், கரைத்துமே வெந்நீருஞ்சாதமுண்ண கனமானபேதிநிற்குங் கண்டுபாரே. 161

### பேதிமாத்திரை

பாரப்பாவின்னமொரு குளிகைகேளு பாங்கான சாதிக்காயோ மங்கிராம்பு, காரப்பா கரியசீரகமுஞ் சுக்குங் கனமான திப்பிலியுங் கஸ்தூரிமஞ்சள், சாரப்பாவசம்புடனே காயமொக்கச் சரியிடையா யொன்பதுக்குச் சமன்தான்கேளு, மேரப்பா வெள்ளைக்காக் கணத் தின்பட்டை விதமாகதான்கூட்டி வெந்நீராலே. 162

வெந்நீராற்றுனரைத்துச் சுண்டைக்காய்போல் விதமாகத்தானு லர்த்திவைத்துக்கொண்டு, வெந்நீராற் குழந்தைகட் கேழுநாள்தான் விதமாகத்தான்கொடுக்க வுப்பாகாது, வெந்நீராற் சாதமிட்டேயுண் பாரானல் வேண்டியதோர்நோய்தீரும் விளம்பக்கேளு, வெந்நீரஞ் சளியிருமல் கக்கல்காய்ச்சல் மீறிவரும் சுழிகணங்கள் விச்சுழியும் போமே. 163

போமப்பாஅள்ளுடனே சந்நிதோஷம் பொல்லாதவலிப்புடனே விஷசுரங்கள், போமப்பா மந்தமுடன் வயிறுநோயும் பொருமலுட னிரைச்சலுமே போகுஞ்சொன்னேன், போமப்பாவசம்பதனைச்சுட்டு கூட்டுப் போக்கடாபச்சையென்றுல் பேதிரொம்ப, போமப்பா சுட்ட தினல் மட்டாம்பேதி போகுமடா மற்றநோய் புனிதமாமே. 164

### சந்நிக்குத் தாம்பரகுளிகை.

புனிதமுடன் தாம்பரத்தை தூளதாக்கி புண்ணியனே சட்டி யிட்டு வறுக்கும்போது, கனிதமுள்ள புளியாரைசிறு கீரைதானும் துகளவாய்த் தான்போட்டு நாலுசாமம், இனிதமுடன் வறுக்கை யிலேமாண்டுபோகும் என்மகனே யிதில்கழஞ்சியாறுதூக்கி, வளிதமுடன் வாலைரசங் கழஞ்சியாறு வண்மையுள்ள கெந்தியது களஞ்சி றே. 165

ஆறுகுமருந்தெல்லாங் கல்வத்திட்டே அப்பனேசெருப்படிச் சார் விட்டேயாட்டிக், கூறுனமிளகதுபோ லுருட்டிக்கொண்டு குண மாகத் தானுலர்த்திக் குப்பிக்கேற்றி, மீறுமல்வாய்மூடி மண்ணுஞ் செய்து விளங்கவேகாயவைத்துத் தாளிக்குள்ளே, பாறுமல்அங்குல னுல் மணல்தானிட்டுப் பண்பாகக்குப்பிவைத்து மேலேமூடே. 166

மூடியேமணலிட்டுச்சட்டிமூடி மூர்க்கமுடன்மண்சீலை மூணுஞ் செய்து, தேடியேகணபதிக்கு பூசைபண்ணித் திறமாகவாலுகைபி லிரண்டுசாமம், நாடியேகபலம்போ லெரித்துநீயு நலமாகத்தானிறக்கி யாறவைத்துக், கூடியேகுப்புயுள்ளே மருந்தைத்தானுங் குணமாகத் தானெடுத்துக் கல்வத்திலிட்டே. 167

இட்டுநன்றாயரைத்திடுவா யிஞ்சிசாற்றி லென்மகனேபருத்தி விரைப் பிரமாணந்தான், பட்டுநன்றாய்த்தானுருட்டிக் காயவைத்துப் பாங்கானபரணியிலே பதனம்பண்ணிப், பிட்டுநன்றாய்த்துளசிச்சார் தன்னிலேதான் பலமான திரிகடுகு தூளுஞ்சேர்த்து, அட்டிபண்ணு திருபோதுமூன்றுநாளு மடவாகேத்தான்குடிக்க வகலுநோய்கேள்.

கேளப்பாபதின்மூன்று சந்நிதீருங் கிருபையுள்ளதோஷமெல் லாங் கெதிகெட்டோடும், வாளப்பாவசாத்தியமாஞ் சந்நிகூட மைந் தனே தீருமடா மருவிப்பாரு, நாளப்பாவுப்பில்லா பத்தியம்... நன்மையுள்ளபொரியரிசிக் கஞ்சிகொள்ள, தாழ்வப்பாவொருநாளு மில்லையில்லை தண்மையுள்ளசந்நியெல்லாந் தணிந்துபோமே. 169

சாம்பிராணி பதக்கம்.

போமப்பாவின்னமொரு குளிகைக்கேளு புண்ணியனே சாம்பி ராணிமுதற் றரமாய்த்தானு, நாமப்பாபளிங்காக நாலுபலம்வாங்கி நன்றாகப்பொடிசெய்து சட்டியிட்டு, ஓமப்பாமேற்சட்டிக் குள்ளேநீயு முத்தமனேகாகிதத்தை யுருப்போலொட்டி, நாமப்பாமேன்மூடிச் சீலைசெய்து நன்மையுள்ளவடுப்பேற்றித் தீபம்வையே. 170

வைத்தாக்கால்பசுநெய்யாற் றீபமேற்றி மைந்தனேயடிச்சட்டி தூரிற்சூடு, வைத்தக்கால்நாற்சாமம் சென்றபின்பு வண்மையுடனன்று னிறக்கிப் படுக்கப்போட்டு, செய்தவொருசீலைமண் ணவிழ்த்துமெள் ளத் திறமானமேற்சட்டி காகிதத்து, நனைத்தவொருவப்பிரகற் பற் பம்போலே நன்மையுள்ளவாசமதமாய் மணக்கும்பாரே. 17[illegible]

பாரப்பாவப்பூவை யெடுத்துநீயும் பாங்கானவெற்றிலேப்பாக் குண் ணும்போது, நோப்பாமிளகதுவுந் தின்றுவந்தால் நேர்மையுள்ள தாதுவிந்த்தி நிலைக்கும்பாரு, காரப்பாவப்பூவுங் கழஞ்சிரண்டு கன மான கிராம்புபோற் கழஞ்சிமூன்று, கூரப்பாகோரோசனை கழஞ்சி யொன்று கூட்டியரைவெற்றிலையின் சாற்றினாலே. 172

சாற்றினாலிருநாழி யரைத்துமைந்தா தண்மையுள்ளகுன்றி போற் குளிகைகட்டி, ஆற்றிநன்றாய்நிழறனிலே பதனம்பண்ணு அப் பனேதேனி லொருகையீந்தாற், போற்றியேமூன்றுநா ளாறுபோதிற் பொல்லாதசூதகத்தின் சுரங்கடீரும், பார்த்திபனேநெய்மிளகி லீய்ந் தாயானாற் பறந்துபோம்சூதகத்தின் சயங்கடானே. 173

சயமானசர்க்கரையி லேழுநாள்தான் தண்மையுடன்றான்கொடு க்க தயவாய்க்கேளு, மயமானசூதகத்தின் வாய்விநோடு மைந்தனே வுதிரத்தின் கட்டுதீரும், நயமானவெற்றிலையில் மென்றுதின்ன நன்மையில்லாசுகசந்நி நாடாதோடும், பயமென்னபத்தியத்தின் பயமேயில்லை பரமானபூரணத்தின் பதிவுதானே. 174

## கட்டுவாதி மாத்திரை.

தானென்றயின்னமொரு குளிகைக்கேளு தன்மையுடன்சாதிக் காய் சாதிபத்திரி, மானென்றமாசிக்காய் கிராம்புகோஷ்ட மதுரமுட னதிவிடையம் லவங்கப்பட்டை, தேனென்றவில்வுடனே விளாம் பிசினுமொன்றாய்ச் சேர்த்தரைத்துமாதுளங்காய்க் குள்ளேவைத்து, கோனென்றவெண்சீலை பொதிந்துசுற்றிக் குணமாகவதன்மேலே சாணமப்பே. 175

அப்பியேகாட்டெருவிற் புடத்தைப்போடு அண்டையிலேபார்த் திருநீ வாய்வேகாமற், றப்பியேசாணமதுவெந்துபற்றிற் றான்காயில் வேகையிலே தள்ளிக்கொண்டு, ஒப்பியேகவசமொடு சீலைநீக்கி உத்த மனேகல்வத்தி லரைக்கும்போது, செப்பினேனுங்கஞ்சாவின் சாற்று லாட்டி சிறுசுண்டக்காய்போல வுருட்டுவாயே. 176

உருட்டியேநிழலுலர்த்தி வைத்துக்கொண்டு வுண்டையுடன் வடிதயிரிலீய்ந்தாயானாற், றிரட்டையைப்போவிரத்தமுடன் கடுப்புஞ் சீதந் தீராதமூலரத்தந் தீருஞ்சொன்னேன், மிரட்டியேதேனிலிட வதிசாரபேதி மீளுமடாபத்தியமோ புளியுமாகுஞ், சுருட்டிமிள காயைநீ கூட்டிடாதே துடிமெத்தவிரத்தமடா துணிந்துபாரே. 177

இரசகற்பூரக்குளிகை.

பாரப்பாவின்னமொரு குளிகைகேளு பதிவானமுலைப்பாவில் மூன்றுநாள்தா, நேரப்பாவூரினதோ ரசகற்பூர நினைவாகவிராகநிடையஞ்சுங்கூட்டி, காரப்பாமுளைநீக்கி வெள்ளைப்பூண்டு கணக்காகவிராக நிடை யிருபதுமேகூட்டி, சாரப்பாமிளகதுதான் விராகனிடைதானுந் தண்மையுடன்முப்பதுமே தயவாய்க்கூட்டே. 178

கூட்டிடுவாய்வெற்றிலையி னிடைதான்கேளு குணமாகநாற்ப திடை கூட்டிக்கொண்டு, நாட்டுவாய்பூரமதை நன்றாயாட்டி நன்மையுள்ளசரக்கெல்லா மொன்றாய்க்கூட்டி, ஆட்டிடுவாய்வெற்றிலையின் சாற்றினாலே அப்பனேவறுசாம நன்றாயாட்டி, போட்டிடுவாய்சுண்டைக்காய் போலுருட்டி புனிதமுடனிழறனிலே வுலர்த்திக்கேளே.

கேளப்பாவந்திசந்தி யேழுநாளுங் கிருபையுடன்றான்விழுங்கிப் பத்தியமேகாக்க, பாரப்பாவுப்புடனே புளிப்பாகாது பாங்காகவொருவேளை பசும்பால்கூட்டு, நாளப்பாவேழுநாள் சென்றபின்பு நன்மையுடன்வறுத்தவுப்புத் துவரைகூட்டு, கேளப்பாபதினைந்து நாளிற்றானுங் குணமாகத்தலைமுழுகி புளியைக்கூட்டே. 180

புளிகூட்டியோமநீர் விட்டபின்பு புண்ணியனேயெண்ணமிட்டு முழுகும்போது, வளியிட்டவளிக்கிரந்தி லிங்கப்புற்று வகையான சொரிகிரந்தி யோனிப்புற்று, குழிபட்டரிணமாறுங் குழிக்கிரந்தி கூறியதோர்கிரந்தியெல்லாங் குணமதாகும், பழிவிட்டுச்சொன்னதொரு பூரணத்தை பார்தனிலேவிள்ளாதே யின்னங்கேளே. 181

இலிங்கட்டு.

கேளேநீபுலத்தியமகா ரிஷியேயையா கிருபையுள்ளவிலிங்கமொருகட்டியாகத், தாளேநீமுலைப்பாலி லூரப்போட்டுத் தன்மையுடன்பத்தானாள் கழுவிப்பின்பு, வேளேநீவெயிலுலத்தி வைத்துக்கொண்டு விதமானவிடைக்கிடைதான் கர்ப்பூரம்வாங்கு, வாளேநீசாம்பிராணி பளிங்குபோலே வாங்கிடுவாய்முன்போலே வளமாய்த்தானே. 182

வளமானசாம்பிராணி சூடன்கொண்டும் வண்மையுடன்கல்வத்தில் மாளஆட்டி, மெழுகானலென்னசொல்வேன் தீப்பறக்கவூட்டி மேன்மையுடன்வழித்ததைப் பத்துபங்காய், வழுவாமலொருபா கைச் சூலையூட்டி வண்மையுடலிங்கமதை வைத்துருட்டி, நழுவாம விளக்கிலே கொளுத்திப்போடு நன்[illegible]றினபின் னெடுத்து கொள்ளே. 1

எடுத்ததன் மேற்கரியைச் சுரண்டிபோட்டு இன்னமொருபங்கு
தனை சீலையூட்டி, அடுத்துமதி லிங்கமதை யுருட்டிமுன்போல் அப்
பனே விளக்கினிலே கொளுத்தும்போது, பிடித்துமது தானெரித்து
ஆறிப்போகும் பின்பதைதான் முன்போலப் பத்துவிசை செய்து,
தொடுத்துநின்ற கரியெல்லாஞ் சுரண்டிபோட்டு சுத்தமுடன்றேனி
லிடவாய்வும்போமே. 184

போமப்பா திரிகடுகு சந்நிதோஷம் பொல்லாத நெஞ்சடைப்பு
வாய்வுமூர்ச்சை, தாமப்பா வயறுபேதி வயித்திலூதற் றனியிஞ்சிச்
சாற்றிலேதாக்கத்தீரும், வேமப்பாசீலையொடு பித்தபாண்டுவிடபாகம்
வயிற்றுவலி குன்மஞ்சோகை, பாமப்பா கொடுவேலி கியாழத்திய
பறக்குமடா வெகுரோக மறிந்துபாரே. 185

## இரசகர்ப்பூரக் கட்டு.

யறிந்துமே யின்னமொரு கட்டுசொல்வேன் பாலகனே ரசகற்
பூரம் பலந்தானென்று, தெறிந்துமே ஒருகட்டி யாகவாங்கி விதமாக
மூலைப்பாலிற்பத்துநாளும், தெரிந்துநீ ஊரினபின் னுலர்த்திகொண்டு
திறமாக வெள்ளுள்ளிதயிலம்வாங்கி, இருந்துநீமுச்சாமஞ் சுருக்குத்
தாக்கு எடுத்துநீ சுரண்டியதை பின்னுங்கேளே. 186

பின்னுமோ ரோட்டிலே வெடியுப்புத்தானும் பிரியமுடனஞ்சு
பலம் பரப்பிமேலே, முன்னமேசொன்னதொரு பூரம்வைத்து மூர்க்க
முடன் மேலுமவ்வீதமூடி, என்னமோ வென்றுநீ யெண்ணிடாதே
என்மகனே கோழிமுட்டை யுடைத்துமேலே, சொன்னவே அஞ்சு
முட்டையூற்றிமைந்தா சுருக்காகவாசலடுப் பிட்டுகேளே. 187

கேளப்பா கால்நாழி கமலம்போலே கிருபையுடன் றுனெரிக்க
வுப்புப்பொங்கி, வாளப்பா உருகியது நெருப்புபற்றும் மைந்தனே
அண்டத்தின் மகிமையாலே, கேளப்பா மாளுஉப்பு புகைந்திடாது
குழம்புபோலுருகியது கெட்டியாகும், தாளப்பா திறக்கிவைத்துக்
குளிர்ந்தபின்பு தயவாகவுடைத்துமெள்ள வெடுத்துக்கொள்ளே. 188

எடுத்துநீயுள்ளவுப்பு தன்னைநீக்கி என்மகனே சங்கிசுராம் நாவ
ட்சி, தொடுத்துநின்ற மலவாத சந்நிக்கெல்லாம் சுத்தமுடன் அனு
னமறிந்து சேர்த்தே, விடுத்துநின்றலிங்கமுடன் கரைத்துத்தாக்க
முடன்வாதனேய் விட்டுப்போகும், தடுத்துநின்ற கைபாகனன்
ச்சொன்னேம் தயவானபூரணத்தின் றன்மையாலே. 189

தன்மையென்ற இன்னமொரு வித்தைகேளு தயவானதாள கத்தை ரேக்குப்போல, வண்மையுடன் லேசாகக் கிழித்துக்கொண்டு மைந்தனேயரைப்பலந்தா னிறுத்துக்கொண்டு, உண்மையுள்ள கிளிஞ் சியிலே அப்பிரகம் வைத்து உறுதியுள்ள தாளகத்தை யிட்டுமேலே, கண்மையென்ற களிப்பறட்டைக் கீரைசாற்றைக் கனமாகத் தான் பிழிந்துமேலேகேளே. 190

கேளப்பா அப்பிரகத்தட்டால்மூடி கிருபையுள்ள கிளிஞ்சிலதை மூடிக்கொண்டு, நாளப்பாபத்து எருச்சுற்றிவைத்து நன்மையுடன் கீழ்மேல்ரண்டெருவும்வைத்து, தாளப்பாதீமூட்டிப் புகையுமாற்றித் தன்மையுடனெரிக்க கனலெரியும்போது, வேளப்பா குறட்டாலே மேலெருவைநீக்கு விதமானகிளிஞ்சியதி னடுவில்வையே. 191

வைத்தப்பா மேல்நெருப் பெருவால்மூடி மார்க்முடன் பாக் கடிக்குத் திறந்துமெள்ள, உத்தப்பாமேல்நெருப்பு கிளிஞ்சுநீக்கிஉண் மையுடன்றுன்பார்க்க உருகிநல்ல, சுத்தப்பா வில்லாமல் செம்புபோல தானிருந்தா விறக்கியுதன் தூரிற்றன்னில், வைத்தப்பா ஆறினபின் சிவந்துகாட்டும் மார்க்கமுடனப்பிரகந் தள்ளிப்போடே. 192

போடவேகட்டியாய் வைத்துக்கொண்டு புண்ணியனே மூன்று மொன்றுய்க்கூட்டித்தாக்கு, சாடவேசந்நிமுதல் சுரங்கள்தீரும் தய வானதாளகத்தை மீட்டுக்கேளு, கூடவேகிராம்புதிப்பிலி சிற்றரத்தை குணமாக வறுத்துநன்றுய்ச் சாணைதன்னில், போடவே யிழைத்திடு வாய் தேனிற்றுனுந் திறமானதாளக மிழைத்துக்கொள்ளே. 193

கொள்ளவேதீருகிற வியாதிகேளு குடிகெடுத்தபழையசுரங்குத் திரைச்சல், துள்ளவே நந்தியொடு அன்னதிவேஷம் துயரமுள்ள சேத்துமத்தின் சுரங்கடீரும், வள்ளலார்பத்தியமோ விதற்கோவேண் டாம் மைந்தனே புளிகூட்டிச் சோறுமுண்ணு, உள்ளபடி பூரணத் திற்றப்போ இல்லை யுறுதிவெகு உறுதியடா உண்மையாமே. 194

தாளக பற்பம்.

உண்மையுடனின்னமொரு வித்தைகேளு உறுதியுள்ள தாளகத் தின்பற்பஞ் சொல்வேன், நன்மையுடன் வெடியுப்புப் புளியுமொன் றுய் நாட்டமுடன் றுனிடித்து வட்டுபோல, வெண்மையா யோட்டி லிட்டு வாசல்தன்னில் விதமாகவடுப்பிட்டு வனலைமூட்டு, தண்மையுட னேட்டையனல் மீதில்வைத்து தானடுக்கி நின்றுமெள்ளப் பார்த் தார்களே. 195

பார்த்தாலேயனற்கூடு வுரைக்கும்போது பாங்கான வெடியுப்பு பற்றிப்போகும், காத்தாலேவில்லையது கறுத்துக்காணுங் கனமாகப் பொடிசெய்து பீங்கானிலிட்டு, வேத்தாலேகுழி வெட்டிவைத்து மூடி விதமாக மேல்மூடி காற்றுடாமல், பார்த்தாலே மூன்றுநாட் கழிவு கண்டு பாலகனேயொருபக்கந் தண்ணீராமே. 196

தண்ணீராமந்நீரை செந்நீரென்பார் தண்மையுடனு டோறுமெ டுத்துக்குப்பி, அந்நீரையடைத்துவைத்துக் கொண்டுநீயும் அப்பனே தாளகத்தை வைத்துவாட்டி, பொன்னீர்போற் கரியோட்டிற் கருக வாட்டுபுண்ணியனே நவக்கிரகஞ் சிவந்துகாணு, முன்னீரைவிட்டு மேயரைத்துக்கொண்டு மிஞ்சாமலேசாகவில்லை தட்டே. 197

தட்டியே ரவிதனிலே காயவைத்து கனமில்லாவகவிலே சிப்பிச் சுண்ணம் இட்டுமேகீழ்மேலாய் வில்லைவைத்து என்மகனே மண்சீலை யேமுஞ்செய்து, பட்டுமேபத்தெருவிற் புடத்தைப்போடு பாலகனே புடமாறியெடுத்துப்பாரு, நட்டமேவாராது தவளம்போலாம் நன்மை யுடனன்னீரா லரைத்துப்போடே. 198

போடப்பா முன்போலச் சீலைசெய்து புனிதமுடன் பதினைந்து எருவிற்றுனும், நாடப்பா புடம்போடப் பற்பமாகும் நன்மையதால் வெளுக்காட்டால் முன்போலாட்டி, கூடப்பாவிருபதெரு தன்னிற் போடக் குருவான தாளகமும் பற்பமாகும், பாடப்பா பற்பதத்தை பணவெல்லத்திற் பாங்காகபணவிடைகால பருகக்கேளே. 199

பருகவேபித்தசுரம் பித்தவெட்டை பாங்கானபித்தசயம் பித்த காசம், தருகவேமாட்டாது மத்தகாசந் தன்மையுள்ள ஈளைவலிமேக ரோகம், வருகவேமாட்டாது உப்பாகாது மண்டலங்கால்கொண்டுவிட மார்க்கமாக, உருகவே வாதமொன்று மலைந்திடாதே உண்மையுடன் நோய்தீர்ந்தால் வாதமாமே. 200

வாதமென்ற ரசவாத மூலத்தோர்க்கு வாயாது வாசையென்ற வஞ்சகத்தால், போதமென்ற சிவயோகம் பெற்றபேர்க்குப் பூதலத்தி லாசையில்லை வாதங்கட்டும், வேதமென்றவேத வாக்கியமீதாகுமப்பா விருதாவில் வாதமென்றால் விழலாய்ப்போகும், பாதமென்ற பாத மதையறிந்தால்முத்தி பாதைவழிமார்க்கமதை பகரக்கேளே. 201

### அகாரம் உகாரம்

பகரக்கேள் புலத்தியனே தேகம்சித்தி பரமாமுள்ளுயிராய் வாயுமாச்சு, நிகரில்லை ரண்டுமொன்றாய் நிலைத்தால்முத்தி நினைவாக

மவுனத்தின்வீடுகேளு, புகலவே அகாரமதைகீழேதாக்கி புரிந்துநின்றால்உகாரமதைமேலேசேர்த்து, உதரக்கேள்மகாரத்தினடுவேநின்று உற்றுப்பார்பூரணத்தின் ஒளிகாண்பாயே! 202

காணப்பாசத்திசிவம் ஒன்றதாகக் கலந்திருப்பார் ஒருவருமே காணார்காணார், தேன்போலேயருவியங்கே பாயும்வீடு திருவானசுழிமுனையில்திறமாய்நின்றால், தான்போலதானுள்ளே தானேதோணும் தனதாகமுமங்கே தானேதோணும், வீணப்பாவலைந்து கெட்டுத் திரியவேண்டாம் விபரமாயின்னமொரு பாகங்கேளே. 203

## கற்பூரசிலாசத்துப் பற்பம்.

கேளப்பாசிலாசத்துயார்தான்காண்பார் கிருபையுள்ள கர்ப்பூர சத்துவாங்கி, நாளப்பாசுத்திசெய்துகல்வத்திட்டுநன்மை சிறுசெருப்படையின்சாற்றாலாட்டி, கேளப்பாலேசாகபில்லைசெய்து குணமாகக் காயவைத்துவோட்டில்வைத்து, தாளப்பாசீலைமண் மிதமாய்ச்செய்து தன்மையுடனைம்பதெருப் புடத்திற்போடே. 204

போட்டுமேஆறவிட்டு முன்போற்போடு புண்ணியனேமூன்றுவிசை யரைத்துப்போட்டு, நாட்டுமே வெண்மையுமாய்ப் பற்பமாகும் நன்மையுடன்மேலெரிவு பித்தவெட்டை, காட்டுமே பசுவெண்ணைதன்னிலீயக் கனமானநீர்கடுப்புக்காணாதோடும், பாட்டுமேபத்தியங்களுண்டோவில்லை பாலகனேபற்பமுறையறிந்துபாரே. 205

## வெண்கார பற்பம்.

பாரப்பாகற்பூரச்சிலையின்பற்பம் பாங்காககழஞ்சிரண்டு அகலிவிட்டு, நேரப்பாவதின்மேலே நினைவாய்க்கேளு நினையாத வெண்காரஞ்சுத்திசெய்து, தாரப்பாகழஞ்சிரண்டு இட்டுமேதான் தயவாகமேலுமேகாரமிட்டு, காரப்பாஅகல்மூடிச் சீலைசெய்து கனமாக மூனெருவிற்புடத்தைப்போடே. 206

போடப்பாஆறினபின் னெடுத்துக்கொண்டு பொல்லாதநீர்க்கட்டுநீர்க்கடுப்பு, தேடப்பாவெண்ணையிலே யீய்ந்தாயானால் தீருமடா கல்லடைப்புத் தீரவென்றால், நாடப்பா வராலினிட தலையின்கல்லு நன்மையுள்ள வெள்ளரியின் விரையின்சாறு, கூடப்பாபற்பமுட[illegible] கலக்கிக்கொள்ளக் குடிகெடுத்தகல்லடைப்புக் குணமதாமே. 2[illegible]

குணமாகமாட்டாமல் கல்லடைத்துக்கொண்டால் குவலையத் [illegible] குன்னையுமே நகைசெய்யாமல், குணமாகவின்னமொரு சம்பிரதா[illegible] கூறுகிறேன் முள்ளங்கி யிடித்தசாறு, குணமாகக்காற்படியிற்

விடைகால்பற்பங் கூட்டியேதான்கொடுக்கக் கல்லும்வீழ்ந்து, குண மாகுமுள்ளங்கி ஆண்மையப்பா கூறுகவின்னமொருபற்பம்பாரே.

### வெள்வங்கபற்பம் நவமூலத்துக்கு.

பாரப்பாவின்னமொருபற்பங்கேளு பாங்கானவாலைரசங்கழஞ்சு மூணு, நேரப்பா அதினிடைக்கு வெள்வங்கந்தான் நேர்த்தியாய் தொந்தித்துக்கல்வத்திலிட்டி, சார்பாககற்பூர சிலாசத்துதானுந் தய வாகக்கழஞ்சியது மூன்றுங்கூட்டி, காரப்பா அறைத்திடுவாய் சுண்ண நீரால் கடுவாகப்பில்லைதட்டி காயப்போடே. 209

காய்ந்தபின்பு ஓட்டிலிட்டுச் சீலைசெய்து கருணையுடன் முப்ப தெருபுடத்தைப்போடு, ஆய்ந்துநன்றாயாறியபின் னெடுத்துமைந்தா அப்பனேமுன்னீரா லிரண்டுஜாமம், பாய்த்துநன்று யரைத்துபில்லை ரவிற்போடு பாங்கான வோட்டிலிட்டு சீலைமண்செய்து, மாய்ந்து விடுமைம்பதொருபுடத்துக்குள்ளே மல்லிகைப்பூநிறம்போல வெண் மையாமே. 210

வெண்மையென்ற வெள்வங்கபற்பந்தன்னை விதமானபணவிடை தானனுபானங்கேள், வண்மையென்றமாதளம்பூ விதழ்தான்மைந்தா மார்க்கமுடன் ரண்டுபலம்நிழலுலர்த்தி, நன்மையென்றசீரகம் அவ் விதங்கூட்டி நலமானசூரணந்தான் பணவிடைகால்கூட்டி, உண்மை யுள்ளபசுநெய்யி லிரண்டுவேளை உண்டிடவேமண்டலத்தி லுள்மூலந் தான். 211

உள்மூலவெளி மூலமிரத்தமூலம் உண்மையில்லாமெய்நோயும் எலும்புருக்கி, வெள்மூலஞ் சீழ்மூலமேகமூலம் விதமானசளிமூலம் பித்தமூலம், நள்மூல மொன்பதுமேதீர்ந்துநல்ல நாடிகளுந்தான் வலுத்துத் தாதுவுண்டாம், வெள்வங்க பற்பமடா பத்தியந்தான் வேண்டாம் விதமானஉளுந்துமொச்சை பூசனிக்காய்நீக்கே. 212

### கன்ம வரலாறு.

நீங்காதமூலநோய் கன்மத்தாலே நிலைகெட்ட அபானத்தில் செருப்போமீறி, வாக்காலே அபானத்தின்வாசல்தன்னில் வந்துமூளை மேகத்தால்சூட்டால்காணும், தாக்கோலாலடைத்தாப்போல் வாயு நின்று தண்மையுள்ளமலமதனை வாட்டிதீய்த்துப், பேய்க்கோலம் பண்ணுமடா மூலரோகம் போனபழவினைக ளின்னங்கேளே. 213

பழவினையால் விஷப்பூச்சி கடித்ததோஷம் பாதகர்க்கு வொரு [illegible]ளுந்தீர்வதில்லை, உளவினையாலுடாடிக் கொள்ளவந்த உண்மை [illegible]து அறியாமல் மூர்க்கஞ்செய்வார், களவினையுந் தீர்வதில்லை கடி [illegible]மெத்த கருணையுள்ள பூரணத்தில் கண்டகாட்சி, அளவினைநீ [illegible]னுமுன்னே அகலச்சொல்லு அடையாளம்விரல்குறுகு மின்னங் [illegible]ளே. 214

விரல்குறுகுங் கால்நிமிறும் விஷம்போலேறும் மெய்யழுந்துந் தலைசுழலும் வெளுக்குமேனி, பரமானதேகமெல்லாந் தடித்துக்காணும் பாதமல்லாம்வெடித்துமிகப் புண்ணுங்காணுஞ் சரசமுடன் செறிகரப்பான் பணம்போல்தோணுஞ் சாந்தையமேவிந்தை கெடுத் தடித்துவீங்கும், நாருலகிலிந்நோய்க்கு மருந்தீயாதே நல்லோரைப் பழிக்குஷ்டங் கன்னமாமே. 215

நல்லோர்கள் பெரியோர்கள் நடத்துஞ்செய்கை நாட்டிலுள்ள துர்ச்சனர்கள்நகைத்தலாலே, பொல்லாத விஷக்கடிநீர் பற்றிவந்து பொன்னுனதிரேகமெல்லாங் குஷ்டம்போலே, சொல்லாதபடிவிஷங் கள்குன்மம்பாண்டு துயர்தீராக்கன்ம வினைசெய்தபாவம் எல்லாரு நகைக்கவுடம்பெடுத்தபாவி இன்னமுண்டு விபரமதாயிலகிக்கேளே.

உலகுதனில் செவிடூமை குருடர் தாமு மூக்குமுள்ள சப்பாணி மூக்கில்லாதார், நலகுமதுவிஷக்கடிநீ குன்மம்பாண்டு நாடிவரும்பெரு வயிறு கவுசியீளை பிலக்குமதை பெரியோரைக் கற்புள்ளோரைப் பேதமில்லாச் சிவஞானப்பொருளுள்ளோரை தலைகவிழவவரவர்கள் தனைத் தூஷித்தோர்கள் சண்டாளரிந்நோயால் தயங்குவாரே. 217

### கன்மந்தீர.

தயங்காமல்தீருதற்கு வகையைக்கேளு தன்மையுள்ளவருஷமது தகையுங்காலம், நயங்காமலாடியமாவாசையன்று நன்மையுள்ள தெளி நீரில் ஸ்நானம்பண்ணி, முயங்காமற் சிவதலத்தைக் கோறிவந்து மூத்தியுடனுயிரம்பேர் வேதியர்க்கு, சுயம்பாகத் தான்கொடுத்து நவக்கிரகந் தன்னைத் தோத்தரித்து அட்சதையும் வாங்கிக்கொள்ளே.

தாங்கியேபொதிகைக்குத் தென்கிழக்குமலை வரிசையுள்ளவா னுமாமலைக்குச்சென்றால், தூங்கியேயானைமேற் பள்ளிகொண்ட சுவாமியிடசந்நிதியில் தியானஞ்செய்து, வோங்கியேநூறுபேர் பிரா மணர்க்கு வுத்தமனே சுயம்பாகங் கொடுத்துநீயுந், தேங்கியே யுதக மென்றகிரணங்கண்டு திறமாக ஒருசெம்பு நெய்யைவாரே. 219

வார்த்துமேமறுசெம்பு தயிலமொண்டு மைந்தனேவேடுகட்டிக் கொண்டுபோய்நீ, ஆற்றுமே யந்திசந்தி காசிடையாய்க்கொள்ள அப்பனே திங்களது மூன்றுக்குள்ளே, தோற்றுமேதேகமது பொன் போலேதான் துயரான கன்மநோய்தூரவோடுங், காத்துமேத் தயி லங்கொள்ளாவிட்டால் கன்மநோய்தீராது யின்னங்கேளே. 220

வெண்குட்டந்தீரச் சொர்ணபற்பம்.

இன்னங்கேள்புலத்தியனே யிராஜயோகிக் கின்பமுள்ள சொர்ணபற்பமிதமாய்ச்சொல்வேன், முன்னமேமுள்ளிக்கீரைச்சாற்றிலே தான் மூன்றுநாளூரவைத்துபொடியாய்ராவி, சொர்னமதைகல்வத்திலரைக்கும்போது சித்திரபாலாடையது சிவந்தசாற்றில், நன்னையமாய்மைபோலே யரைத்துபில்லை நலமாக ரவியுலர்த்தி நலமாய்க் கேளே. 221

சித்திரப்பாலாடை அம்மான்பச்சரிசி.

கேளப்பாகடம்பினிலை யரைத்துமைந்தா கிருபையுடன்பில்லை மேல்கவசங்கட்டி, கேளப்பாவகலில்வைத்துவோட்டால் மூடிக்குணமாகச்சீலைமண்ணேழுஞ்செய்து, தாளப்பாநூறெருவிற் புடத்தைப் போடு தண்மையுடன் ஆறினபின் தவளம்போலே, வேளப்பாவெண குட்டந்தீருதற்கு விதமானவநுமானம் விளம்பக்கேளே. 222

விளம்பவே சவுரியிலைச்சாறுதானும் விதமாகத்தனிசாறுய்படி தானெட்டு, தளும்பவேவெயிலிவிட்டு மெழுகுபோலே தான்வற்றிற் கலந்தயிடை யாடாதோடை, குளம்போடே யிலையறுத்து மெழுகு போலே கூட்டியளற்புனுகு பலந்தான்கூட்டி, துளும்பவேசொர்ன வற்பங் கழஞ்சிரண்டு தூக்கியதில் போட்டரைத்து நெல்லிக்காய் போல். 223

காய்போலே யுருட்டியதை யிளம்பதமாயுலர்த்திக் கனமான எள்ளிலிட எண்ணெயிலேபோட்டு, தாய்போலேயோருண்டை யந்திசந்தி தண்மையுடனரைவருஷந்தயவாய்க்கொள்ள வாய்போலேவெளுத்தகுட்டந்தீர்ந்துபோகும் வண்மையுள்ளபத்தியஞ்சையோகமாகா பேய்போலே காமப்பேய் கொண்டபேர்க்குப் பெருமையுள்ள சொர் பற்பங் கொடுத்திடாயே. 224

கொடுத்ததினுல் மருதூரும் எண்ணை தன்னைக் குணமாகஎட்டு நாட்கொருக்கால்மூழ்க, கொடுத்ததினுல் மருந்துவிடு மட்டுமூழ்கக் குவலையத்தில் பறங்கியென்றகுட்டந்தீருந், தடித்துநின்றவெண்குட்டமேகக்குட்டம் தயவாகதீருமடா தன்மையாலே, அடுத்திருந்த பேர்களை நீயகலச்சொல்லி அப்பனேகைபாக மறிந்துசெய்யே. 225

வெள்ளிப்பற்பம்.

செய்யவேயின்னமொரு குளிகைகேளு செயமான வூதுகட்டி வள்ளிதன்னே, துய்யமாய் குகையிலிட்டு உருகும்போது துரையாண

வெள்ளியிடை மகிழம்பூச்சார் அய்யனே இரண்டுயிடைவிட்டிருக்க வப்பனேவெள்ளியது மடிந்துபோகும் பொய்யல்ல வப்பொடியை முன்சாற்றுலே புகழாகவரைத்துபில்லையுலர்த்திக்கேளே. 226

உலர்த்தியதோர்வில்லைக்குக் கவசங்களு வுண்மையுடன்முட் காவேளேவேரைத்தானும் பிலக்கவதைமுன்னீரா லரைத்துக்கட்டி பிரியமுடன்குகையிலிட்டுச் சில்லுமூட்டி உலர்த்திநன்றாய் மண்சீலை வலுவாய்ச்செய்து உள்ளபடிநூற்றுருவிற்புடத்தைப்போடு பெலத்த தோரசிதமென்ற வெள்ளிபற்பம் பெருமையுள்ளவெண்ணெயிலே கொடுத்துப்பாரே. 227

கொடுத்துமிகப்பார்க்கையிலே தீரும்நோய்கேள் குணமில்லாக் காசமொடு இரத்தகாசம் அடுத்துநின்றமேகசயமந்தா ரகாசமப்பனே திப்பிலியிலகலுஞ்சொன்னேந் தொடுத்துமிகப் புளிபுகையுந்தவிர்க்க வேணுஞ் சுயமாகவேளைக்குப்பணவிடையிற்பாதி கடுத்துநின்றபவுத் திரமூலச்சூலை காணுமலோடுமடா கண்டுபாரே. 228

நாகபற்பம்.

கண்டுபாரின்னமொருபற்பங்கேளு கருவானநாகமதைப் பயறு போலே, கொண்டுபோய் பொடிசெய்து கழஞ்சிரண்டு குணமான அயக்கரண்டிதன்னிலிட்டு, நிண்டுபார்முதற்றமாஞ்சோமணுகி நிறு த்தெடுத்துப்பணவிடைதான் கூடப்போடு, மொண்டுபார் சுத்தஜலங் கழஞ்சுவிட்டு மூர்க்கமுடன் விளஞ்சிலைவேடுகட்டே. 229

கட்டியே காலமேதுவைக்கிமைந்தா கதிரவனிலிருபத்தார் நாழி மட்டும், இட்டுமேயிரகாலே கரண்டித்தூரில் இதமாக வேலியென்ற பருத்திசார்தடவி தொட்டுமேயிலையில்வைத் தூறும்போது சுகமாகத் தானுருகி ,மஞ்சள்போலே பட்டியேபுகையெழும்பும் போதுமட்டும் பாங்காகதாதுநற்பற்பமாமே. 230

பற்பமடாவைத்தயிடை குறைந்திடாதே பாலகனேசெய்பாகந் தவறிடாதே அற்புமொன்றுபற்பமதை யெண்ணிடாதே அப்பனே வெண்ணையிலே பணவிடைதான்கொள்ள சொற்பமென்ற வுப்பாகா புளியுமாகா துவரையிட பருப்பிட்டுக் கிச்சுடிபோற்பொங்கி நற் மென்ற பசுநெய்யுங் கூட்டியேதான் நலமாகயேழுநாள் கொள் கொள்ளே. 2[illegible]

கொள்ளவேயெட்டாறு ருப்புக்கூட்டு குணமாகப் பத்தாந ஸ்நானமாட்டு தள்ளவேபுளிக்கூட்டு திருநோய்கேள் தலையாதபெ ளையது துலைந்துபோகும் கள்ளமாமூலமதுதீர்ந்துநல்ல கண

தாதுவிர்த்தியுண்டாகும்பாரு, எள்ளளவுங் கைபாகந்தப்போவில்லை வகாந்தபூரணத்தினியல்புகேளே. 232

பூரணமாய் நாநூறுங்கைபாகந்தான் புலத்தியனே யுனக்காக நன்றாய்ச்சொன்னேன், காரணமாம்வடமொழியைத்தமிழால் செய்த கருவிநூல் சரக்குசுத்தி யஷ்டலோகம் மாரணமுஞ் சொன்னனடா நூற்றியைந்து வகையானபத்திலேமகிழ்ந்துபார்த்தால் காரணமும் பூரணமுங்கண்டபோதே கருவானபற்பமெல்லாங் கைக்குள்ளாமே.

இரசபற்பம்.

பற்பமென்ற ரசபற்பமொன்றுகேளு பாலகனே ரசமதனைப்புளிக்காய்ப்பாலில் அற்பமென்று நினையாமல் கையிற்றேய்க்க யகங்கையிலொட்டுமடாஈயம்போலே துப்புறவாய்த்தேய்த்துமெள்ளக் கழுவச் சுத்திசெய்த சங்கழஞ்சுபன்னிரண்டு நிற்புறமாய்க் கல்லிலிட்டுக் கொண்டுநினைவாகத் தானரைக்கத் தயிலங்கேளே. 234

தயிலமென்றால் கெந்தகத்தின் தயிலமப்பா தன்மையுடன் இறக்கும்வகை தயவாய்க்கேளு, ஒயிலாககெந்தகத்தை தூளாயாட்டி யுண்மையுள்ள கலயத்தில்பாதிபோட்டு, மயலாகக்கலசம்வாய்க் கேற்றாப் போலே மைந்தனேமண்ணாலே புனலுண்டாகி, அயிலமென்ற கலயத்தில்மூடிச்சீலை யஞ்சாறுமணவலுக்கச்செய்துக்கொண்டே. 235

கொண்டபின்பு வடிவுயர்ந்தகுப்பிவாங்கி குணமாகச்சல நிரப்பிமடைத்துப் போட்டு, அண்டையிலே ஒருவனைத்தான் பிடிக்கச் சொல்லி அடியப்பா இரும்பாணிநூரிலேகாண, மண்டையிலேயோரடியிற்றமருண்டாகும் பாலகனே புனல்மூக்குத்தமருள்விட்டு, ஒண்டையிலேமண்பூசி புகையோடாம லுத்தமனே சிறுவடுப்பில் தீபம் போலே. 236

தீபம்போல்மேல்குப்பி கனல்படாமல் தீயெரித்தநாழிகைதானிரண்டுக்குள்ளே, தூபமென்ற கெந்தகத்தின் புகைதான்குப்பி சுற்றிலுமேதிராவகமாய்நிற்கும்பாரு, தாபமென்றமறுகுப்பிக்கேற்றிக் கொண்டு தயவாகநாற்கழஞ்சு தயிலம்விட்டு, சோபமென்றாரசமாளரைத்துருட்டிச் சுருக்காகமேற்கவசஞ் சொல்லக்கேளே. 237

சொல்லக்கேள்பூவரசம் பட்டைபலமிரண்டு சுத்திசெய்தநெல்லிக்காய் கெந்திபலமிரண்டு, அல்லக்கேள்சிறிதுரும்பைச் சாறுவிட்டுட்டி யப்பனேரசமெழுகி லணிந்துருட்டி, நல்லாயக்கேள் வாயாருந்துந்தாளிரண்டு நன்னயமாயடித்தாளி தன்னிலுப்பும், வல்

லக்கேள்செங்கலுமே பொடித்துப்பாதி வகையாகத் தான்செய்து மருந்துவையே. 238

வைத்தப்பாமூன்றுநாள் மறையமூடி மார்க்கமுடன் மேற்றுளி தூரிலேதான், கைத்தப்பாகையான்சா றேழுவிசைபூசிகாயவைத்து மேல்மூடியேழுமண்செய்து, சுத்தப்பாவெடித்தயிட மண்ணும்பூசிச் சதானந்திபதம்போற்றி வாலுகைமீதேற்றி, நைத்தப்பாகாடக்கினி மூன்றுசாமம் நலமாகத்தானெறித்து வடுப்போடாற்றே. 239

ஆற்றியேகீழிறங்கி யோரப்பாட்டாய் அப்பனேதான்சாய்த்து வழிந்துமெள்ள, தூற்றியேமேற்காட்டிக்குள்ளேமைந்தா துயர்து ராகமுடிகொண்டுநீலம், பார்த்திபனே துடைத்தெடுத்த தனைநீயும் பாங்கானகன்மநோய் தீரவேண்டி, சாற்றியேபணவிடைதான் பனை வெல்லத்தில் தயவாகஇருவேளை யேழுநாளே. 240

ஏழுநாள்வான்கொடுக்கத் தீரும்நோய்கேள் என்மகனேகுறை நோயுங்குன்மநோயும், ஆழுமேகுஷ்டமுஞ்சூலையரையாப்பு அபானத் தில்சூலையுடன்யோனிப்புற்று, கேழுமேமூலைமூளைகண்டமாலைகிரந்தி யுடன்றடிப்பு வெள்ளைக்கருங்கரப்பான், பாழுமேவண்டுகடி சிலவிட முந்தீரும் பத்தியந்தானுப்பாகா பசும்பாலாமே. 241

பாலாகும்வெந்நீரும்பதினைலானுள் பாலகனேவோமநீர் ஸ்நானம் பண்ணி, நாலாகும்உப்பதனைவறுத்துக்கட்டு நன்மையுடன்மறுநாளு மேகூடச்சொல்லு, ஆலான ஸ்ரீபோகமண்டலமாகாது அப்பனேசகல நோய் அகலும்பாரே. 242

குப்பிசெந்தூரம்.

பாரப்பாஇன்னமொரு செந்தூரங்கேள் பாடுகிறேன் புலத்தி யனேபதிவாய்க்கேளு, நேரப்பாவாலைசுரம் பலந்தான்நாலு நேர்த்தி யென்னகெந்தியோர்பலமேகூட, காரப்பாகரியோட்டில் தொந்தித்தே தான் கனமாகப்பொடிசெய்து குப்பிக்கேற்றி, மேறப்பாவாலுகையி லேற்றிக்கொண்டு மேன்மையுடனொருசாமந் தீபம்போலே. 243

தீபம்போல்மறுசாபங் கமலம்போலே திறமாகத் தானெரித்து மூன்றுஞ்சாமம், தாபம்போற்காடாக்கினிபோலே மைந்தர்தானெரிக் கிலகெந்தகத்தின்வாசம்வீசும், கோபம்போலசிலாகையிட்டுமெள்ளக் கிண்டு குமாரனுங்குமரியுமேகூடும்நேர்மை, கோபம்போலிக்கணமதா யுருக்கிக்காணுங் தூரிதமுடனிளகுபத மில்லாட்டாலே. 244

இல்லாவிட்டால்மேலே யோடுமூடி யென்மகனே யொருநாழி கடுந்தீப்போட்டு, சல்லாபமாய்நீக்கிச் சலாகையோடு சதிராகவுருசி

யது குழம்பாய்க்காணும் பொல்லாத தாளகத்தைப் பொடித்ததுள் தான் புலத்தியனே யரைப்பலந்தான் குப்பியில்போட்டு, நல்லாய்த் தானுற்புறமுங்கீழுமேலும் நன்ருகச்சலாகையினுற் கிண்டிப்போடே.

கிண்டியேமுச்சாமங்கடந்துமேலே கிருபையுட னுற்சாமந்தன் னில்மைந்தா, அண்டினல் வடவையென்ற தணலைபோடு அப்பனே மருந்தெல்லாமேலேயேறும், துண்டியேமிதப்பதனை மறந்திடாதே துரிதமுடனுற்சாமம் எரித்துநீயும், தண்டியேசலாகையிட்டுப் பார்க்கும்போது தயவாகசலாகைமுனை சிவந்துபோமே. 246

சிவந்தாலும்வெளுத்தாலும் பதமிதப்பா சீக்கிரத்திற் குரட்டாலேயெடுத்துக்குப்பி, மவமாகநீர்தெளித்து ஆற்றிப்போடு மைந்தனே சலாகைமுனை கறுத்துத்தோன்றில், குவித்திருந்த குப்பிதனையடுப் போடேதான் குணமாகஎரிப்பாற்றிவைத்துப்போடு, தவித்திருந்த அடுப்பினது வேகத்தாலே தான்வசிக்கு மிருநாழி சென்றப்பாலே.

அப்பாலே குறட்டதினுல் குப்பிவாங்கி அசராமல் தெளித்திடுவாய் சுத்தகங்கை, தப்பாதகுப்பிதனை யுடைத்துப்பாரு தயவான செந்தூரங்கறுத்துக்காணும், இப்பாலேயுரைக்கயிலே முருக்கம்பூப் போல் இருக்குமடாபணவிடைதான்தேனிலீய, செப்பாதபத்துநாள் தன்னிலேதான் தீருகிறவியாதிதனைத் திறமாய்க்கேளே. 248

கேளப்பாமூலநோய்மேகரோகங் கொடியானபவுத்திரமுமனேக நோய்கள், தாளப்பாபுளிபுகையுந் தள்ளத்தீருந் தயவான வாலைரசச் செந்தூரத்தை, ஆளப்பாகற்பாதி செய்வானப்பா அரசுராவுலகத்தோ ரசமென்பார்கள், வாளப்பாஇன்னமொரு செந்தூரந்தான் வகையாகச் சொல்லுகிறேன் வரிசையாக. 249

அம்பிரேகச் செந்தூரம்.

வரிசையாய்ச்சொல்லுகிறேனப்பிரேகந்தான் மைந்தனேபொடிப் பொடியாய்ப் பொடித்துக்கொண்டு துரிதமதா யந்திடைக்குப் பனை வெல்லந்தான் சுகமாகவெடியுப்பு மொன்ருய்க்கூட்டி, பரிசமுடன் சுத்தகங்கை தன்னுலாட்டிப் பாலகனேபில்லைதட்டி ஒட்டிவிட்டு, பிரியமுடன்மேல்மூடிச் சீலைசெய்து பெலமாக்கிக்கெசபுடத்திற்போட் டுப்பாரே. 250

போட்டுமேயாறினபின் னெடுத்துபாரு புண்ணியனே தளுக் கற்றுப் பற்பம்போலாம், தாட்டிகமாய்க் கல்வத்திலிட்டுக்கொண்டு

தானரைப்பாயொருசாம மெருக்கம்பாலால், மாட்டியமாய்க்கல் லோடே ரவியிற்போட்டு மற்றுநாள்யெருக்கம்பால் சாமமாட்டு, நாட்டுமேல்யேட்டோடே வெயிலிற்போட்டு நலமாக வவ்வீதம் நாற்பது நாள்போக. 251

நாள்கேளுநாற்பதிலே விட்டுகட்டு நன்மையுடன்காயவைத்து ஓட்டிவிட்டு, வேல்போன்றமேலோடு பொருந்திமூடி மேன்மையுடன் எழுசீலை மண்ணுஞ்செய்து, தாளானதாளிரைஞ்சி கெசபுடத்திற் போடு தயவாகவாறினபின் னெடுத்துப்பாரு, வாள்போன்றவப்பிரகஞ் சிவந்துகாணும் மைந்தனேகல்வத்தி லரைத்திடாயே. 252

அரைத்திடுவாய்பொற்றிலையின்கையான்சாற்றி லப்பனேசாமமு மறைத்துவில்லை, திறத்துடனே தானுலர்த்திக் கெசப்புடத்திற் போடு தீர்க்கமுடனிவ்விதமா யரைத்தரைத்து, உரைத்துடனேயஞ்சு பத்தும் ஒன்றும்போட உத்தமனேயருணனைப்போல் சிவந்து காணும், நிறைத்துங்கைப் போடிசெய்துகுப்பிதன்னில் நீபதனம் பண்ணிவிடு வனுபானம்கேள். 253

கேளடாஆவாரை பஞ்சாங்கந்தான் கிருபையுடன்பலமெட்டு அசுவகெந்தி, நாளடா அவ்வீதஞ் சீரகந்தான் நன்மையுடன்பலமிரண்டுஞ் சூரணித்து, தாளடாவெருகடியிற் குன்றிவீதந் தருவானபசு வெண்ணெ தன்னி லுண்ண, தேளடா இருவேளை வேளைமண்டலந் தான் விதமாகக் கொண்டுவிட வியாதிகே ள. 254

## அசுவகெந்தி அமுக்கரு

கேளேநீ மேகமென்று விருபத்தொன்றுங் கெடியாகத் தீருமடா பத்தியமேயில்லை, கோளோநீரிழிவும் மேகந்தீரும் கோடானகற்பமிது கொவ்வாதப்பா, வாளேநீசெந்தூரஞ் சகலருக்கும் வாதுயார் படுவாரிந்தப் பாடுள்ளோனே, வேறனென்ற சித்தர்கள் செப்புமார்க்கம் வெளியாகச் சொன்ன திந்தப் பூரணந்தான்பாரே. 255

## காந்தசெந்தூரம்.

பாரப்பாஇன்னமொரு செந்தூரந்தான் பாங்கான கெந்திசமன் காந்தங்கூட, நேரேநீகரிசாலைச் சாற்றுலாட்டி நினைவாகப்பில்லை தட்டிக்காயப்போட்டு, சாரப்பாஓட்டிவிட்டு ஓடுமூடித் தயவாகசீலைமண்ணேழுஞ்செய்து, தாரப்பாசெகபுடத்திற் போட்டுவாங்கி தயவாக ஐந்திடைக்குக் கெந்திகூட்டே, 256

கூட்டிடேமுன்சாற்று லரைத்துமுன்போற் குணமாகக் கெச[புடத்திற்போட்டுவாங்கி, நாட்டியே யிவ்விடைக்குக்கெந்தி கூட்டி ந[...]மான பழச்சாற்றுலரைத்து முன்போல், மாட்டியே கெசபுடத்தி[...]

போட்டுப்பின்பு மைந்தனேயிவ்விடைக்குக் கெந்திகூட்டு, தாட்டிகமா யிவ்விடைக்குச் சித்திரமூலந் தயவாகத்தான்கூட்டி முலைப்பா லாட்டே. 257

ஆட்டியேபில்லைதட்டி யோட்டிவிட்டு அப்பனேமுன்போல புடத்திற்போடு; நாட்டியேகெந்தியொடு சித்திரமூலம் நன்மையுட னவ்விடைக்கு ஒன்றாய்க்கூட்டி, ஆட்டுவாய்கோழிமுட்டை வெண் கருவினாலே அப்பனேபில்லைசெய்து புடத்திற்போட்டு, காட்டிடவே பின்னெடுத்துக் கல்வத்திட்டுக் கனமாகயெருக்கம்பால் தன்னா லாட்டே. 258

எருக்கம்பால்தன்னாலே நாலுசாம மென்மகனே தானரைத்துப் பில்லைதட்டி, சுருக்கமுடன் தானுலர்த்தி யோட்டிவிட்டுச் சுகமாக மேலோடு மூடிச்சீலை, இருக்கமுடன்மண்செய்து கெஜபுடத்திற் போட்டு எடுத்துப்பார்செங்கறுப்பா யிருக்கும்பாரு, பொறுக்கமுடன் பொடிசெய்து பதனம்பண்ணி புண்ணியனேபணவிடைதான் தேனி லுண்ணே. 259

உண்ணப்பா அங்கிசந்தி மண்டலத்தா னுத்தமனே பத்தியமோ அதற்குவேண்டாம், கண்ணப்பாமோகமது தவித்தாற்போதுங் கன மானவிஷப்பாண்டு கவசிக்கட்டி, தண்ணப்பாசோகையுடன் பித்த பாண்டு கருகாக நீராம்பண்டவாயு, நிண்ணப்பாமேலேறும் ஆனந்த வாயு நிலையானவாயுவெல்லாம் நீங்கிப்போமே. 260

## அயச்செந்தூரம்

நீங்கிப்போமின்னமொரு செந்தூரங்கேள் நிலையானஅயப்பொடி யைக்கல்வத்திட்டு, ஏங்கிப்போம்காடிதெளித் தொதியன்பட்டை இத் துப் பிழிந்திச்சாற்றையூற்றிமைந்தா,பாங்குடனேமூன்றுநாள்ரவியில் வைத்தே பாலகனேவைத்தபின்பு நாலாநாளிற், சாங்கமாய்மூன்சாற்றி லரைத்துவில்லை தயவாகத்தான்செய்து காயப்போடே. 261

போடப்பாஓட்டிவிட்டு ஓடுமூடிப் புகழாகச்சீலை மண்ணேழுஞ் செய்து, நாட்டப்பாகெஜபுடத்திற் போட்டெடுத்து நலமாகமூன்சாற் றிலரைத்துமுன்போல், கேட்டப்பாகெஜபுடம்எட்டுப்போட்டுத் திற மாகக்காடியது சேர்ந்தசாற்றிற், கூட்டப்பா தனிச்சாற்றில் மூன் றும்போடு குணமாக அயமதுவுஞ் செந்தூரமாமே. 262

ஆமப்பாவனுபான மயிந்தேயுண்ண அரும்பிணிகள் வாதபித் தம் அய்யத்தாலே, நேமப்பா அனேகமாக ரோகமெல்லாம் நீங்கித் திரிகடிகளுமுறுக்குமேறி, காமப்பால்பெருதிருக்கும் விந்துகட்டும் ண்கள்செவ்வலரி யழிவீரஞ்செய்யும் தாமப்பா ஆலரசு பிச்சினித்து மனிடைக்கு அதிமதூரம் பசுநெய்யாமே. 263

நெய்யாகுந்தேனகு மநுபானந்தான் நீங்காதவாய்வுகளு நீங்கிப்போகும், பொய்யாகுங்கைபாகந் தவறிட்டாலும் புலத்தியனே மருந்தொன்றும் பலித்திடாது-வையாதேபூரணத்திற் கைபாகந்தான்வண்மையுடன் சொன்னதினல்வைத்தியபூரணம், ஐயமில்லா நானூறும் வெளியாய்த்தோணும் ஆதிகுருகொடுத்த வடமொழிதன்னாலே. 264

நாக செந்தூரம்.

தன்னாலேயின்னமொரு செந்தூரங்கேள் தருவானநாகமதையுருக்கிமைந்தா, முன்னாலேமூவேழுதரந்தானன்றாய் மூர்க்கமுடனிலுப்பை நெய்யிற்காய்ச்சிச்சுத்தி, பின்னாலேபுதுசட்டி தன்னிலிட்டுப்பிசகாமலடுப்பிலிட்டு உருக்கிக்கொண்டு, தன்னாலேசீதசெங்கழுநீர்ப்பூண்டு தான்போட்டு அயக்கரண்டிதன்னிற்கிண்டே. 265

கிண்டுவாயடிக்கடிதான் பூண்டுபோட்டுக்கிருபையுடனனல் போட்டுநாலுஜாமம், தண்டுமிண்டுபண்ணாதேகிண்டிவாங்கு தருவானநாகமதுமாண்டுபோகும், கண்டுமேசெங்கழுநீர்ச் சாறரைத்துக் கனமானபில்லைசெய்து காயப்போட்டு, பண்டுமேயோட்டிலிட்டு ஓடுமூடிப் பாலகனேசீலைமண் வலுவாய்ச்செய்யே. 266

செய்துமேகெஜபுடத்திற்போட்டு வாங்கித்திரும்பவகைப்பொற்றலையின் சாற்றாலாட்டி, எய்துமே மூன்றுவிசைமுன்போற் போடஎன்மகனே நாகமதுசெந்தூரமாகும், கொய்துமே பணவிடைதான் பன்றிவெண்ணெய் தனிற்குழைத்திரண்டுவேளை யரைமண்டலமேகொள்ள, வைதுமேமூலமெல்லாம்தீருமப்பா வகையான மேகநோய் மாறிப்போமே. 267

மாறிப்போம்பத்தியந்தான் காரப்பன்பண்டம் மைந்தனேயாகாதுமற்றதெல்லாம், தேறிப்போம்புலத்தியனே செந்தூரந்தான் சிவக்காது மஞ்சள்வண்ணஞ்சிவப்புமாகும், கோறிப்போஞ் செந்தூரங்கொடுக்கும்போது குணமில்லாமூலநோய் மூலவாய்வும் மாறிப்போம் நாகசெந்தூரமப்பா வகையாகச்செய்துநீ வயித்தியம்பாரே. 268

அறிவு.

வயித்தியம்நீ பார்க்கவென்றால் சொல்லக்கேளு வண்மையுள்ள மானிடர்க்குக்கர்மநோய்தான், பயித்தியமோவில்லாவிட்டால் நோவேயில்லை பாலகனேமுன்செய்த பாவத்தாலே, சயித்தியமோதொடர்ந்துவரும் குஷ்டரோகம்தன்னாலே யுன்னையவர்பணிந்து காப்பார் அயி

தியமாம் பொருளாசைபட்டாயானால் அணுகுமடா புலத்தியனே உன்னைத்தானே. 269

புலத்தியனேபொருளாசை கொண்டுநீயும் பூதலத்திற்பணங் கேட்டால்நோய்தீராது, சிலத்தியாயவன் மனதுகனிந்து ஈந்தால் சிந்தையல்ல நீயவனைக்கேட்கவேண்டாம், நிலத்திலேவயித்தியன்றன் மனம் நொந்தாக்கால் நீடூழிகாலமட்டும்நரகிற்சேர்வார், தலத்திலே பணம்பிடுங்கும் வயித்தியனேயானால் தன்மையுடன் கன்மநோய்க் குள்ளாவானே. 270

கன்மநோய்க்குள்ளாகிப் பிறக்கனன்றே கயிலாயபராபரத்திற் சேர்தனன்றே, வன்மமென்னுமுலகத்தார்மீதிலேதான்வயித்தியனே சிவன்மேலே கன்மம்வைத்தால், கன்மநோய்தீருமடா காலனில்லை கயிலாயபதிகிடைக்குங் கருணைதங்கும், நன்மையென்ற பெயரோடு வெகுநாள்செல்லும் நலமானவயித்தியந்தான் தருமமாமே. 271

தாம்பிரச் செந்தூரம்.

தன்மமாயின்னமொரு செந்தூரங்கேள் தருவான தாம்பிரத்தை தகடுதட்டி, நின்மலமாமனேசிலைதான் கொஞ்சம்போலே நேர்மையுள்ள () அந்தரமாமூலிச்சாற்றில், வன்மமுடனுடைத்ததின்மேல் தடவியப்பா மார்க்கமுடன் பத்தொருவிற் புடத்தைப்போடு, கன்மமடா தானகலும்போலே மைந்தா கருவாகவிருப்புறமும்வெந்துபச்சை.

() அந்தரமாமூலி-ஆகாசதாமரை.

பச்சையாய்த்தானிருக்குமதைத்தான்மைந்தா பக்குவமாய் முன்போலப்போடச்சாகும், மிச்சமாய்ச் செத்ததொரு செம்பைநீயும் மீறுமற்பொடிசெய்து புதுசட்டிதன்னில், அச்சமறப் புளியிலைச்சார் விட்டுக்காய்ச்சி யரைப்படிதான் குழம்புபோல்வருமந்நேரம், உச்சிதமாய்ச்சுத்தகங்கை நாழிவிட்டு உண்மையுடன்றான்கலக்கித் தெளியவைபே. 273

தெளிந்தபின்னிறுத்துவிட்டு மறுநீர்வாருதிறமாகக் கலக்கியதை தெளிவைநீக்கி, ஒளிந்துவிடப் பச்சைவர்னமூறல்தானும் ஒன்பதுநீர்தெளிவிருக்கயீறல்நீங்கும், அளிந்துநீயவசரமாய்த் தெளிந்திட்டாலே அப்பனேஊறலற்றுச்சுத்தியாகும், இளிந்துநீயடுப்பில் வைத்துச் சூடுதாக்கு என்மகனேவிட்டகற்றைகிட்டிக்கேளே. 274

கிண்டிடுவாய்புளியஞ்சிறுகீரையாலே கிருபையுடனுற்சாமங்கிண் டிநீயும்அண்டிடுவாய் கல்வத்திலிட்டுக்கொண்டு அப்பனேபுளியஞ்சிறு

கிரைச்சாற்றால் நிண்டுடனே தானரைத்துப்பில்லை தட்டி நினைவாகத் தானுலர்த்தி ஒட்டிலிட்டு, பண்டிடவே கெசபுடத்திற்போட்டுவாங்கி பக்குவமுடன்றானரைப்பாய் பொற்றிலையின்சாற்றில் 275

சாற்றாலே யரைத்து அதை மூணுபுடமுன்போல் தயவாகப் போடவேகருஞ்சிவப்பாய்க்காணும், தோற்றுததாம்பிரம் வீறடங்கா விட்டால் துரிதமுடன் றிரிபலையின் கஷாயத்தாட்டி, காற்றாலேமுன் போலேபுடத்தைப்போடு கருவாகபணவிடைதான் கொள்ளச் சொல்லு, பார்த்தாலேகுஷ்டமெல்லாந்தீருமப்பா பண்பானமேகமோ டீளைபோமே. 276

ஈளையொடுமந்தாரகாசம்போகும் இன்பமுடன்கரிசாலைச்சாறு காரு, கோளையென்றபசுவின்பால் படிதானென்று கூட்டியதிற்சர்க்க ரையும்பலம்பத்தாகும் வேளையென்றபாகுபதம்வருதல்கண்டு பெல மானமிளகுபலம்பதினறப்பா வாளநல்லாய்பொடித்திட்டு லேகியம் போற்கிண்டி மைந்தனேநெய்யுழக்குத் தேன்றான்பாதி. 277

பாதிவிட்டுக்கிண்டியதில் லேகியமப்பா பாங்கானசெந்தூரம் பணவிடைகால்கூட்டி, சாதியமாயிருவேளை மண்டலந்தான்கொள்ளச் சகலநோய்தீருமடா தாம்பிரத்தின்வேகம், ஆதியாம்புளிபுகையுந்தவி ர்த்துபல்ல அன்பானபசுநெய்யும் வெள்ளாட்டுக்கண்டம், ஏதியதோர் சிறுபயறுதுவரையாகும் உத்தமனேவழுதலையு முருங்கபிஞ்சே. 278

பெரும்பாடுதீர மிளகுலேகியம்.

பிஞ்சாகுமின்னமொருலேகியங்கேளு பலமானபொஸ்தகக்காய் கர்கடகசிங்கி, தஞ்சமென்றவரைக்கு ஒருபலமாய்வாங்கித் தன்மை யுடன்மாட்டிமொக்குகழஞ்சுசேர்த்து, மிஞ்சாமற்பொடிசெய்துபனை வெல்லந்தான் மீறுமல்மருந்திடைக்குப்பாகுசெய்து, அஞ்சாமற்சூர ணத்தைக்கொட்டிக்கிண்டி அப்பனேதேனையும் விட்டுக்கிண்டே.

கிண்டியேபாக்களவுலேகியந்தான் கிருபையுடனிருவேளையஞ்சு நாளும், கொண்டிடவேபெண்களிட உதிரபாய்ச்சல் கொடுமையென்ற பெரும்பாடுதீருமப்பா, உண்டிடவேபத்தியந்தானென்றுமாக உத்த மனேவறுத்தவுப்புமிளகுகூட்டு சுண்டலென்றதுவரையுடன் சுண்ட லாகுஞ் சுகமானவெந்நீருஞ் சாந்தமாமே. 280

தேற்றாங்கொட்டை லேகியம்.

சாந்தமாமின்னமொரு லேகியங்கேள் சமர்த்தானபலமைந்து தேற்றாங்கொட்டை, சேர்ந்ததொருதிரிகடுகுதிரிபலாதி சிற்றரத்தை சீரகம் வகைக்கரைபலந்தான் பார்தமாய்ப்பொடிசெய்து வைத்து

கொண்டு, ()பஞ்சதாரைபலம் நாலுபடியாவின்பால், தோய்ந்திடவே கலக்கியதைப் பாகுசேர்த்துத் துரிதமுடன் தூள்கொட்டிக் கிளருவாயே. 281

() பஞ்சதாரை-சர்க்கரை.

கிளரயிலே பசுவினெய்படிதான்வாரு கீழிறக்கித்தேன்பாதிவிட்டுக்கிண்டி, களரியிலேபாக்களவுலேகியத்தில் கருவானநாகபற்பம் கூட்டித்தின்னு, அலரயிலேயிருவேளை இருபதுநாள்கொள்ளு அப்பனேமூலநோயகலுஞ்சொன்னோம், இளரவேசயமுட்னோ யத்திசுரவாதமிதமான அக்கனியாமந்தம்போமே. 282

திரிகடுகு லேகியம்.

மந்தமொடுமூலத்தின்வாயுதீரும் மைந்தனே புலிபுகையுமாற்றச்சொல்லு, அந்தமுடனின்னமொரு லேகியங்கேள் அன்பான திரிகடுகு வகைபலந்தானொன்று சொன்னமுடன்சீரகமுங் கிராம்புயேலம்துரிதமுடன்வகைக்கு அரைப்பலமேவாங்கி, விந்தையாய்ச்சுத்திசெய்து சூரணித்து விதமானபனவெல்லம் பலந்தானஞ்சே. 283

அஞ்சாகும்பாகுபோற் காய்ச்சிக்கொண்டு அப்பனேசூரணத்தைப்பாய்ச்சிக்கிண்டி, மிஞ்சாமல்செய்யுழக்கு அரைக்கால்தேற்றான்விட்டுமதைலேகியம்போல் கிண்டிவாங்கிக்கொஞ்சமாய்க் கொட்டைபாக்களவுமைந்தாகுணமாக இருவேளையிருபதுநாள்கொள்ளு, நெஞ்சாரத்தீருகிற வியாதிகேளு நிலையானவாதமொடு வாய்வுபோமே. 284

வாயுவொடு உஷ்ணமும்பித்தவாய்வும் வயிற்றுவலிகடுப்புளைவு எரிச்சல்பேதி, தேயுவென்ற அக்கினியாமாந்தம்வாந்திதீராத அஸ்திசுரமஸ்திவெட்டை, பாயுறதோர்பொருமலென்றவாயுக்கிராணி பறக்குமடாலேகியத்தில் அயச்செந்தூரம், பேருமின்றிப்பணவிடைதான் கூட்டியுண்ணப் பெலமானவாயுவெல்லாம் புரண்டுபோமே. 285

கபாடலேகியம்.

புரண்டுபோமின்னமொரு லேகியங்கேள்பெலமான ஆலரசுஅத்திநாவல் முரண்டயமாம்பட்டைக்குக் கருவேல்பட்டைமூர்க்கமுடன் வெல்வேலும் விடதாரைவேரும் திரண்டுநின்றதென்னம்பூ ஒன்னமேஒன்றாய்த் திறமாகப்பலமிரண்டு மிடித்துமைந்தா,இரண்டுமேளையிட்டுக்குறுணிநீர்தானிட்டுமதை யெட்டொன்றாயிட்டுக்கேளே.

கேளப்பாகியாழத்தை வடித்துக்கொண்டு கிருமையுடன்சர்க்கரயால்மெறிந்துவோடு காணப்பாவூண்டெரித்துப் பலந்தானெட்டு

தகத்ருவாகஅதிற்போட்டு வேகவைத்து, கேளப்பாதலமெல்லாங் குறுகிவெந்தாற் குணமாகதிருகிட்டுக் கடைந்துநீயே, நாளப்பாபன வெல்லம் பலந்தானுலு நன்மையுடன திற்போடப் பாகுபோலாம். 287

பாகுபோல்பதமாகும் போதிலேதான் பக்குவமாய்ச்சாதிக்காய் பினிஓமம், நேகவரைவகைக்கிரண்டு விராகனிடையாரு நேர்ாகப் பொடிசெய்து போட்டுக்கிண்டி பாகுபோலிளம்பதமா யிருந்ததானற் பக்குவமாய்சலம்வற்றக் கிண்டும்போது, ஏகமாய்ப்பசுவிநெய் கொஞ் சம்விட்டு என்மகனேலேகியம்போல் கிண்டிவாங்கே. 288

வாங்கியேநெல்லிக்காய் வீதந்தானும் மைந்தனேயிருவேளை யிரு பதுநாள்கொள்ளத், தாங்கிநின்றமூலமொடு கடுப்புரத்தந் தந்தரு வான்சீழுடனே மூலக்கிராணி, ஓங்கிநின்றமூலத்திற் சேர்ந்தநோய் கள் ஓடுமடாகாரமது மட்டாய்கூட்டு, பாங்குடனேபுளிகூட்டு பத்தி யமோயில்லை பாலகனேசெந்தூரங் கூட்டித்திண்ணே. 289

செந்தூரமுன்சொன்ன நாகமப்பா தின்றுவரியுதீராத ரோக முண்டோ, விந்நூறுமெலும்புருக்கி ரோகந்திரும் வித்தகனேதேக மது புஷ்டியாகும், செந்தூரமுந்நூற்றிற் சுளுவாய்ச்சொன்னேன் திறமாகஅனுபான மறிந்துகொள்ள, செந்தூரில்முருகனைப்போல் நோய்கள்நீங்கும் திறமானவயித்திய பூரணமிதுதானே. 290

தூதுவளை லேகியம்.

பூரணமாமின்னமொரு லேகியங்கேள் புலத்தியனேநானூற்றில் புனிதமாக, காரணமாமுருங்கைப்பூ தூதுவளம்பூவும் கணக்காகவகை க்குநால் பலம்நிறுத்து, தாரணியில் * சதாவேரிக் கிழங்குமூணு தரு வானநன்னாரிவேர் பலமிரண்டு, காரணமாய்நிலப்பனையு நெஞ்சிமுள் ளும் கருவாகவகைக்குவொரு பலமாய்கூட்டே. 291

கூட்டியேசூரணித்துப் பசுவின்பால்தான் குறுணியிலேபோட் டுமே குழம்புபோலே, காட்டியேவற்றிவரும் போதுமைந்தா கதரு வான்சீனிபலம் பன்னிரண்டும்போட்டு, காட்டியேகிளரயிலே பசுவி நெய்தான் நலமாகப்படியரைத்தே னுழக்குவிட்டு, கெட்டியாய்லேகி யம்போற் கிண்டிவாங்கிக் கிருபையுள்ளகணபதிக்கு பூசைசெய்யே.

செய்துமேதான்றிக்கா யளவுகொள்ளத் தீருகிறவியாதிதனைத் திறமாய்க்கேளு, எய்துகின்றபிரமியமு மேகநோயும் இன்பமுள்ள எலும்புருக்கிப் பிரமேகந்தான், பெய்துமேமண்டலத்திற் றீர்ந்து

* சதாவேரி - தண்ணீர்விட்டான் கிழங்கு.

தானும் பெலமுண்டாயிந்திரிய பெலமுண்டாகும், செய்துமேலேகி யத்தில் மேகநோயெல்லாந் தீருமடாபத்தியமோ யில்லைபாரே. 293

இல்லையென்றுமயங்காதே யின்னமொன்று என்மகனேசாதிக் காய் சாதிப்பத்திரி, வல்லென்றகிராம்பு சிறுநாகப்பூ வகையான அமுக்கரா பறங்கிப்பட்டை, கொல்லன்றசந்தணமுங் கொடுவேலி வேரும் கூர்மையுடன்பச்சைக்கர்ப் பூரமொன்றாய், சல்லையென்று நினையாதே காற்பலமாய்வாங்கித் தான்பொடித்துச்சரியிடைதான் சீனிகூட்டே. 294

## திப்பிலிரசாயனம்.

கூட்டியேபசுநெய்யால் பிசைந்துமைந்தா குணமானபீங்கானில் வைத்துக்கொண்டு, தாட்டியேபாக்களவு யிரண்டுவேளை நன்மையுட னிருபதுநாள் கொள்ளும்போது, தாட்டிகமாய்மேகனோய் நீங்கு மப்பா தயவாகயின்னமொரு ரசாயனங்கேள், காட்டுகிறேன்திப்பிலி யும் பலம்பத்தப்பா கருவானமிளகுடனே சுக்குபலமஞ்சே. 295

பலமொன்று *இருசீரக †மிரண்டும்ஓமம் பாங்கான ‡அரத்தை ரண்டு §திரிபலாதி, நலமானலவங்கமுடன் லவங்கபத்திரி நன்மை யுள்ளலவங்கப்பட்டைத் தாளிசப்பத்திரி, பெலமானகொடுவேலி ஏலமப்பா பேசியோர்பதினைந்து பலமொவ்வொன்று வலமாகவிள வறுப்பாய்ச் சூரணித்து தன்மையுடனவ்விடைக்குச் சீனிசேரே.

சேர்த்துமேதேன்விட்டு பிசைந்துமைந்தா திறமானபீங்கானிற் பதனம்பண்ணி, காத்துமேதாம்பிரசெந் தூரங்கூட்டிக் கனமாகவுண் டிடவே காசரோகம், போர்த்துமேமந்தார காசங்கூடப் புலத்தியனே சயிருமல் இளைப்புக்கக்கல், ஆர்த்துமேசேத்துமந் தொண்ணூற் றாறும் அகலுமடாமண்டல மறிந்துபாரே. 297

## சுக்குச் சூரணம்.

பாரேநீயின்னமொரு சூட்சங்கேளு பாங்கானசுக்குதனைச் சூர ணமேபண்ணி, காரேநீகரும்புசர்க் கரையவ்வீதங் கலந்துமேயிரு வேளை யெழுநாளுஞ், சேரேநீதின்றுவர வாய்வுதீருந் திறமானதீபன முண்டாமப்பா, ஊரெல்லாமருந்திருக்கக் காட்டிற்போய்நீ உழுத் தனைப்போலலையாதே உண்மைகேளே. 298

---

* இருசீரகம் - கருஞ்சீரகம், நற்சீரகம்.
† இரண்டுஓமம் - குரோசாணியோமம்.
‡ அரத்தைரண்டு - சிற்றரத்தை, பேரரத்தை.
§ திரிபலாதி - கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்.

திப்பிலி மிளகு சூரணம்.

உண்மையென்ற திப்பிலியைச்சூரணமேசெய்து உகமையுடன் தேனிலேகுழைத்துத்தின்னவண்மையுடன் புகைந்திருமுஞ்சேத்தும ரோய்தான் மாறியேபசியுண்டாமருவிப்பாரு நன்மையுடன் மிளகு தனைசூரணமேசெய்து நலமானபசுநெய்யிற்சீனிகூட்டி தன்மையுடன் மூன்றுநாள் அந்திசந்திதானருந்த சளியிருமல்தவறிப்போமே. 299

திரிகடுகு சூரணம்.

தவறிப்போம்திரிகடுகு சூரணத்தால்தருவானமந்தமுடன்கழுச் சல்தீருந், தவறிப்போந்தேனிலேகொண்டாயானால் தருகாதுசந்நிசீ தளங்கள்தானுந், தவறிப்போம்பனைவெல்லங்கூட்டியேயுண்ணதன்மை யுள்ளவயிற்றிநோய்தானேதீருந் தவறிப்போஞ்சகலநோ யதனைக் கண்டால் தருகாது வயித்தியன்பேர் சொல்லுமுன்னே. 300

முப்பூவுக்கு விபாம்.

முன்னமே முப்பூவை மறைத்ததாலே முழுதுமதுவகைவிபாஞ் சொல்லக்கேளு, நன்னயமாம்நாதமென்றால்பூமிநாதம் நாதாக்கள் பூசித்துவாழ்ந்நாதம்அன்னை உமைநாகமதிற்கொஞ்சம்வாங்கி அப்பனே பிரிதிவியின் அண்டஞ்சேர்த்து சொன்னமொழிதவறாமல் அனுப்பி னுடசுவையுஞ்சேர்த்தரைக்கத் தாளிச்சார்கருக்குாம்பே. 301

அனுப்பினுட்சுவை உப்பு.

நிரம்பவென்றாலரைநாழியரைத்தாற்போதும் நிலவரமாய்ச்சிப்பி யுடசாம்பலுக்குள் வைத்து ஐம்பதெருபுடம்போடே சதாசிவனுமங் கேஅடங்கிவெள்ளைநிறமாகிக் குருவுமாவார் செம்பொனென்ற வாத முடன்வயித்தியமுஞ்சித்தித்திறமானவாசி சித்திகுளிகைசித்திசாம்பு சதாசிவனுடைய பாதஞ்சித்திதயாநிதியாந்தாயினிடநாதத்தாட்டே.

இரசவாதத்திற்கு வாலைரசச் செந்தூரம்

ஆட்டவென்றால் குருவில்லாதாட்டமுண்டோ அப்பனேவாலை ரசச்செந்தூரத்தில் நாட்டமென்ற பலம்நிறுத்துப் பாதிகெந்தி நன் மையுடன் பேய்ச்செம்பின் கிழங்குசாற்றி, ஆட்டுவாய்நாண்மூன்றுபி ன்புலர்த்தி அப்பனே குப்பியிலே மூன்றுசாமம் வாட்டமில்லாதே யெரித்துமுன்போர்கெந்திமாட்டியேயைந்துவிசை யெரித்துவாங்கே.

முன்சொன்னவைப்புக்கு விபாமும்
வெடியுப்புசுத்தி விபாமும்.

வாங்கினாற்குப்பியடி யிருக்குமப்பா மைந்தனேசெந்தூரமேமே றாது தூங்கியேயலையாதே சொல்லக்கேளு துரையாகசெலவுக்கு

இட்டுமெப்பா ஒங்கியேசகலனோய்தீருமப்பா உத்தமனே முன்சொன்ன சீடனுக்கு தாங்கியேவாழையுடகிழங்குசாற்றில் தான்காய்ச்சிவெடி யுப்பு கட்டனன்றே. 304

### சைவீரவைப்பு.

நன்றப்பா சைவீரவைப்புதானும் நலமானவெடியுப்புநாலுபங்கு நின்றப்பாசத்லைதவிடு ரண்டுபங்கு நிலையானநவாச்சார மிரண்டுபங்கு கண்டப்பாசீனமோர்பங்குகூட்டிக் கருவாகத்தான் பொடித்துக்கலை யத்திட்டு மூன்றப்பா கெந்தகம்போ லதிரீர்வாங்கி முட்டையளை கைவீரவைப்புநன்றாம். 305

வைப்பான திறவுகோலிதுதானப்பா மார்க்கமுடன்சித்தாதிசெய் யும்வித்தை செப்பாதசதுர் முகத்தோன் றிருவகமுன்சொன்னேன் திரமானசீடனுக்குயிருஞ்சொன்னேன் வைப்பானவைப்புக்குகைபா கஞ்சொன்னேன் மகத்தானமுப்பூவின்மறைப்பைச்சொல்வேன் அப் பானஅப்பிறுப்புகல்லுப்புத்தான் அப்பனேயாதமென்றுற்பூநீறுமே.

பூநீறுஞ்சத்தியுப்புகல்லுப்பின்பேர் புலத்தியனே சிவமென்பார் பரத்தைக்கேளுபூநீறுமதற்கடியில் அண்டப்போலே பூமியிலேதானி ருக்கும் தெரிந்திடாதே பூநீறும்அண்டமென்றால் சுக்கான்கல்லுபுலத் தியனேபேருலகம்புகழுங்கல்லு பூநீறுங்கல்லுப்பாஞ் சுண்ணாம்புகல் லுபூட்டிவிட்டொக்கறுப்பேனென்று சொல்லே. 307

சொல்லப்பாபரத்தினிடஉப்பிதப்பாசுகமாகமுன் றுமொன்றாய்ச் சுண்ணமானால் அல்லப்பா ஆதாரந்தன்னில்மூணு அப்பனேயதைச் சேர்க்கில் உயிருண்டாகும் வல்லென்றபெரியோரும் யோகியோரும் வாழ்ந்திருப்பாரிதைதானே பூசைசெய்துகல்லென்றகலைக்கருகேயிருப் பார்சொன்னால் காணரிதுகண்டவர்கள்கோடிக்கொன்றே. 308

### வெள்ளைக்குச் சூரணம்.

ஒன்றாகஇன்னமொரு சூரணங்கேள் உத்தமனேசந்தனமும் அகிற்கட்டையேலம், நன்றாகலவங்கப்பட்டை இரும்புசோம்புநன்மை பதிமதுராங்கார்போகவித்து சேன்றதோர் வெட்பாலைதேற்றான்வித்து றமான அருகம்வேர்சிற்றாமுட்டி பன்றாவேருடனேபன்னிரண்டு லகனே வகைக்குஅரைபலமாய்வாங்கே. 309

வாங்கியேவெயிலுலர்த்திச்சூரணமேசெய்து வண்மையுடனந்திடைக்குகற்கண்டுகூட்டி, தேங்கியேவொருகடிதான் அந்திசந்தி திரமானபசுவெண்ணை மண்டலமேகொள்ள, ஓங்கியேஒடுகிற வெள்ளை தீரும் உத்தமனே நீரொழிப்பிடனே தீரும், பாங்குடனே பத்தியமோ காரமாகா பரிவானபிலத்தியனேபாகமாமே. 310

## இஞ்சுச்சூரணம்.

பாகமாயின்னமொருசூரணங்கேள் பாங்கான இஞ்சிபலம் பத்து வாங்கி சோகமாய்த்தோல்போக்கிவில்லையாக்கி சுத்தமாய்பொன்வறுப்பாய்வறுத்து எகமாய்ப்பொடிசெய்து வைத்துக்கொண்டு எலமொடு திரிகடுகு கிராம்புஓமம், தாகமாய்வாலுழுவைச்சாதிக்காயுந் தருவான ஆனைதிப்பிலி சீரகமுமாமே. 311

ஆமப்பா அதிமதுரங் குரோசாணிஓமம் அமுக்கிரா கசகசாலவங்கப்பத்திரி, நாமப்பாமோடியுடக்கொத்தமல்லி நலமானபேரீச்சு மூந்திரிகைஒக்க தாமப்பாவகைக்குக்காற் பலமேவாங்கித் தருவானஇளவறுப்பாய்சூரணமேசெய்து ஓமப்பாசீனிபலம் பத்துக்கூட்டி உத்தமனே மூன்றுமொன்றாய் விரவிக்கொள்ளே. 312

விரவியேவொடிகடிதான் அந்திசந்திவிவரமுடன் மண்டலமே கொண்டாயானால், பரவியமந்தமுட னக்கினிமாந்தம் பாங்கான ஊஷ்ணத்தின் வாய்வுங்கூடக், காவியேபித்தமொடு பித்தவாய்வுங் காணுதேஓடுமடா தீபனமுண்டாகும், பிரவியென்ற வாதமெல்லா மொடுக்கிநல்ல பிலமுண்டாமின்னமொரு விவரங்கேளே. 313

## திராட்சசூரணம்.

கேளேநீமுந்திரிகை பேரீச்சோடு கிருபையுள்ளதக்கோல மதுரமுத்தம், வாளேநீகொத்தமல்லி அல்லிக்கிழங்கு வகையானசாதிக்காய்லவங்கஞ்சுக்கு, ஆளேநீகன்றூரி லவங்கப்பத்திரி அப்பனே தாளிசம் திப்பிலிவிலாமிச்ச, பாளேநீசிறுநாகப்பூ லவங்கப்பட்டை பாங்கானசந்தனமு மூங்கிலுப்பே. 314

உப்பானநெல்லிவிதை நெற்பொறியுமொக்கவுத்தமனேவகைக்கு ஒரு பலமாய்வாங்கி, செப்பாமல்சூரணித்து சமனிடைதான்சீனிசேர்த்துமேவொருகடிகாண் அந்திசந்தி, ஒப்பாககாலைசும்மா மண்டலந்தான் உத்தமனேபசுநெய்யில் மாலையிலுண்ணத், தப்பாத பத்தியமோ இல்லையப்பா தருவானவியாதிகளைச் சாற்றக்கேளே. 315

சாற்றக்கேள் பயித்தியமும் பாண்டுசோகைத் தருவானபித்தமொடு பிரத்தபித்தம், போற்றியேகாமாலைத்தாகசுரமும் வாங்கிப்

போமடாசயித்பமும் தீர்ந்துபோகும் வாழ்த்தக்கேளின்னமொருசூர ணந்தான் மைந்தனே திரிகடுகுமோடிகோஷ்டந் தோற்றியதோர்நெல் லிக்காய் சந்தனமுமாஞ்சில் சுகமான தாளிசை கிராம்புசீரகமே. 316

மந்தவாய்வுக்குச் சூரணம்.

சீரகமுமேலமொடு பச்சைகர்ப்பூரந் திரமாகச்சூரணித்துச் சீனி சமன்கூட்டி, காரணமாய்வெருகடிதான் அந்திசந்தி கனமாக உண்டி டவேபித்தமெல்லாம், பேசணியாய்நின்றதொரு ரத்தபித்தம் பிரமாக வெரிபித்தம் அரோசிகம்வாந்தி, தாரணியில்நில்லாது பத்தியமோ இல்லை தருவாகஇருபதுநாள் கொண்டுதேறே: 317

வாந்திபேதிக்குச் சூரணம்.

தேறவேயின்னமொரு சூரணங்கேள் திரமானஎட்டியுட வட வேர்வாங்கி, கூறவேமேல்தோலைப் பழச்சாற்றுலாட்டி குணமாகரவி யுலர்த்திச்சூரணமேசெய்து, மீறவேபதனமதாய் வைத்துக்கொண்டு மேன்மையுடன் புரமெரித்தார் தும்பைரெண்டும், ஏறவேகியாழமிட் டுச்சூரணந்தான் இன்பமுடன்கடலையிடையிட்டுக்கொள்ளே. 318

கொள்ளவேயுகபேதிதீருமப்பா குணமாகமீறியதுபேதியானல், விள்ளவேமறுபடியுங் கியாழத்தில்தாக்கு மீருகிறவாந்தியொடுபேதி வரும்,உள்ளவேகாதடைப்புசந்நிநோயை உத்தமனே தீருமடாமூன்று விசையிய, வள்ளவேவறுத்தரிசிகஞ்சிகொள்ளு மைந்தனேஊழியது பறக்குபாரே. 319

பறங்கிப்பட்டை சூரணம்.

பாரப்பாயின்னமொரு சூரணங்கேள் பறங்கியுடபட்டையொடு அமுக்குறுவும், நேரப்பாசெங்கத்தாரிவெம்பாடப்பட்டை நினைவாகத் திப்பிலியுஞ்சித்திரமூலம், சாரப்பாசமனிடையாகச்சமனித்துசமர்த் தாக ஆவின்பாற்பிட்டுவைத்து, காரப்பாபசுநெய்யில்வொருகடிதா னுண்ண காணுதுமூலைபுண்ணுப்பாகாகாதே. 320

கருஞ்சூரைச் சூரணம்.

உப்பாகாதின்னமொருசூரணங்கேள் உத்தமனேகருஞ்சூரைசித் திரமூலஞ், செப்பாதவெள்ளருகு மிளகரணைமிளகுஞ் சிறிகுறிஞ்சா * ஞகாசக்கிழங்குகருவேலும், உப்பானஉழலத்திவேருபட்டை ஒன் பதுமேசரியிடையாய்ச்சூரணித்து, அப்பாநீமுன்போலேபரிவிலிட்டு அருத்திடவேசுத்தியதாம் பின்புகேளே. 321

---

* ஆகாசக்கிழங்கு - ஆகாசகருடகிழங்கு.

### காட்டுக்கரணைச் சூரணம்.

கேளேநீயொருகடிதா னிரண்டுவேளை கிருபையுடன்பசுநெய்யில்
தீருநோய்கேள், பாளேநீகடிவிஷமும் குஷ்டரோகம் பாங்கானகருங்
கறுப்பான் கிரந்திசூலை, ஆளேநீபுண்கனெல்லாந் தீருமப்பா அப்
பனேவறுத்தவுப்பு துவரையாகும், வாளேநீயின்னமொரு சூரணங்
கேள் மைந்தனேபேய்கரணை கழஞ்சுபதினாறே. 322

பதியானசுக்குமே கழஞ்சுநாலு பாலகனேகொடிவேலி கழஞ்சு
ரண்டு, விதியானமிளகிரண்டு சூரணமேசெய்து மீறுமல்மூன்றுசுண்
டைக் காய்வீதந்தான், சதியாகவேழுநாள் அந்திசந்தி சாதகமாயெண்
ணெய் குழைத்துத்தின்ன, குதியான்மூலமுளை மூலரோகங் குண
மாகும்பத்தியமும் புளியாகாதே. 323

### சீந்திச் சூரணம்.

ஆகாதுயின்னமொரு சூரணங்கேள் அப்பனேசீந்தியிட சூர
ணத்தை, வாகானசுத்தகங்கை வன்னில்சுத்தி மைந்தனேமூவேழு
தாமேசெய்து, பாகாகஉலர்த்தியதை பால்விட்டுப்பிசரி பாலகனே
காயலைவத்து பலம்பத்தப்பா, நோகக்கரிசாலை சூரணங்கூட்டி நினை
வாகப் *பூநாகப் பூச்சிதன்னை. 324

தன்னையேபாவிவிடமண் ணெல்லாங்கக்குந் தருவாகப்பின்புலாத்
திச் சூரணமேசெய்து, ஒண்ணுமேபலமூன்று இடையுங்கூட்டி உத்த
மனேமூன்றுவிசை பொடித்துவடிகட்டி, நிண்ணமாய்வொருகடிதான்
நெய்யிற்கொள்ளை நிலையாதமேக மொடுவிசையீளை, சென்னமேகாச
மெட்டு இளைப்புகயரோகந் தொலையாத †இண்டவாய் வதிகமாமே.

வாயுவென்றவாதமொடு வாட்சிபித்தம் வகையாகத்திருமடா
தேனிற்கொள்ள, தேயுவென்றகர்மநோய் நாகப்புண்கள் தொலையாத
பீனசமும் தொலைந்துபோகும், பாயுமென்றசர்க்கரையிற் கொண்டால்
மைந்தா பாங்கானமயிர்வெட்டும் புழுவெட்டோடுங், காயமென்ற
காற்பிலமுங்கண் தெளிவுமுண்டாங் கருவாகப்புளிப்புகையுந் தவிர்க்
கச்சொல்லே. 326

### வாதசுரத்துக்குக் கியாழம்.

செல்லவேகியாழமொன்று விபாமாய்க்கேள் சுகமானபற்
பாடஞ் சீந்தில்முத்தம், அல்லவேமலைதாங்கி கண்டங்கத்திரி அப்
பனேசெம்முள்ளி முன்னைசக்கு, நல்லவேவகைக்கிரண்டு கழஞ்சு
கூட்டி நாழிநீரொட்டொன்றாய் மூன்றுநாளும், வெல்லவேயிருவேளை
குடிக்கும்போது மீண்டுவரும்வாதசுரம் விட்டுப்போமே. 327

---

* பூநாகப்பூச்சி - நாகப்பூச்சி. † கிரிச்சினம் - அற்பம்.

விட்டுபோம்வாதசுரங் தனக்குக்கேளு விதமானசுக்குமுள்ளி கண்டங்கத்திரி, வெட்டிபோய்மொருமல்லி சிற்றுமல்லி வேருடனே வகைவிதங் கழஞ்சுரண்டு, தட்டிப்போம்நாலுழிநீர் நாழியாககாய்ச்சி வடித்ததில்உழக்கு வறுத்தரியிட்டு, தெட்டியில்லாக்கஞ்சுபோல் காய்ச்சிக்கொள்ளக் கெடியானவாதசுரம் கிளரிப்போமே. 328

பித்தசுரத்திற்கு கியாழம் கஞ்சி.

கிளரிப்போந்தூதுவளை வேரினோடு கிருபையுள்ளசிந்திசுக்கு மதுரமாஞ்சி, அளரிபோம்பயறுமூத்தஞ் சிற்றுமுட்டி அப்பனேமுன் போலே கியாழங்கொள்ள, உளரிப்போம்பித்தசுரங் கஞ்சிகேளு உத் தமனேவில்வவேர் மதுரஞ்சுக்கு, முளரிப்போமிலுப்பைவேர் சிற்று முட்டி முன்போலக்கஞ்சிகொள்ள முறைமையாமே. 329

சேத்தும சுரத்திற்கு கியாழம், கஞ்சி.

முறைமையென்றதூதுவளை கண்டங்கத்திரி முயன்றதொரு செம்முள்ளி சுண்டைவேரும், வறுமையென்றசுக்குடனே கியாழம் பண்ணி வகையானதிப்பிலித்தூள் போட்டருந்த அருமையென்ற சேத்துமத்தின் சுரமுந்தீரும் அப்பனேகஞ்சிவகை பாதரியும்வில்வம் உரிமையென்ற பெருங்குமிழம் வேரில்முனபோல் உத்தமனேகஞ்சி யிடசேத்துமசுரம்போமே. 330

குளிர் சுரத்துக்குக் கியாழம்.

போமப்பாசீரகமும் * குறுந்தொட்டிவேரும் புண்ணியனே கியாழமிட குளிர்சுரங்கள், ஆமப்பாவிஷசுரமும் போகும்போகும் அப்பனேவெள்ளுள்ளி வசம்புமஞ்சள், காமடாகொடிவேலி யிந்துப் போடு சாரணைவேர்முருங்கைவேர் கியாழங்கொள்ள, போமப்பா வாயினிட வயிற்றுவலிதீரும் புலத்தியனேயின்னமொரு கியாழங் கேளே. 331

கியாழமென்றதூதுவளை கண்டங்கத்திரி கிருபையுடன்முட்கா வேளை சுக்குமொன்றாய், கியாழமிட்டுத்திப்பிலிதூள் தூவிக்கொள்ள கிருபையுள்ளசந்நியுட சூதகத்தின், கியாழத்தில்வாய்வுடனே வலிப்பு தீருங் கிருபையுடன்நெல்லிக்கு கருவேம்பிர்க்கு, கியாழமுடனரிகம் வேர் பிடித்தானென்று கிருபையுடன்மூன்றறுப்பாய் அரிந்து போடே. 332

போட்டினன்மிளகுகொஞ்சம் உடைத்துப்போட்டுப் புண்ணி யனேதான்வறுத்து அறக்கிப்போட்டு, நாட்டியேஅருகம்வேர்க் கணியபோக்கிப்போட்டு நன்மையுடனிளவலுப்பாய் வறுத்துத்தண் ணீர், காட்டுவாயொருபடிநீர் விட்டுப்பின்பு கணக்காகக் கிராம்புஐந்து வருத்துப்போட்டு, தாட்டிகமாயெட்டொன்று யிருத்துக்கொண்டு தருவானபாக்களவு வெண்ணெய்போடே. 333

* குறுந்தொட்டி - பூனைக்காஞ்சொறி.

மூலக்கியாழம் இரசவேக்காட்டுக்கியாழம்.

வெண்ணெயிட்டு உள்ளுக்குக்கொடுத்தாயானால் வியாதியதுதீரு கிறவிதந்தான்கேளு, நன்மையுடன்கர்ப்பஸ்ரீ சூடுதாங்கை சலகட்டு மலக்கட்டுந்தீருமப்பா, வண்மையுடன்வலாமிச்சை லவங்கப்பட்டை, மாமஞ்சள் கியாழமிட மூலமுந்தீரும், நண்ணயமாய்க் கருவேலிவெள் வேலம்பட்டை நலமான துளசிவேர் எருக்கம்வேர்தான். 334

தானென்றாய்க்கியாயமிட்டுக் கொப்பளிக்கதருவான சத்தினுட வேக்காடாறு நானன்றாய்ச்சோதித்துப் பார்த்தேனப்பா நாய்ச்சூலை வாய்ச்சூலையிரண்டுந்தீருந், தானன்றாய்ச்செய்துஇதைக் கொப்பளிக் கத் தருவானதந்தமெல்லாமிறுகுமப்பா வானென்றகந்தகத்தைப் பசு வெண்ணெயிட்டுமைந்தனே தானரைத்துதுணியிற்பூசே. 335

பூசியேஉருட்டியதைக்கதிரில்கோத்து புலத்தியனே தீய்க்கொ ளுத்தியெரியும்போது ஆதியேஅடியிலேபீங்கான்வைக்க அப்பனே சுடர்த்தயிலமிரங்கும்பாரு, தேசிகனேபதனமாய் வைத்துக்கொண்டு திறமாகமூன்றுதுளி மூக்கிலூற்ற, தூதனத்தால் மூக்கறுக்க வந்த நோய்தான் துலேங்துவிடும் பத்துநாளூற்றும்போதே. 336

உற்றதேபோனக்கால் நோய்தீராது உத்தமனேயெளியோரைப் பெரியோர்தன்னை, சாற்றியேகற்புடைய மங்கையோரைத்தருவாக மொக்கைகுலத்ததினாலப்பா, தேற்றியதோர்அரசர்களைப் பருத்தா ரானால் சீக்கிரத்தில்மூக்கறுத்துக் காங்கைகொய்வார், பார்த்திருந்து யோகிகளைப்பழித்ததோஷம் பாவமதால்மூக்கறுகும் பழவினையாம் பாரே. 337

நசியம்.

பழவினையாந்தீராதுபாவிமார்க்கு புரிவானபுலத்தியனே மருந் தீயாதே, உழவினையாடுடாடிக்கொல்லாமட்டும் உலுத்தருக்குத்தீராது உறுதிசொன்னேன், கழவினையுந்தானகற்ற பெரியோருக்குக்கால் பிடித்து ஏவல்செய்துகாத்திருந்தால், பழவினையுந்தானகலுமருந்து கேளுபாங்கானநிம்ப எண்ணெப்படியரைக்கால்வாங்கே. 338

ஊழ்வினை எதுகைநோக்கி உழவினையெனமருவியது.

வாங்கியதில்திரிகடுகு தான்றிக்காயும்மைந்தனேமிளகோடு கஸ் தூரிமஞ்சள், தாங்கிநின்றகார்கோலும் வேப்பமுத்துத் தருவாகக் கழஞ்சியரைப்பொடித்துப்போட்டு, வேங்கநின்றவிப்புடன்தானேழு நாள்வைத்திருப்ப வகைவாசலிலே வைத்துமைந்தா, ஓங்கிநின்ற இரவிதனைநமஸ்கரித்து உத்தமனேமூன்றுதுளி மூக்கிலூற்றே. 339

மூக்கிலேமூன்றுநாள் விட்டாயானால் முழுவினையால்வந்ததொரு பீநசமேதீரும், மூக்கிலே ரானையுங் கிழங்கிநதுப்பு மிளகுடனே சீனிவகைகழஞ்சுரண்டு, மூக்கிலேமுலைப்பாலா லரைத்துநெய்யில் மூன்றுநாள் ரவியிலேவைத்துவிட்டு, மூக்கிலேசீர்ப்பாசல் பீநசமே தீரும்முறையாக இன்னமொரு கிரிதானகேளே. 340

## பீநசத்துக்குத்திரி.

திரியென்ன பூவரசம்வெள்ளெருக்கின்வேரும் திறமானமலை தாங்கி கஸ்தூரிமஞ்சள், உரமானசிறுநாகம் வெடியுப்பும்புழுகும் உத்தமனே புகையிலைச்சார்விட்டுஆட்டி, திறமாகச்சீலையிலே புறட்டிக் கொண்டு தீர்க்கமாயனற்கொளுத்தி நாசிக்கேற்ற பரமானபீநசமும் புருவுங்கூட பாலகனே தீர்ந்துவிடும் பாகங்கேளே. 341

## சிரசுநோய்பீநகம் சிரச்சூலைக்குத்தயிலம்.

கேளப்பாநெல்லிக்காய்சாறுநாழி கிருபையுடன் கரிசாலைச்சாறு நாழி, ஆளப்பாபசுவின்பால் எள்ளெண்ணைநாழி அதிமதுரம்பல மரைத்துக்கலக்கிக்காய்ச்சி, வேலப்பாதலைமுழுகி சிரசிலுள்ளநோய்கள்விலகுமடாபீநசமும் சிரசிற்சூடும், ஏலப்பாபறந்திடுங்கண் தெளிவுமாகும் இன்பமுடனின்னமொரு தயிலங்கேளே. 342

## கபாலசூலைக்கு சவுரித்தயிலம்.

கேளப்பாசவுரியிடப் பழச்சாறுநாழி கிருபையுடன் பொடுதலையின்சாறுநாழி கேளப்பாபசுவிடப்பால்நாழி விதமானமிளகுபலம் நல்லெண்ணைநாழி, தாளப்பாகலக்கியதை மெழுகுபோலதான்வடித்த எண்ணைதலைமுடிக்கும்போது, கேளப்பாவொன்றுமில்லை மிளகுநீருங் கூட்டியேசாதமுண்ணும் போகம்நீக்கே. 343

நீக்கவே தீருகிறவியாதிகேளு நிலையானகபாலவலி கபாலக்குத்து, போக்குமேபீனசங்கள் மண்டைசூலை பொல்லாதநேத்திரத்தின்மாசிதீரும், வாக்குமேநீர்க்கடம்புமேகச்சூடு வாங்குமடாதைலமதுவாரந்தோறும் தாக்குமேதவறாமல் மூழ்கிவாநீ தண்மைபுள்ள நோய்களெல்லாம் தவறிப்போமே. 344

## சிவயோகி கற்பம்.

தவறிப்போஞ் சிவயோகம்செய்வோர்க்கெல்லாந் தண்டையுள்ள எள்ளெண்ணை நீக்கிமைந்தா, சவரிச்சார்பொடுதலைச்சார் பசுவின் பாலுஞ்சமன்கூட்டி குளகிட்டுக்காய்ச்சிமூழ்க தவறிப்போமுன்சொன்னவியாதிதீருந் தண்மையுடன் சிவயோகங் கேளுமைந்தா வுவமானஞ்சொல்லுகிறேன் மூலவன்னி அப்பனேசாங்கியடா செந்தீ தானே. 345

செந்தியென்ற உந்தியிலேலமைந்தாகேளு சிவசிவாகங்கைசிவகங் கையுண்டு, சொந்தமுடன் தங்கிலேயடுத்துக்கொண்டு சுத்தமுள்ளகங் கைதனைசுகமாய்நீயும், அந்திசந்திகொண்டதனுல் அய்யாகேளு ஆதா ரமானசிவமூலாதாரம், எந்தவிதமென்றறிந்து சொல்லப்போறேன் ஏகநிராமயமான மூலந்தானே. 346

அகாரஉகாரதீட்சை பூரணமகிமை.

தானென்ற ஆதாரமூலம்பார்க்கச் சாதகத்தைச்சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு, கோமென்றகுருவருளா லகாரதீட்சைகொண்டபின் புஉகாரமடாசத்திதீட்சை வாவென்றமவுனமடா மகாரதீட்சைமார்க்க முடனுருவறிந்து தீட்சைபெற்றால் தேனென்ற அமிர்தகற்பத்தாலே மைந்தா திடமில்லாக்காயமது சித்திதானே. 347

தானென்ற சித்தியதுயோகமார்க்கந் தனையறிந்தமூலமடாபிரம ஞானம், வானென்றஞானமடா கேசரியின்றீபம் மௌனத்திலாள துவு மூலத்தீப்தான், ஓமென்றதீயதுதான் உந்தியுந்தி ஒமுடிந்த ஆ வியடாபிராணயந்தான் தேனென்றநாதமடா சிலம்பிேைசை தீக்க டங்காஓசையைநீ செவியிற்கேளே. 348

செவியானஆகாச மோசைமைந்தா தீர்க்கமென்றமூலமதில்நா விதன்னால்தவியாதவாசியடாமேகமாச்சு சங்கையுள்ளமேகமது ரவி யுனவிகுவியாதரவியுடனே மேகஞ்சேர்த்து, குமுறெளிசத்தமாய்ச் சலமுமாச்சு அவியாதமேகசலந் தன்னால்மைந்தா அண்டசராசரங்க ளெல்லா முயிருண்டாச்சே. 349

உண்டானசோதியப்பாபுலத்தியனேகேளு உரைத்துவிட்டபூர ணமாய்நானூற்றுள்ளே கண்டாயேபூரணமும்நாலுநீற்றில் கண்டெடு த்துசொன்னபொரு ளிந்தநூல்தான் விண்டனடா அதில்சொன்ன கருக்களெல்லாம் வேதாந்தயோகியர்க்கு விளக்கமாகும் பண்டுபோ விதிற்கருக்கள் தெளிவாய்ச்சொன்னேன் பதனமப்பாயின்னமொரு தயிலங்கேளே. 350

கந்தகத்தயிலம்.

தயிலங்கேள்கந்தகமும்வெடியுப்புச்சீலையுந் தருவாகப்பலமொன் றுப் பொடிக்கும்போது, அயிலமென்ற நவாச்சாரம்வீரந்தானு மப் பனேயளைகழஞ்சு கூடப்போட்டு, ஓயிலாகப்பலம்நாலு பசுவின் வெண்ணை உத்தமனேகல்வத்திலிட்டுஆட்டி, தயிலமப்பாமுன்போலச் சுடர்த்தயிலம்வாங்கித் தருவானபீங்கானிற் பதனம்பண்ணே. 351

பண்ணியே பணவிடைதானந்திசந்திபத்துநாள் சர்க்கரையிற் கொள்ளும்போது, உண்ணவேபத்தியமோ இல்லைகண்டாய் உத்தம னேநீங்குகிறவியாதிகேளு நண்ணவேகுஷ்டசொறி விரணம்வெள்ளை நலமானகருமேகம்வாதவாய்வு திண்ணவேக்ஷயரோகங் குன்மவலி கூடத் தீருமடா இன்னமொரு செய்திகேளே. 352

மூதண்டக்கியாழம்.

செய்தியென்னகூடிகொண்டால்மருந்தினாலே தீருதற்கு அறுகம் வேர்பலம்பத்தம்பா னைந்துமேயதிமதுரங்கூகைநீறும்நலமான மாத ளம்பூ மிளகினோடுகொய்துமே பலமரைதான்கூடப்போட்டு என் மகனே அறுபடிநீரெட்டொன்றாக்கிகொய்துமே காற்படிநீர் பாக்களவு வெண்ணெ கூட்டியேமூணுநாள் காலமேகொள்ள. 353

சன்னிக்குத் தயிலம்.

கொள்ளவேவீறுடனே கடுப்பும்போகும் குணமானசந்நியிடத யிலங்கேளு, விள்ளவேமாவிலிங்கம் புனல்முருங்கக்காயும் விளாவின் வேர் நொச்சிவேரெருக்கன்வேரும், கள்ளவேசொன்னகரைவாதமடக் கக்கருவானபட்டைபல மாறேடொக்க, வள்ளலேபலமிரண்டும் யில்பீலிதானும் வண்மையுடன்எட்டியிடகுறுணியாமே. 354

குறுணியாமித்தனையுமிடித்துப்பாண்டங் கூட்டியேவேப்பெண் ணெபுங்கனெண்ணெ, கருணமாயெள்ளெண்ணெபடியரையாய்வார்த்துத் தயவாகத்தான்பிசறிமேலோடுமூடி, அருணமாய்ச்சீலைமண் வலுவாய்ச் செய்து அப்பனேயடியிலே தமருதான்போட்டு, வருணவாய்க்குழி வெட்டிப்பல்லாய்வைத்து மைந்தனேபல்லாவாய்ப்பானைத்தூரே. 355

தூரெல்லாம்மண்பூசிப் புகைபோகாமல் துரிதமுடன்சாணமேற் றிச்சுத்திக்கேளு பாரெல்லாந்தானெரியக்கனல்வாய்ப்போட்டு பாங் கானகலயத்தில்தயிலம்வீழும், நேரானகுழித்தயிலம்பதனம்பண்ணு கினைவாகமேல்பூசிப் பிடித்துவரும்போது, பாரெல்லாஞ்சந்நியொடு வலிப்புசிப்பு பாங்கானமுடக்கம்பாரிசவாயு. 356

காதுமாந்தத்துக்குச் சிரசில்தேய்க்கற்றயிலம்.

வாயுவெல்லாம்போகுமடா தயிலந்தன்னில் வண்மையுடன்காது கேளாமற்போனால், நேயுவென்றநல்லெண்ணெபடிகால்தன்னில் நிலப் பனையுங்காற்பலந்தான் பொடித்துக்காய்ச்சி, பாயுவென்றபாதமிரண் டடில்தேய்நீ பதனமாய்ப் பக்குவமாய் மண்டலந்தான், ஓயுவென்

நகல்லெண்ணெபடிநாலுக்கு ளுத்தமனே கொடுவேலிப்பட்டைபலங் காலே. 357

காதுகுத்திரைச்சலுக்குத்தயிலம்.

காலப்பா மூலைப்பால் விட்டரைத்துக்காய்ச்சிக் கனமாகத்தினங் கொஞ்சம் சிரசில்தேய்த்து மேலப்பாமண்டலமிப் பாரண்டெண்ணெ மேன்மையுடன் ளுன்றேய்க்காதுமந்தம் பால்போலே தீர்ந்துபோகுங் குத்திரைச்சலுக்குப் பாங்கான கொள்ளிக்காய் கொழுஞ்சிவேரும் நாளப்பா கழஞ்சுமேல் தோலரைத்து நன்மையுடன் முலைப்பாலால் நன்ளுயாட்டே. 358

ஆட்டியேகாற்படிநல் லெண்ணெய்தன்னில் அன்பாகக்காய்ச்சி யதிலஞ்சி துளிவிட்டு யாட்டியே காதுக்குள் பஞ்சடைத்து வைக்கப் பருவாகக் காதிரைச்சல் காதுகுத்தல்-ஓட்டியேகாதுநோய் போகுமப் பா உத்தமனே பல்வலிக்கு மறுபாகத்தில்-நாட்டியே கதைவேளையறு கம்புல்லும் நலமாகத் தட்டியதைக் கசக்கிக்கேளே. 359

அறுகம்வேர்த்தயிலம்.

கசக்கியே மறுபாகங் காதில்தானும் கடுகவேமூனு துளிவிட்டாற் போகும்-கசக்கிடவேமுகவாதந் தந்தரோகம் நன்மையில்லா ஒருதலை வலியும் போகும்-பசக்கியே பின்னமொரு தயிலங்கேளு பாங்கான அறுகம்வேர் பலம்பத்தப்பா கொசக்கியேமானத்தில்குருணி நீர்தான் சுகமாக எட்டொன்ளு யிறுத்துக்கொள்ளே. 360

இறுத்து நீயெள்ளெண்ணெய்படிதான்கூட்டி என்மகனேவெட் டிவேர் கார்கோவில்வித்து நெருக்கியே கோஷ்டமுடன் கழஞ்சுவீதம் நெகவரைத்துத் தயிலமதைநீரில்தமல்-கருவாகக் காய்ச்சியதைமுழு கும்போது கனகனத்தமண்டையிடி சிரசில்பித்தம்-வருத்தமுள்ள மஞ்சள்நீரத்தமூத்திரம் மகத்தானமேகநோய் தணிந்துபோமே.

போமப்பா உஷ்துங்கள் நேத்ரவாயு பொல்லாதசயித்தியமும் பயித்தியமுங்கூட-நாமப்பாமூதண்ட தயிலநிகண்டால் நன்மையில்லா நோய்களெல்லாம் நாடாதப்பா-தாமப்பாபித்தமென்ற வியாதிபோ கும் தயவானசந்தனுகியிதிற்கொல்லாது-வேமப்பா விஷங்களுக்குக் குழம்புவேளுவேப்பமுத்துரசகெந்தி துருகவெள்ளை. 362

விஷங்களுக்குக் குழம்பு.

வெள்ளையொடுமனேசிலையும் பெருங்காய மேழுமேன்மையாய் வகைக்கு அரைக்குகழஞ்சுகூட்டி-தள்ளையென்றநேர்வாளஞ் சுத்தி

செய்துதருவாகக்கழஞ்சதுவுமேழுமென்றாய்-வள்ளலே கல்வத்திலிட் டெருக்கம்பாலால் மாட்டியரை ஒருசாமமெழுகுபோல-துள்ளவே பின்பு () நிம்பநெய்தான்விட்டுக் துருசாகவொருசாமமரைத்றுகேளே.

()நிம்பநெய்-வேப்பநெய்.

அரைத்துமதைக் கொம்புசிமிழ் தன்னில்வைத்து அப்பனே விஷத்தீண்டி வந்தபேர்க்கு-திரத்துடனே பயிறளவுவெற்றிலையிலிய் ந்துதீர்க்கமுடன்கடிவாயிற் கொஞ்சம்பூச பறந்துவிடுஞ் சகலவிஷம் போகுமென்று பாடினதுவடமொழிநூல் பாகமப்பா-உரைத்துவிட் டேன் பத்தியந்தான் பசுமோராகும் உத்தமனேசங்கிக்குக்கலிக்கங் கேளே. 364

கேளப்பா மருக்கரைப்பழத்தை நீயுங்கிருபையுடனுடைத்து அதின்விரையில்தானும்-பாளப்பா பிசினிருக்குங் வாங்கிக்கொள்ளு பாலகனேவிரையெல்லாம்நீக்கிப்போடு-தாளப்பா பயறுபோலுருட் டிக்கொண்டு தருவாக வெள்ளச்சாரணைவேளையோடு-கேளப்பா வெற் றிலையுங்கசக்கிச்சாற்றில் கிருபையுடன் தானரைத்து விழியில் போடே. 365

ஆக்கிராண நசியம்.

போடவேசங்கியொடு பிடரிநோயும் பொல்லாதஉடம்புநோய் நீரேற்றங்கள்-சாடவேஓடிப்போ மின்னமொன்று சாற்றுகிறேனுக்கி ராணந்தயவாய்க்கேளு-நாடவேகாட்டெருவில் எருக்கம்பாலைநாலாறு விசை யடித்துக்காயப்போட்டு-தேடவேபுடம்போட்டுச் சாம்பல்தன் னைத்திரமாகநாசியிலே ஏற்றுவாயே. 366

கண்வியாதிக்கு மருந்து.

ஏற்றவேசலதோஷ மண்டைக்குத்து ஏற்றமென்றநீரேற்றமெல் லாம்போகும்-பார்த்திபனே கண்ணிலுள்ளவியாதிபோகும் பாடுகி றேன் () சம்பழத்தில் தூற்றுளட்டு-தோற்றாமல் துளைதுளைத்துல வுங்காட்டித் துரிதமுடன் கயிர்கோர்த்துச் சட்டியிலேதாக்கிப் பார்த் தாலே விலாங்காய்போல் பசுவின்வெண்ணெய் பாலகனேலவங்க மெல்லாம்பரப்பிமூடே. 367

() சம்பழம்-எலுமிச்சம்பழம்.

மூடியேயச்சட்டிதனில்படாமல் மூர்க்கமுடன்சுத்தகங்கைவிட்டு வைநீ-நாடியேசாற்பதுநாள் வேறேவேறே நலமானசுத்தகங்கை விட்டுவைத்து-தீடியேபிறகுவெண்ணெய் தலையெடுத்துத் திறமான

தாம்பரத்தின் ப்ரத்ணிலே வைத்து - சாடியே பழமுடனே லங்கப் பூவுந்தள்ளிவிடு வெண்ணெய்தனைக் கண்ணில்தீற்றே. 368

தீற்றிடவேசலம்வீழு மெரிப்புண்டாகுந் திறமாகச் சீலையினுற் றுடைக்கநிற்கும் - பாற்றிடவே மண்டலந்தான் கண்ணில் தீற்றல் மாறுத நேத்திரமாய் மாறுமென்றும்-போற்றிடவே யென்குரு வேதியர்தானிந்தப் புத்தகத்தின் பெருமையினுற் புகன்றதோடா தோற்றிடாவுலகத்தி லெளியோருண்டு துரையானதுரைமக்க ளரசருண்டே.

வயித்தியதருமம்.

அரசமென்றல் பொருள் கொடுத்து நோய்தீர்த்துகொள்வா ரதனுலே யுந்தனுக்குத் தருமமில்லை-நீசமென்று லெளியோர்க்கு வயித்தியஞ்செய்ய நிலையானதருமமது நிலைக்குமென்று-பிரியமுடனென்குரு வேதியர்தான் சொன்னூர் பிள்ளையென்று புலத்தியனே யுனக்குச் சொன்னேன்-பரிசனமாய் மனதில்வைத்தால் முந்திசேர்வாய் பாலகனே யிதைமறந்தால் பலித்திடாதே. 370

பலித்திட வேணுமென்றல் புலத்தியனே ஐபாபாரிலுள்ள வுயிரெல்லாந் தன்னுயிர்போலெண்ணி-சலித்திடாயொருபோதுந் தருமஞ்செய்யச் சந்தையங்கள்செய்யாதே சதிசெய்யாதே-சலித்திடவே கருமத்தால் பிறவிகிட்டுந் தருமத்தால் சாயுச்யபதவிகிட்டும் - சலித்திடாய் சற்குருவை யடுத்துக்காரு சதாகாலஞ் சதாசிவனைப் போற்றிப்பாரே. 371

சர்ப்பவியாதிக்கு எண்ணெய்.

போற்றினுலின்னமொரு எண்ணெய்கேளு புலத்தியனேபிள்ளையில்லா மலடியோர்க்கு-சாற்றுறேன் றேமோரண்ட எண்ணெய் நாழிதைவேளை யிலையுடனே யேரண்டத்திலையும், பார்த்திட வ மஞ்சளொடு கடுக்கா யிந்துப்பு பரிவான வெண்காரம் வெள்ளைப்பூண்டு தொர்த்திடவே கடுகுடனே விழுதி நிலாவரையுந் தொகையவைத்து கைமூன்று பலமாய்த்தூக்கே. 372

தூக்கியே யம்மியிலே மைபோலாட்டித் துரிதமுடன் வெண்ணெயிலே கலக்கிக் காய்ச்சி-தாக்கியே மெழுகுபதமாய் வடித்து தருவான குப்பியிலே பதனம்பண்ணி வாக்கிலே வடிக்குமுன்னே கழஞ்சு நிறையப்பா வண்மையுள்ள கள்ளிப்பால் கூட்டிக்கொண்டு-தேக்கியே காண்டி நிறைநாலு நாள்கொண்டு திறமாக மூன்றுநாள் கொடுத்துக் கேளே. 373

கேளப்பா பத்தியமோ உப்பாகாது கிருபையுடன் மூன்றுவிசை கொடுத்தாயானால் யாளப்பா சூககத்தின் வாயுகுத்துப் பக்கத்திற் சூலையுடன் வயிற்றுவலி தீர்ந்து-நாளப்பா பெண்களுக்குக் கர்ப்ப முண்டாம் நானூறு வயித்திய பூரணமாய்ச் சொன்னேன்-கேளப்பா ஒருநாளுமில்லை யில்லை குணமாக வின்னமொரு எண்ணெய்கேளே.

### சகலமேக எண்ணெய்.

எண்ணெயென்ற மேகவெண்ணெய் சொல்லக்கேளு மோண்ட எண்ணெய்படி யீருள்ளிச்சார், நன்னயமாய்த் தேசிச்சார் செம்பொ னெருஞ்சி லமான கரிசாலை கற்பூரவள்ளி - பின்னையென்ற பூவரசங் காப்பு சங்கங்குங்குப்பி பிரியமுடன் வகைக்குச்சா படியரைக்கால் சொன்ன மெழுகுபதமாகக் காய்ச்சிச் சோதனைக்கு ஏழுநாளுப்பா காதே. 375

### தேசிச்சாறு எலுமிச்சம்பழச்சாறு.

உப்பில்லாப் பத்தியமாய்க் குடிக்கும்போது உள்ளுருகிமேக நோய் உட்டினங்கள், உப்பில்லாக் கிரந்தியொடு அரையாப்புப்போ குந் தயவான யோனிப்புண் வெடிசூலை தீரும், ஒப்பில்லா மேகத்தின் வாயுகூட ஓடுமடா இதுவேது வயித்தியந்தான் - சொற்பமாய்ப் பாடி விட்டே னிந்தநூலில் சோதனைக்குப் பூரணத்தை கூடிப்பாரே. 376

### பூரணநூல் மகுத்துவஞானம்.

போற்றினாலுன துவினை யகலுமப்பா பிறவியில்லாப் பதவியிலே புனிதமாவாய்-போற்றினால் பூரணமுங்கூடப்பேசும் பூதலத்தில் நீயு மொரு சித்தனாவாய் - போற்றினாலென்ன பலனில்லை யென்றால் பொதியமலை யெனக்கேது புலத்தியாகேள்-போற்றினேனும் பூரணத் தின் கிருபைகண்டோம் புத்தியுடன் தானேதான் பூண்டுபாரே. 377

தானான ஆதார சொரூபந்தன்னைச் சமர்த்தாகத் தானறிந்து தியானம்செய்து-தேனான புலத்தியனே யறிவால்தானும் தேகத்தி லுயிர்கிவமாய்த் தெரிந்துகொண்டு வானான கேசரியில் மனக்கண் வைத்து மனங்கனிந்து ஓங்றீங்அங் என்றோத - கோனான ஆதார பூசைதானும் கோடான பூசைசெய்த பலத்துக்கொப்பே. 378

ஒப்பென்றால் மனம்நிலைக்க உறுதிகேளு ஓமென்ற பிரணவமே மூலபீடம்-செய்கின்ற பீடமதில் றீங்காரவாலை சென்றிருந்த அகார மது சிவமுமாச்சு குப்பென்று தானெழுந்து வாசியாக்கிக் கொண்டு நின்றதிரு வாசியமாவாசை-அப்பனே அகார அமாவாசை யறிந்து கொண்டு பௌர்ணையில் பூசைபண்ணே. 379

பூசையென்று லந்திசந்தி பூசைபண்ணு புண்ணியனே காயாதி கற்பமகொண்டு-நேசமுடன் பூரணத்தைத் தினமும் போற்றிநினைவாக

வுனதுசடம்நிலைத்துப்போகும் பாசமென்றபாசமதை விலக்கிமைந்தா பக்குவமாயகாரமென்றால் சத்திசிவமாச்சு, பேசவொண்ணுச்சத்திசிந் மூலந்தன்னைப் பொருமையுடன் தன்னிடமாய்ப் பேணிக்காணே.

காணப்பாமயேந்திர மாங்கிரிக்கடுத்துக் கணநாதர்களைநோக்கிப் பூசைசெய்தால், தோணப்பா அம்மலையில்வாழுஞ்சாரை சுத்தமுள்ள வெண்சாரை நிலத்திற்பாயும், சாணப்பாபூமியிலே பாய்ந்தபின்பு சம ர்த்தாகமையமதிற் பிடித்துக்கொண்டால், ஊணப்பாபிடித்தபிடி கையில்தங்கு முத்தமனேரண்டுதுண்டு மொன்றும்பாரே. 381

ஒன்றாகப்பூமியிலேஓடிப்போகு முண்மையுடன்பிடித்தபிடி யுள் ளேகொள்ளு-நன்றாகவருஷமொன்று அந்திசந்திநாட்டமுடன்கொண் டுவரும்போதிலேதான் பண்டானவாசியது பாயாதப்பா பகர்ஞான காயமதுசித்தியுண்டாம் சென்றுடப்பத்தியந்தான் கடுகெள்ளெண் ணெய்திறமான சையோக மூன்றாகாதே. 382

மூலகிரி.

ஆகாதுஆண்டொன்றுசிவத்தெப்பூசி அப்பனேசத்தியிடகற்பங் கேளு-போகாதமூலகிரி தன்னில்நீயும் புத்தியுடன்சென்று தவஞ் செய்தாயானல்-ஆகாசந்தனிலிருந்துமூசிதன்னி லந்தாமாய்க்கருஞ் சாரைபாயுமுன்னே-வாகாசமந்திரந்தான் உம்மென்றோதித்தப்பித்து கடுமையம் பிடித்துக்கொள்ளே. 383

கொள்ளப்பாஆண்டொன்பது அந்திசந்தி குணமாகக்கொண்டு வரக் குணத்தைக்கேளு பிள்ளப்பாமூலத்தில் அனலேமீறிப் பித்த மதுமேற்கொண்டு செந்தீபற்றி துள்ளவேதேகமது இளைத்துக்கண் டால் தூங்கவேமூதண்டக் கியாழங்கொள்ளு நள்ளப்பாஉகாரமதைப் பூசைசெய்ய நரையானதிரைசகன்று நாட்டங்காணும். 384

நாட்டமென்றால்சுழிமுனையில் நாட்டங்காணும் நடுமனையில்தீப ஒளிநன்றாய்த்தோணும்-தோட்டமென்றபூரணத்தின் தீபங்கண்டால் திறமானதேகமது வலுத்துப்போச்சு கூட்டமென்ற சிவசத்திபூசை செய்து குணமானரண்டுகற்பங் கொண்டபின்பு பாட்டமென்னகாலை யிலே சிவத்தைபூசி பாலகனேமாலையிலே யுகாரங்கொள்ளே. 385

கொள்ளவே ஆண்டுமொருமூன்றுசென்றால் குணமானசட்டை யதுமூன்றுநீங்கி விள்ளவேஆண்டுனக்கு முந்நூறுண்டு மிஞ்சாது குறையாதுநித்திரையும் நீங்கிவள்ளலார்த்திருநடனட வெளியாய்த்

தோணுமைந்தனே ரவிமதியு மொன்றாய்க்காணும் மெள்ளவேவாசி
யென்றகுதிரையேறி மேலானபோதகிரி யுச்சம்பாரா. 386

### போதகிரி.

உச்சமென்றபோதகிரி யுச்சந்தன்னில் உண்மையுடன்கற்பூர
தீபம்போலே பட்சமுடன்சதாசிவமும்நாமுங்கூடப் பதினெட்டுச்சித்
தர்களுமங்கிருப்போம் இச்சையுடன்போதகிரி தன்னிலென்னை யேறி
வந்துகண்டவுடனின்பமாக அச்சமென்ற அச்சமதையகற்றிமைந்தா
அழியாதபதவியுனக் களிப்போம்பாரே. 387

பாரப்பாபோதகிரி யார்தான்காண்பார் பாலகனேநவசித்தர்
பார்த்தபோதம் நோப்பாபோதமென்றால் சிவபோதந்தான் நிலையாத
போதத்தை நிலைத்தோன் காண்பான்-மோப்பாஉச்சமென்ற போதங்
கண்டு மேன்மையுடனழியாத பதவிபெற்றால் சாரப்பாசதாநந்தி
மணியையீயும் சார்ந்ததினாலுனதுவினை தவறிப்போமே. 388

### சிவராசயோகம்.

தவறிப்போஞ்சிவராச யோகங்கண்டால் தாரணியில்மற்றமற்ற
யோகமெல்லாந் தவறிப்போம்முச்சுடரு மொன்றாய்க்கண்டால் தாழ்
வானபிறப்பிறப்புந் தன்மையாகித்தவறாமல் ஞானவழிகண்டுமைந்தா
தன்மையுடன் முக்கோணத்தறுகோணத்துள் தவறிப்போகாற்
கோணம் ஐங்கோணத்துள் சதாசிவனொளிகண்டு வெளிகண்
டோர்க்கே. 389

கண்டோர்க்கே நாதவொலிகாதில்கேட்கும் காணாதமடையருக்கு
வெளிதோணாது பண்டோர்க்குவிட்டகுறை பற்றியேரும்பாவியர்க்
குக்கிடைத்தாலு மெட்டாதப்பா-விண்டோர்க்குக் கோடிபலனுண்டு
சொன்னேன் விணருக்குவிண்டதினால் நரகமெய்தும் அண்டர்பிரா
னருளதனாலிந்தநூல்தான் ஆதிதொடுத்தம்வரை யடைவாய்ச்
சொன்னேன். 390

சொன்னபடிநூல்தோறு மொளித்தசேதி சுத்தமுடனிச்சய
மாய்த்தோணச்சொன்னேன், முன்னேநான் பெருநூல்கள் அனந்
தஞ்சொன்னேன்; மிச்சமிந்தநூல்போலே யொன்றுங்காணேன்-கண்
ணான லத்தியனேயிந்தநூலைக் காட்டாதேவுலகருக்குங் காட்டிடா
தேவின்புணருஞ் சித்தர்களும் யோகியோரும் வேதாந்தவயித்திய
பூரணம்பாரே. 391

பாரப்பா சத்திதனை மாலையிலேபூசி பதிலான காலையிலே சிவனைப் பூசி, சாரப்பா நடுச்சாலை நடந்துபாரு சதைதயமோ பூரணத்தின் சார்பு தோணும், வாரப்பா பூசையென்றால் வாலைபூசை மந்திரமாயெட்டி ரண்டு மகிழ்ந்து கண்டால், மோப்பா மூலைவழிபாதைகாணும் மேல் மூலைகண்டுமெள்ள விழித்துப்பாரே. 392

விழித்துப்பார்த்திடவே பொரிதான்வீசும் முச்சந்தி கடுவீதி தீபந்தோன்றும், சுழுத்தியிலேபோகாதே ஒருமனமாய்நின்றால் சுத்த மென்றநாதவொலிகாதிர்கேட்கும், இழுத்துமெதன்றுகூடத்தொடர்ந் தாயாறு லெண்ணவொன்றுப் பிறப்பிறப்பு மெய்தும்பாரு அழித்து மனங்கிழித்தேற்றி விழித்துப்பாரு அகாராசிவசத்தியாட்டமாமே.

ஆட்டமென்றால் மணியினிட் ஆட்டே ஆட்டு அதை யறிந்தால் சதாசிவத்தினாட்டங்காணும், பாட்டையிகப் பார்த்ததினா லென்ன னோணும் பாடறிந்த யோகியென்றால் பாலுக்குந்தோணும், கூட்ட மென்றால் வாசியிடகூட்டேகூட்டு, கூட்டிவிட்டுப் பின்னொருத்தார் கூட்டேனப்பா, தீட்டமென்றால் சதா தீட்சைதீட்டேதீட்டே தீட் டறிய நாட்செல்லு மரிதுதானே. 394

அரிதாக இத்தனைநாள் மறைத்தெல்லா மன்புடனே மறைபோ லேபொழிந்தேனிந்நூல் குரிதாகப்பாடிவைத்தே னிந்நூல்தன்னைக் கூறினேன் சகலமுமேவெளியாய்ச்சொன்னேன்-பெரிதாகப் பாரா ட்டுமிந்தநூலைப் பேரின்பமுத்திதனைப்பெறுவாயப்பா-சிரிதாகவெளி யாக்கம்செய்தாயானால் சிவசிவாரவிகோடிநரகமெய்தும். 395

நாகமென்றநாகமதில் விழுதல்நன்றே நன்மையுள்ள சாரிச்சி யம்பெறுதல்நன்றே தெரிவையர்கள் சந்திரடுவிழுதனன்றே சிவஞான முத்திபெற்றுஇருக்கநன்றே-பரிவானவாசிதனிலேறநன்றே பாழான உலகமதிலிருக்கநன்றோ-தெரியாதேபுலத்தியனேயிந்நூலை தேசத் தில் காட்டாதேசதிசெய்வாரே. 396

நூல்கெடாதிருக்க.

சதிசெய்வாரிந்நூலை வெளிவிடாதேசதிராகவுலகத்தோர் கேட் பாருன்னை, விதியாலே நூலதனையீந்துவிட்டால் வினைவனுனைமதி யான் வித்தையாலே-எதிராளியானவனும் உன்னைத்தானு மெவ்வள வுபோடாவோடா வென்பான்குதிப்பாக குருவிந்தப்பாடு பட்டால் குவலயந்தோர்படுபாடு யென்னசொல்வேன். 397

சொல்வானேநான்தாண்ட குருவுமென்பான் சோதனைக்குமாரணத்தைச்செய்துபார்ப்பான் வெல்வானேயெளியோரைவலிமையாலே வீணருக்குநூல்கொடுத்தால்பாபமெய்தும் செல்லாதபணமொருநாள் செல்லாதப்பா சிவாயகுருநாதனென்றால் செல்லவைப்பான்வல்லோருக்கியாதே யோகிக்கீந்தால் வகையானநூலதனை வணங்குவானே.

வணங்குவார்சிவயோகிஞானயோகி மற்றமற்றபேரெல்லாம்தூஷணிப்பார், இணங்குவார்போலிருப்பாரிணங்கார்பின்னே இந்நூல்தான்கிட்டுமட்டு மிணங்கிநிற்பார் பிணங்களுடனுறவுசெய்ய வேண்டாம் சொன்னேன் புலத்தியனேபேரின்பவெளியைச்சொன்னேன், குணங்காமல்வழிகூடி சடுவழியேநாடில் குருவானபார்பா னெல்லைவெளியாமே. 399

வெளியானவெளியதுதான் பரஞ்சோதிரூபம் வேதாந்தரூபமடாசொரூபநந்தம் வழியானவயித்தியபூரணமானந்தம் மகத்தானபூரணத்தினர்த்தங்கண்டு நெளியாமலாதாரக்கடந்துமேலே நெருப்பாறில்மயிர்ப்பாலவழியேசென்று அளியாதபரவெளியால் ஒளியாயோடமருவுவதுஆனந்த பூரணமுமுற்றே. 400

முற்றானபுலத்தியனே புலத்தியமகாரிஷியே முச்சடருமாதியந்தம்நன்றாய்ப்பாரு சித்தானவயித்திய பூரணமீதப்பாதேசத்திற்கிடையாது திறமாய்க்கேளு பத்தானபதிதனிலே வைத்துப்பூசி பதிதானவாசியதுசித்தியாகும் வித்தானவினையறுக்கும் ஞானசித்தி வேதாந்தபூரணத்தில் வெளிசேர்முற்றே. 401

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

## பரிபூரணம்-400

முற்றிற்று.